சுதேச வாசகம்

ஐந்தாம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

SCANNED

ஆரம்பப் பாடசாலை புதிய பாட
நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது

TB
0-, 6(5)
N48
146035

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

சுதேச வாசகம்

ஐந்தாம் புத்தகம்

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாடத் திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
வி. சூ. சுவாமிநாதன்
தொகுத்தது

பதிப்பாளர் :
வி. சூ. சுவாமிநாதன்
மதுரை :: திருநெல்வேலி

பதிப்புரிமை] [விலை அணா 9

Revised Edition—600 Copies (1948)

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

முன்னுரை

1939-ம் வருஷம் வெளியிடப்பட்டுள்ள ஆரம்பப் பாடசாலைப் பாடத்திட்டப்படி இந்தச் *சுதேச வாசகம் ஐந்தாம் புத்தகத்*தையும் வெளியிடலானோம். ஏற்கனவே வெளிவந்துள்ள நான்காம் புத்தகத்தின் தொடர்ச்சியாக உயரிய வசன நடை, புதிய வார்த்தைகள், கடினப்பதங்கள் முதலியவை இப் புத்தகத்திலும் ஓர் ஒழுங்கைப் பின்பற்றியே புகுத்தப்பெற்றிருக்கின்றன. முன் புத்தகங்களில் அறிந்துள்ள வார்த்தைகளுடன், புதிய கடினப்பதங்கள் மாணவர் எளிதில் அறியத் தக்கவாறு இணைக்கப்பட்டிருக்கின்றன. பாடங்கள் யாவும் நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவாறும், அநுபவசாத்தியமாய்ப் போதிக்கத்தக்கவாறும் அமைக்கப்பட்டுள்ளன.

பின்னால் வரும் பாடங்களிலுள்ள பலவகைப் புள்ளிகளும் குறிகளும், மாணவர் அப் பாடங்களிலிருந்தே அறிந்துகொள்வதற்காக, ஆரம்பத்திலேயே விளக்கப்பட்டிருக்கின்றன மற்ற இலக்கண அம்சங்கள், அந்தந்தப் பாடத்தின் இறுதியிலேயே விளக்கப்பெற்று, அவைகளுக் குரிய அப்பியாசங்களும் அங்கங்கேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர விஷயக் கேள்விகளும்; சுருக்கிச் சொல்லல்; சொந்த வாக்கியங்களில் கூறல் முதலிய பல பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள், மாணவர்களின் பதவுச்சரிப்பைச் சீர்திருத்துவதிலும்; எழுதுவதில் ஏற்படும் பிழைகளையும் குறைகளையும் தவிர்ப்பதிலும்; மாணவர்கள் தங்கள் சொந்த அநுபவங்களையும் சிறு கதைகளையும் கூறுவதிலும், எழுதுவதிலும் ஏற்படும் குறைகளை நிவர்த்திப்பதிலும் ஊக்கங் காட்டி உழைக்கவேண்டும். தவிரவும் இப் புத்தகத்தில் வரும் பழமொழிகளையும் மேற்கோள் களையுங் கூறி, மாணவர்களை அவைகட்குச் சந்தர்ப்பங் கூறச் செய்யவேண்டும். பொதுவாக மாணவர்களது பகுத்தறிவை வெளிக்கொணரவும், விஷய அறிவை விருத்திசெய்யவும் அவசியமான கேள்விகளையும், அவர்களது சொந்த அநுபவங்களை நன்குணர்ந்து, இப் புத்தகத்திலுள்ள ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்குமாறு ஆசிரியர்களை வேண்டுகின்றோம்.

'ஐந்து வகுப்புகள் மட்டும் படித்துப் பள்ளியைவிட்டு வெளியேறும் மாணவ மாணவிகள், எப்புத்தகத்தையும் படித்துப் பொருள் அறிந்து கொள்ளல் வேண்டும்' என்ற நோக்கங்கொண்ட இவ்வாசக வரிசை, நம் தமிழ்நாட்டுக்குப் பெரிதும் நன்மை பயக்குமென்றே கருதுகின்றோம். இவ்வாசக வரிசை, வெளிவர உதவிய ஆசிரியர்க்கும், கல்வி அதிகாரிகட்கும் எமது மனமார்ந்த வந்தனம்.

இப் புத்தகத்தில் சில பாடல்களை உபயோகித்துக்கொள்ள அநுமதியளித்த ஸ்ரீ *சி. தேசிக விநாயகம் பிள்ளை*யவர்களுக்கு எமது நன்றி உரித்தாகும்.

பதிப்பாசிரியன்

கடவுள் துதி

(பித்தா பிறைசூடி என்ற தேவாரப் பாடலின் சந்தம்)

எந்தாயருள் இன்பேயருள் இன்றேயருள் இங்கே
வந்தாயருள் வாராயருள் மறைமேவிய தேவே!
சிந்தாமணி நீயேயுயர் தேஜோமயம் நீயே
செந்தாமரை போலும்நின் செம்பொன்பதம் அருளே. 1

உண்மை யறிவின்பம் எனும் உருவேயுள பொருளே!
பெண்மையொடும் ஆண்மைஅலி பேணுதுயர் பொருளே!
வண்மையினி லுலகங்களை வாழ்வித்திடு பொருளே!
தண்மையருள் வெள்ளம்பொழிந் தெங்கள் துதி கொள்ளே. 2

வெண்டாமரை போலும்எங்கள் வெள்ளைமன மலரில்
தண்டாமரை போலும்உன்றன் தாள்கள் உறல் தகுமே
கொண்டாடிய அன்பாளரைக் கூடும் திருவாளா!
பண்டானுற வேநின் புகழ் பாடிப்பணி வோமே. 3

எல்லாவகைத் தொழில்கட்குமோர் இறையென்னவே நின்றாய்
எல்லாவகை வலிமைக்குமோர் இடமென்னவே நின்றாய்
எல்லாவகை உயிர்கட்குமோர் யானென்னவே நின்றாய்
எல்லாவகைக் கலைச்செல்வமும் எங்கட்கருள் எந்தாய். 4

—நா. கனகராஜ ஐயர்

தேச வணக்கம்

(கு ம் மி)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம் ; எங்கும்
உலவு பலநதி மாலேகளாம்
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே ! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்க ளெங்குங்கா ணும் நற்காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னே ! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலே
நேர்வளமும் நகர்சாரும் சிறப்பச்
சீர்வளமும் மிகத்திகழும் இந்தியச்
செல்வி ! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங்கும் வெகுகாலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி ! உனக்கு நமஸ்காரம். 4

—வே. முத்துசாமி ஐயர்

பொருள் அடக்கம்

வரிசை	விஷயம்	பக்கம்
	அப்பியாசம்—1. புள்ளிகளும் குறிகளும்	7
1.	தேசாபிமானம்	9
2.	தேசாபிமானம் (பாட்டு)	13
3.	திலகர்	14
4.	இதுவும் ஒரு நன்மைக்கே	18
5.	ஜீவகாருண்யம்	22
6.	கடிதத்தின் சுற்றுப்பிரயாணம்	25
7.	மோஸஸ்	29
8.	தேனீ வளர்த்தல்	33
9.	சிறுமியர் களிப்பு (பாட்டு)	37
10.	உப்பும் சர்க்கரையும்	38
11	கம்பரும் வம்பரும்	41
12.	பண்டித ஜவஹர்லால் நேரு	45
13.	ஆறு (பாட்டு)	47
14.	அபு பகர்	49
15.	மனுச்சோழன்	52
16.	ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே	55
17.	சாவித்திரி	60
18.	உண்மையின் பெருமை (பாட்டு)	64
19.	இராமகிருஷ்ண பரமஹம்ஸர்	66
20.	இன்மொழியே இனிமை பயக்கும் (பாட்டு)	70
	அப்பியாசம்—2. சட்டை தைத்தல்	71
21.	நட்பின் மேன்மை (நாடகம்)	72
	அப்பியாசம்—3. நிழல் படப்பழக்கம்	82
22.	வாக்குண்டாம் (பாட்டு)	83
23.	நல்வழி (பாட்டு)	86
24.	விவேகசிந்தாமணி (பாட்டு)	88

சுதேச வாசகம்

ஐந்தாம் புத்தகம்

அப்பியாசம் 1

புள்ளிகளும் குறிகளும்

நாம் வாசிக்கும் பாடங்கள் ஒவ்வொன்றிலும் எழுத்துக்கள், வார்த்தைகள் வாக்கியங்கள் முதலியவைகள் தவிர, வேறு சில அடையாளங்களும் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் இருக்கவேண்டிய இடமும் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் விசேஷமான பொருள் உண்டு. இவைகளை இடம் மாறி அமைப்பதால் வாசகத்தின் பொருள் வேறுபடும். சில சமயம் பொருளற்றவைகளாகவும் ஆகும். ஒரு பாடத்திலுள்ள பல விஷயங்களையும் தனித்தனியாய்க் கூறுவதற்காகவே, ஒவ்வொரு பாடத்திலும் பல பகுதிகள் இருக்கின்றன. இப் பகுதிகள் 'பாரா' (Para or Paragraph) என்று கூறப்படும். இவை தற்கால முறையை ஒட்டியவையாகும்.

புள்ளிகள்

(,) இது **கால் புள்ளி** எனப்படும். இப்புள்ளி இருக்குமிடத்தில் ஒரு **மாத்திரை** அளவு அல்லது ஒரு கண் இமை கொட்டும் நேரம் நிறுத்த வேண்டும்.

உதாரணம் :—இராமன் ஊருக்குச் சென்று, புத்தகங்கள், எழுது கருவிகள் முதலியவற்றை வாங்கி வந்தான்.

(;) இது **அரைப்புள்ளி** ஆகும். இப்புள்ளியிட்ட இடங்களில் இரண்டு இமைப்பொழுது நிறுத்த வேண்டும். இந்தப் புள்ளி, ஒரு வாக்கியத்தில் அமைந்துள்ள பொருள் முற்றுப்பெற்ற உப வாக்கியங்களின் இறுதியில் காணப்படும்.

உதாரணம் :—(1) நீ பெரும் பொய்யன் ; பேராசைக்காரன். (2) சிங்களத் தீவினுக்கோர் பால மமைப்போம் ; சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்;.....

(:) இதுதான் **முக்கால் புள்ளி**. இந்தப் புள்ளியிட்ட இடத்தில் மூன்று மாத்திரை நேரம் நிறுத்தி வாசிக்க வேண்டும். ஒரு பகுதியில் ஒரு குறிப்பிட்ட பொருளையோ விஷயத்தையோ எடுத்துச் சொல்லும்போது, அவ்விஷயத்தைக் குறிக்கும் தனிப்பட்ட சிறு வாக்கியங்களின் இறுதியில் இப்புள்ளி காணப்படும்.

உதாரணம் :—கடவுள் சர்வ வல்லமை யுள்ளவர் : அவர் சர்வ வியாபி : அவர் திரிகாலமும் அறிந்தவர்.

(.) இது **முற்றுப்புள்ளி** ஆகும். ஒவ்வொரு வாக்கியத்தின் இறுதியிலும் இது காணப்படும். இப்புள்ளியிட்ட இடத்தில் நான்கு மாத்திரை அளவு நிறுத்தவேண்டும்.

உதாரணம் :—பறவைகள் பறக்கின்றன. இறக்கைகள் பறப்பதற்கு உபயோகமாகும் கருவிகளாம்.

குறிகள்

(?) இது **வினுக்குறி** அல்லது கேள்வி அடையாளம் ஆகும். இது ஒவ்வொரு கேள்வியின் இறுதியிலும் தோன்றும்.

உதாரணம் :—இராமன் வந்தானு ?

(!) இது **ஆச்சரியக்குறி** என்றும் **விளிக்குறி** என்றும் கூறப்படும். பயம் அல்லது ஆச்சரியத்தைக் குறிக்கும் வார்த்தை அல்லது வாக்கியத்தின் இறுதியிலாயினும், ஒருவரை அழைக்கும் அல்லது விளிக்கும் வார்த்தைகளின் இறுதியிலாயினும் இக்குறி காணப்படும்.

உதாரணம் :—(1) ஆ! பாம்பு. (2) ஐயோ ! புலி வருகிறது. (3) இங்குத் தோன்றி மறைந்தோர் என்னை ஆட்கொண்டவரே ! (4) பிள்ளைகளே ! கவனியுங்கள்.

(" ") இவ்வடையாளம் **மேற்கோள் குறி** எனப்படும். ஒருவர் எந்த வாக்கியங்களை எந்த விதமாய்க் கூறினுரோ, அந்த வாக்கியங்களை அப்படியே உபயோகித்திருக்கிறது என்பதைக் குறிக்கும் இடங்களில், ஆரம்பத்திலும் முடிவிலும் இவ்வடையாளங்கள் உபயோகிக்கப்படும்.

உதாரணம் :—வனதேவதை அவன் முன் தோன்றி, "நீ சுகமாய் வாழ்வாயாக" என்று கூறியது.

(' ') இவ்வடையாளமும் **மேற்கோள் குறி**தான். ஆனுல் இது பழமொழியையும், அந்நிய பாஷை வார்த்தைகளையும் குறிக்கும் இடங்களில், அவைகளின் ஆரம்பத்திலும் முடிவிலும் உபயோகிக்கப்படும்.

உதாரணம் :—'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று பெரியோர் கூறியிருக்கின்றனர்.

நாம் ஆகாரத்தில் சேர்க்கின்ற உப்பு, 'சோடியம் குளோரைட்' எனப்படும்.

1. தேசாபிமானம்

ஆவி	வராது	க்ஷேமம்	மலைவாசி	சிரச்சேதம்	பணித்தான்
யான்	திறனை	தளையை	படியிட்டு	வியந்தான்	ததும்பியது
படகு	துணிவு	பலசாலி	வில்லாளி	இடையூறு	கவிழும்படி
தீங்கு	புரிந்து	ஆப்பிள்	அதுகாலை	மிதமிஞ்சிய	கொய்யவே
கைதி	மானம்	குமாரன்	உடன்பட	அவமானம்	தன்னுள்ளே
புயல்	தறித்து	பிணித்து	துடைத்து	எத்தகைய	ராஜத்துரோகி
இணை	சினந்து	தோளும்	மடிந்தனர்	துன்புறுத்தி	மந்தைவெளி
நாட்டி	கட்டளை	அப்பால்	நவின்றான்	மறுத்தவன்	கொடுங்கோல்
குன்று	தொப்பி	பந்தயம்	முழங்கால்	வாதாடுகிறாய்	தேசாபிமானம்
	கொல்லுமாயின்		நிறைவேற்றுமாறு		ஆழ்த்திவிடுகிறேன்

‘இது நம் தேசம்; இது நம் நாடு’ எனத் தன்னுள்ளே உணர்ந்து தன் தேசத்துக்காகவும், தாய் நாட்டுக்காகவும் உடல், பொருள், ஆவி இம் மூன்றையும் தியாகம் செய்ய முன்வரும் தன்மையே **தேசாபிமானம்** எனப்படும். தேசாபிமானி ஒருவன் தனது தேச முன்னேற்றத்துக்காகவும், தாய் நாட்டின் நலத்துக்காகவும் எத்தகைய தியாகமும் செய்யத் துணிவு கொண்டவனாவான். இவ்விதத் தியாகம் செய்தவர்களும், தாய் நாட்டிற்காகவே ஓயாது உழைத்தவர்களும் பல நாட்டிலும் இருந்திருக்கின்றனர். நமது தேசத்திலும் பல தேசாபிமானிகள் தோன்றியிருக்கின்றனர்.

ஐரோப்பா கண்டத்திலே மலைகள் நிரம்பிய **சுவிட்சர்லாந்து** என்னும் நாட்டில் **வில்லியம் தெல்** என்னும் மலைவாசி இருந்தான். அவன் மிகவும் பலசாலி; பரந்த தோளும், இரும்பைப் போன்ற வலிமையுடன் உடலும் படைத்தவன். அவன் சிறு வயதிலிருந்து தன் நாட்டுக்கு நன்மை புரிவதையே கடமையாகக் கொண்டவன். அவன் தன் குடும்பத்துடன் மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தான். அம்பெய்வதில் அவனுக்கிணை அக்காலத்தில் எவருமிலர்.

அந்நாளில் ஆஸ்திரியா தேசத்துச் சக்கரவர்த்தி சுவிட்சர்லாந்தைத் தன் வசமாக்கி அதை ஆளுவதற்கு ஒரு தலைவனை ஏற்படுத்தியிருந்தார். **ஜஸ்லர்** என்னும் அத்தலைவன் கொடுங்கோல் ஆட்சியே புரிந்து வந்தான். அந்நாட்டு மக்களைப் பலவிதத்தும் துன்புறுத்தி வந்தான். சுவிட்சர்லாந்தின் தலைநகரின் மந்தைவெளியில் ஒரு கம்பத்தை நாட்டி, அக் கம்பத்தில் தன் தொப்பியை மாட்டி, அதற்கு அவ்வழிச் செல்வோர் யாவரும் முழங்காற் படியிட்டு மரியாதை செய்யவேண்டுமென்று விளம்பரப்படுத்தினான். அத்தொப்பிக்கு மரியாதை செய்யாதவரைக் கடுமையாய்த் தண்டிக்கலானான். சிலருக்கு மரண தண்டனையும்

விதித்தான். தொப்பிக்கு மரியாதை செய்ய அந்நாட்டார் சிறிதும் உடன்பட வில்லை. "கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டிற் கடும்புலி வாழுங் காடு நன்றே" என்பதற்கிணங்க, பலர் மலைக்காடுகளில் சென்று ஒளிந்து கொண்டனர். சிலர் அந்நகரிலிருந்தும், அம்மந்தை வழி வாராதொழிந்தனர். வேறு சிலர் அக் கொடுங்கோலனது கொடுமைக்கு அஞ்சி வேண்டா வெறுப்பாய் மரியாதை செய்தனர்.

ஒருநாள் தெல், தன் வில் அம்பு முதலியவைகளுடன் அம்மந்தை வழிச் சென்றான். ஆனால் அவன் அத்தொப்பிக்கு மரியாதை செய்யவில்லை. அதனால் ஜஸ்லருடைய ஆட்கள் அவனைப் பிணித்து, தமது தலைவன் முன் நிறுத்தி விஷயத்தைக் கூறினர். அப்போது ஜஸ்லர் தெல்லை நோக்கி "அடே; நமது தொப்பிக்கு மரியாதை செய்ய மறுத்தவன் நீதானா?" என்று வினவினான். அதற்குத் தெல், "உயிரற்ற தொப்பிக்கு மரியாதை செய்வது எனது வழக்கமில்லை" எனத் தலைநிமிர்ந்து கூறினான். அது கேட்ட ஜஸ்லர் கோபங்கொண்டு, "அடே! நீ செய்தது பெருந்தவறு. தவறு செய்ததுமல்லாமல் என்னையும் எதிர்த்து வாதாடுகிறாய். இதற்கு மரணதண்டனையே விதிக்கவேண்டும். ஆயினும் நீ ஒரு வீரனாதலின், யான் ஏற்படுத்தும் ஒரு பந்தயத்தில் ஜயித்தால் உன்னை நான் விடுதலை செய்வேன். இல்லையேல் மரண தண்டனையையே உறுதிப்படுத்துவேன்" என்றான். "என்ன செய்யவேண்டும்?" என்று வினவினன் தெல்.

அச்சமயம், "அப்பா! அப்பா!" என்று கத்திக்கொண்டு தெல்லின் குமாரன் அங்கு வந்து தெல்லைக் கட்டிக்கொண்டான். அது கண்ட ஜஸ்லர் தெல்லை நோக்கி, "அடே! ராஜத்துரோகி! நீ சிறந்த வில்லாளி யென்று உன்னைப் போற்றுகின்றார்களே! இதோ நிற்கும் உன் மகன் தலைமீது ஒரு ஆப்பிள் பழத்தை வைப்பேன். அப்பழத்தை உன் அம்பினால் குறி தவறாமல் அடிப்பாயானால் உன்னை விடுவிப்பேன். இல்லையேல் நீ சிரச்சேதம் செய்யப்படுவாய்" என நவின்றான். அவ்வாறே தெல்லின் புதல்வனைச் சிறிது தூரத்தில் நிறுத்தி, அவன் தலைமீது ஒரு ஆப்பிள் பழத்தை வைத்து, தெல்லின் கையில் அவனது வில்லையும் அம்பையும் கொடுத்து, தன் கட்டளையை நிறைவேற்றுமாறு பணித்தான்.

தன்னையும் தன் மகனையும், தன் தேசத்தின் மானத்தையும் காத்துக் கொள்ள வேறு வழியில்லாதது கண்ட தெல், வில்லையும் இரண்டு அம்புகளையும் கையில் எடுத்தான். அவன் கண்களில் நீர் ததும்பியது. அதைத் துடைத்துக் கொண்டு, வில்லில் ஓர் அம்பைப் பூட்டிக் குறிபார்த்தான். ஆண்டவனைத் துதித்து, தைரியத்தைக் கைவிடாது அப்பழத்தைக் குறித்து அம்பெய்தான். அவ்வம்பும் நேராகப் பாய்ந்து சென்று, சிறுவனுக்கு யாதொரு இடையூறும் செய்யாது பழத்தை மாத்திரம் பிளந்து சென்றது. கண்டோர் யாவரும் மித

மிஞ்சிய சந்தோஷத்தால் ஆரவாரித்தனர். ஜஸ்லரும் அவனது அம்பெய்யும் திறனைக் கண்டு வியந்தான்.

எனினும் தெல் இப்பந்தயத்தில் ஜயித்ததால், தனக்கு அவமானம் ஏற்பட்டதாய்க் கருதிய ஜஸ்லர் கோபத்துடன் தெல்லை நோக்கி, "இரண்டாவது அம்பு எதற்காக எடுத்துக்கொண்டாய்?" என்று கேட்டான். அதற்குத் தெல், "முதல் அம்பு குறிதவறி என் மகனைக் கொல்லுமாயின், உடனே உன் தலையைக் கொய்யவே இரண்டாவது அம்பையும் எடுத்து வைத்தேன்" என்று கூறிச் சிரித்தான். இது கேட்ட ஜஸ்லர் மேலும் சினந்து தெல்லைச் சிறைப்படுத்தும்படி கட்டளையிட்டான். அவ்வாறே வீரர்கள் தெல்லைப் பிடித்துக் கட்டி, அருகிலிருந்த ஊரி என்ற ஏரியின் கரையில் காத்திருந்த ஒரு படகில் ஏற்றினர்.

தெல்லைக் கொண்டு போகவேண்டிய சிறைச்சாலை, அந்த ஏரிக்கு அப்பால் ஒரு குன்றின்மேல் கோட்டைபோல் கட்டப்பட்டிருந்தது. அக் கோட்டைக்குள் சிறைப்பட்டவர் என்றும் திரும்பார். தெல்லைக் கொண்டு சென்ற அத்தோணியில் ஜஸ்லரும் ஏறிக்கொண்டான். படகு சிறைச்சாலையை நோக்கிப் புறப்பட்டது. நடு ஏரிக்குச் சென்றதும், பெரும் புயலடிக்க ஆரம்பித்தது. படகோட்டிச் சென்ற வீரர்களுக்கு அப்பிரதேசம் நன்கு தெரியாமையால், 'படகை எத்திசையில்

செலுத்துவது' என்று அறியாது விழித்தனர். அதுகாலே ஜஸ்லர், "வீரர்களே! அந்தச் சிறைப்பட்ட துரோகியின் தலையைத் தறித்து விடுங்கள். அக்கைதி நம்மை எளிதில் கரைசேர்ப்பான்" என்று கூறினான். அங்ஙனமே தெல்லின் தலை தறிக்கப் பட்டது.

இங்ஙனம் சுதந்திரமடைந்த தெல், "இக்கொடுங்கோலனால் நம் நாட்டுக்குப் பெருந் தீங்கு விளைந்து விட்டது. இவன் நம் நாட்டுக்குச் செய்த கொடுமைகள் எல்லாம் இன்றோடு தொலையட்டும். பாறைகள் நிறைந்த கரையருகில் இப்படகைக் கொண்டுபோய், நான் மாத்திரம் கரையில் தாவி இறங்கிக் கொண்டு, இவர்களை ஏரியில் ஆழ்த்திவிடுகிறேன். அப்போதுதான் நமது நாடும் க்ஷேமம் அடையும்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். உடனே, படகைக் கரையைநோக்கி வேகமாகச் செலுத்தினான். படகு கரையருகில் சென்றதும், தெல் தான்மாத்திரம் கரையில் தாவிக் குதித்து, படகு பாறையில் மோதிக் கவிழும்படி செய்தான். ஜஸ்லரும் அவனுடைய வீரர்களும் மடிந்தனர். அவர்களுடன் அவர்களது கொடுமைகளும் ஒழிந்தன. சுவிட்சர்லாந்தும் ஜஸ்லரது கொடுங்கோலாட்சியிலிருந்து தப்பியது. என்னே, தெல்லின் தேசாபிமானம்! இவ்வாறு தேசத்திற்கே பெரியதோர் உபகாரம் செய்த தெல் எல்லோராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டு, நெடுநாள் சுகமே வாழ்ந்திருந்தான். சுவிட்சர்லாந்து நாட்டினர் அவனது கதையையும், புகழையும் இன்றும் பாடல்களாகப் பாடி வருகின்றனர்.

பயிற்சியும் கேள்வியும்

I பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களிலமை :—உணர், எத்தகைய, பரந்த, இணை, புரி, பிணி.

II எதிர்ப்பதம் கூறக்கூடிய ஐந்து வார்த்தைகளை எழுது.

III (1) தெல் என்ற தேசாபிமானிக்குக் கொடுக்கப்பட்ட பரிசை யாது?

(2) சுவிட்சர்லாந்து தெல் காலத்தில் எப்படி சுயராஜ்யம் அடைந்தது?

IV தெல் என்னும் தேசாபிமானி நீயானால் உன் கதையை எடுத்துச் சொல்.

V கொடியவர்களுக்குக் கொடிய மரணம் நேரும் என்பதற்கு உதாரணங் கொடு.

இலக்கணம்

வினா எழுத்து :—சில எழுத்துக்கள் வினாக்களைக் குறிக்கும். அவையாவன :—

(1) **எ, ஏ, யா** இவை **முதல் வினா.**

எவன் வந்தான்?	**எ**ன்று வந்தான்?
ஏது செய்தான்?	**யா**து செய்தான்?

(2) **ஆ, ஏ, ஓ,** என்ற எழுத்துக்கள் **ஈற்று வினா.**

கந்த**னா** படித்தான்?	கந்தன் படித்தா**னா**?
அவ**னே** வந்தான்?	அவன் வந்தா**னே**?
நீ**யோ** வருவாய்?	நீ வருவா**யோ**?

2. தேசாபிமானம்

(பாட்டு)

“ஈதென் சொந்த ஊர் ; ஈதென் பிறப்பிடம்”
எனத்தன் னுள்ளே எப்போ தாயினும்
உன்னுதற் கொண்ணுத் தன் உணர் வில்லா
ஒருவ னேனும் உயிருடன் உளனே ?
அந்நிய நாட்டில் அலைந்து பின் தன்னூர்
நோக்கிக் காலடி போக்கிய காலையில்
உள்ளம் குளிரா ஒருவனும் உளனே ?
இத்தகை யொருவன் இருப்பனே ஆயின்,
சென்று ‘அவன் யாவன் ?’ என்று நன்(கு) அறிதி.
உயரிய பட்டம் உடையோ னுயினும்,
பெயரால் அவன்மிகப் பெரியவ னுயினும்,
ஆசையே விரும்பும் அளவிலா நிதியம்
படைத்தவ னுயினும், பரவசத் துடன்எப்
பாணரும் அவன்புகழ் பாடுதல் ஒழிவர் ;
தன்னையே யாவுமா உன்னும்இப் புன்மையோன்
இடம்பொருள் ஏவல் இவை இருந்தும், தான்
இருக்கையி லேகல் இசையெலாம் இழப்பன்.
இவ்வா(று) இருமுறை இறந்திப் பதடி
புலம்புவா ரற்றும் பூஜ்யதை யற்றும்
பாடல் பெறுதும் பண்டுதான் தோன்றிய
இழியபுன் புழுதிக்(கு) இழிந்துசெல் குவனே.

—ம. கோபாலகிருஷ்ணையர்

3. திலகர்

சதா	முனைந்த	பிரயாசை	நிரூபித்தார்	பண்டகசாலை
பற்று	வன்மை	தீவிரமாய்	சந்தித்தனர்	உபந்நியாசம்
கணித	பிராமண	திலகமாய்	பண்டிதரும்	உரையாடினர்
பூர்விக	பெரியார்	ஆற்றலும்	சுயராஜ்யம்	ஞாபகார்த்தம்
சேவை	மகசர்கள்	கல்விமான்	நிகழ்த்தினர்	சாட்டப்பெற்று
உரிமை	பயந்தது	செவ்வனே	பிறப்புரிமை	பலாத்காரத்தில்
அந்தோ	சாதிக்கும்	தாமாகவே	வியாசங்கள்	கொழுந்துவிட்டு
ஆற்றும்	பாமரரும்	பொதுஜன	அவதரித்தார்	பால்யத்திலேயே
பிரசாரம்	மகாசபை	காலமானர்	சாத்திரங்கள்	மேற்பார்வையாளர்

ஸ்தாபிக்கப்பட்டது

ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்காகவும், அத்தேச மக்களின் நலத்துக்காகவும் அரும்பாடுபட்டு உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்ய முன் வருபவர்களே தேசாபிமானிகள் ஆவர். ஒவ்வொரு தேசத்திலும் பல தேசாபிமானிகளும் தேசத் தலைவர்களும் தோன்றுவதுண்டு. நம் இந்தியா தேசத்தின் நலத்திற்காகவே அரிய தியாகங்கள் பல செய்த தேசத் தலைவர்களுள் திலகர் ஒருவர் ஆவார்.

இவரது முழுப் பெயர் பால கங்காதர திலகர் என்பதாம். இவர் மகாராஷ்டிரப் பிராமண வகுப்பிற் பிறந்தவர். இவர் பம்பாய் மாகாணத்திலுள்ள இரத்தினகிரி என்ற ஊரில் வசித்து வந்தார். இவரது தந்தையார் பெயர் இராமச்சந்திர திலகர். அவர் கல்வி இலாகாவில் மேற்பார்வையாளர் உத்தியோகம் வகித்து வந்தார். நம் திலகர் 1856-ம் வருஷம் ஜூலை மாதம் 23-ம் தேதியில் அவரது புதல்வராய் அவதரித்தார். பால்யத்திலேயே திலகர் கல்வியில் ஊக்கமும் கவனமும் செலுத்தி வந்தார். மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிய பின், புனவிலுள்ள டெக்கான் காலேஜில் சேர்ந்தார். 1876-ம் வருஷம் பி. ஏ. பரீக்ஷையிலும் தேறினர். பின்பு சட்டப் பரீக்ஷைக்குப் படித்து அதிலும் வெற்றி பெற்றார். இவரது பதினேழாவது வயதில் இவருடைய தந்தையார் காலமானர்.

திலகருக்கு இளமைப் பருவத்திலேயே தம் நாட்டின் மேலும் தம் நாட்டு மக்கள் மேலும் அளவற்ற அன்பு உண்டாயிற்று. அது நாளடைவில் இவர் மனத்திற் கொழுந்து விட்டு வளரலாயிற்று. நம் தேச பாஷைகளை விருத்தி செய்ய

வேண்டுமென்றும் அவைகளிலுள்ள பூர்விக பாஷைகளை விருத்தி செய்ய வேண்டுமென்றும் அவைகளிலுள்ள பூர்விக ஏடுகளை பார்வையிட வேண்டுமென்றும் இவருக்கு அளவிலா ஆவல் தோன்றியது. தாமாகவே சம்ஸ்கிருத பாஷையைக் கற்று, அதிலுள்ள கணித சாத்திரங்கள், சோதிட சாத்திரங்கள் முதலியவற்றை ஆராய்ந்து, அவைகளிலுள்ள அரிய பெரிய உண்மைகளை நமக்கு வெளியிட்டார். திலகர் உத்தியோகப் பற்று அற்றவராயிருந்தார். ஆனால் நமது நாட்டில் கல்வியை அபிவிருத்தி செய்ய, அளவு மிக்க ஊக்கங் காட்டி உழைத்து வந்தார்.

'வருந்தினல் வராத தொன்றில்லை' என்பதற்கும், 'முயற்சி திருவினை யாக்கும்' என்பதற்கு மிணங்க, திலகர் பெருமானது அரும் பிரயாசையினலும், இவருடைய நண்பர்களிற் சிலரது உதவியினலும், புனு நகரில் ஓர் ஆங்கிலக் கலாசாலை ஸ்தாபிக்கப் பட்டது. சிறந்த கல்விமான்களுடன், போற்றத் தகுந்த முறையில் அக்கலாசாலையைத் திலகர் செவ்வனே நடத்தி வந்தார். நகரம், நாடு, கல்வி இவைகளை முன்னேறச் செய்யும் நோக்கங் கொண்ட சங்கங்களிலும், சபைகளிலும் இவர் கலந்து உழைத்து அவைகளில் முதன்மை பெற்று விளங்கினர்.

இவர் பல சமயங்களில் மக்களது கஷ்ட நஷ்டங்களைக் காணப் பெருதவராய் மன முருகி, அவைகளை எளிதில் நீக்கத் தகுந்த முறைகளைத் தேடுவார். ஒரு சமயம் புனு நகரிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் பெரியதோர் பஞ்சம் ஏற்பட்டது. நிலங்களில் சரியான விளைவு இல்லாமல், ஜனங்கள் ஆகார பதார்த்தங்களுக்காகத் தவித்தனர். அப்போது நம் திலகர், சர்க்காருக்கு அநேக மகசர்கள் தயார் செய்து அனுப்பியும், தாமே நேரில் போய்ப் பார்த்தும் ஒரு பண்டகசாலை ஏற்படுத்தியும் அப் பஞ்சத்தின் கொடுமையினின்று ஒருவாறு ஜனங்களைக் காப்பாற்றினர். 'கடலில் மூழ்குப

வனுக்குக் கட்டை ஒன்று கிடைத்தது' போல, பஞ்சத்தால் தவித்த குடி மக்களுக்கு இவரது உதவி நன்மை பயத்தது. திலகரைப் போன்ற ஒரு பொதுஜன ஊழியர் கிடைத்ததுபற்றி, பம்பாய் மாகாண வாசிகள் பெரிதும் களிப்படைந்தனர்.

நாளடைவில் திலகரின் செல்வாக்குப் பெருகியது. இவரும் தேசசேவை யில் ஈடுபடலானார். காங்கிரஸ் மகாசபையின் ஆரம்பத்தில் அதில் சேர்ந்து உழைக் கலானார். தமது நோக்கத்தையும், கொள்கையையும் வெளியிடும் பொருட்டு, **மராட்டா, கேசரி** என்னும் இரு பத்திரிகைகளை நடத்த ஆரம்பித்தார். அவை களை அச்சிட வேண்டி, ஓர் அச்சுக் கூடத்தையும் ஏற்படுத்தினார். அப் பத்திரிகை களின் மூலம் இந்தியாவின் பூர்விக நிலைமை, தற்கால ஸ்திதி, எதிர் காலத்தில் இந்தியர் நடந்துகொள்ள வேண்டிய விதம், அரசாங்கம் செய்ய வேண்டிய சீர் திருத்தம் முதலியவைகளைப் பற்றி பல அரிய வியாசங்கள் எழுதி வெளியிடலானார். அவைகளில் மராட்டா என்ற பத்திரிகை, இந்தியாவின் சகல பாகங்களுக்கும் சென்று, இந்திய மக்களைத் தட்டி எழுப்பியது.

"சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை நான் அடைவேன்" என்பது தான் இவரது கொள்கை. இவர் அநேக இடங்களில் இந்தியாவின் உரிமையையும் பெருமையையும் பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பண்டிதரும், பாமர ரும் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் உபந்நியாசம் செய்யும் தன்மை வாய்ந் தவர் திலகர். இவ்வாறு பிரசங்கித்து வருங்கால், இவர் ராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பெற்று, சிறையில் அடைக்கப்பட்டார். இவர் சிறையில் இருந்த காலத் தில், **பகவத் கீதை**யை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, அதன் மூலம் இந்தியா வின் பெருமையை உலகோர் அறியச் செய்தார். இவ்விதம் சிறையிலிருந்த போதும் தேசத் தொண்டு செய்வதில் முனைந்த திலகர், சில காலம் சென்று விடுதலை யடைந்தார்.

பின்னர் இவர் **இங்கிலாந்து** சென்று, அங்குத் தம் தாய் நாட்டின் பெரு மையை எடுத்துக் கூறலானார். அரிய பெரிய உபந்நியாசங்கள் பல செய்து, மிக வும் நாகரிகம் வாய்ந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று தான் என்று நிரூபித்தார். இவரது பிரசங்க வன்மையையும், சொற்பொழிவு ஆற்றும் அழகையும் கண்ட அந்நாட்டு மக்கள், இவரை மற்றும் சில பிரசங்கங்கள் செய்ய வேண்டினர். இவரும் அவ்வாறே, 'சுயராஜ்யம் இந்திய மக்களின் பிறப்புரிமை' என்பதைப் பற்றி ஆங்கிலேயருக்கு நன்கு விளக்கினார். பல ஆங்கிலேயர் இவரை ஒரு மகான் எனக் கொண்டாடினர். பின்னர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து, நாடெங்கும் சுற்றி, நம்நாட்டு மக்களுக்கு அரிய பிரசங்கங்கள் பல செய்யலானார். அந்நிய நாடுகளில் தாம் கண்ட சீர்திருத்தங்களையும், நற்பழக்கங்களையும் இந்தியருக்கு எடுத்துக் கூறி, நமது கடமையைச் செய்யும்படி தூண்டினார்.

திலகர் இந்தியா வெங்கும் புகழ்ந்து கொண்டாடப்பெற்ற பெரிய தேசத் தலைவராய் விளங்கினர். சுதேச சாமான்களையே வாங்கவேண்டும் என்று தீவிரமாய் பிரசாரம் செய்து வந்தார். அதன் பயனாக **சுதேச இயக்கம்** ஆரம்பமாயிற்று. திலகர் பலாத்காரத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அக்காலத்தில், 'அன்பினால் ஆகாத தொன்றில்லை,' 'அஹிம்சையே மேலான தர்மம்' என்னும் கொள்கைகளைச் செய்கையில் நடத்திக் காட்டிய **காந்திப் பெரியார்** இவரைச் சந்தித்தனர். இருவரும் கலந்து உரையாடினர். அதன் பின் திலகர் அஹிம்சா தர்மத்தில் நம்பிக்கை வைத்து, காந்திப் பெரியாருடன் ஒத்து உழைக்கலாயினர். ஆனால் அந்தோ! இவர்கள் இருவரும் ஒத்து உழைத்து அரிய காரியம் எதுவும் சாதிக்கும் முன்னரே, 1920-ம் வருஷம் ஜூலை மாதத்தில் திலகர் மரணமடைந்தார். இவர் ஞாபகார்த்தமாக, இவருடைய நண்பர்களால் 'திலகர் நிதி' திரட்டப்பட்டு, கல்வி அபிவிருத்திக்காகவே செலவழிக்கப்பட்டது.

நாட்டுக்கும் நாட்டினருக்கும் சதா நன்மை செய்ய வேண்டுமென்பதே இவர் நோக்கம். இவரின் விடா முயற்சியும், தேச பக்தியும் இவரை இந்தியர் என்றும் மறவாதிருக்கும்படி செய்துவிட்டது. இவரது அறிவும் ஆற்றலும் இன்றும் கொண்டாடப் படுகிறது. **திலகர் நம்நாட்டுக்கே ஒரு திலகமாய் விளங்கியவர்.**

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—பாடு, ஸ்தாபி, சேவை, மூளை, ஆற்றல்.

II எதிர்ப்பதம் கூறு :—பூர்விகம், பலாத்காரம், பாமரர், பிறப்பு, பொது.

III திலகர் பெருமானின் இளம் பருவத்தை 10 வரியில் எழுது.

IV (1) திலகர் தம் மாகாணத்திற்குச் செய்த நன்மைகள் என்னென்ன என்பதைக் குறிக்க.
(2) கல்லில் செதுக்கத் தகுந்த இசை பொருந்திய திலகரது சில வாக்கியங்களை எழுது.

V பாடத்தில் கண்டிருக்கும் பழமொழிகளை வரிசையாய் எழுதிப் பொருள் கூறு.

இலக்கணம்

VI (1) செயப்படு பொருள் வரும்படி ஐந்து வாக்கியங்கள் எழுது. (2) செயப்படு பொருளை முதலில் வைத்து அவ்வாக்கியங்களை மாற்றி எழுது.

4. இதுவும் ஒரு நன்மைக்கே

சீவ	பூசாரி	வரலாறு	அளவிலா	தொடர்ந்து	தணியவில்லை
கனி	ஏவலர்	கானகம்	அமைச்சர்	ஓடோடியும்	கொற்றவனும்
பலி	குடிகள்	தருவாய்	புகன்றான்	சுண்டுவிரல்	துடிதுடித்தான்
ஏற்ப	எனவே	வேந்தன்	கள்வர்கள்	வருங்காலம்	ஆணையிட்டான்
கூரிய	சேவகர்	தொல்லை	வைத்தியர்	குலதேவதை	ஆக்ஞாபித்தான்
நரபலி	நிகழ்ச்சி	சோதனை	பகர்ந்தான்	விளைக்கின்றன	துணித்துவிட்டது

கண்ணயர்ந்தான்

மகத தேசத்தை **மகிபாலன்** என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய பிரதான மந்திரியின் பெயர் **மதியூகி**. அரசாங்க விஷயங்களிலெல்லாம் மகிபாலன் மதியூகியின் சொற்படியே நடந்து வந்தான். மதியூகியும் தன் பெயருக்கேற்ப, வருங்கால மறிந்து மன்னனுக்குத் தக்க யோசனைகள் கூறி வந்தான். ஆனால் மதியூகி, அரசனுக்குத் துன்பம் வந்த சமயத்திலும் **இதுவும் ஒரு நன்மைக்கே** யென்று கூறுவது வழக்கமாயிருந்தது.

ஒரு நாள் சில குடிகள் அரசனது அவைக்கு வந்து, "அரசே! காட்டு மிருகங்கள் நாட்டுக்குள் நுழைந்து பெருந் தொல்லை விளைக்கின்றன. அவைகளை வேட்டையாடிக் கொன்று, எங்கள் தொல்லைகளை யொழிக்க வேண்டும்" என்று கூறி முறையிட்டனர். எனவே அரசன் அம்மிருகங்களை வேட்டையாடிக் கொல்வதற்காக, மறுதினம் வேட்டைக்குப் புறப்படத் தீர்மானித்தான். வேட்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைக்கும்படி மதியூகிக்கு ஆக்ஞாபித்தான். அச்சமயம் வேந்தனைக் காணவந்த பெரியார் ஒருவர், ஓர் அரிய மாங்கனியை மன்னனுக்குக் கொடுத்துச் சென்றனர். அக்கனியை அக்கணமே உண்ண ஆவல் கொண்ட அரசன், ஒரு கூரிய கத்தியால் அதனைச் சீவ ஆரம்பித்தான். பழத்தை அரசன் சீவும்பொழுது, கத்தி அரசனது இடதுகைச் சுண்டுவிரலைத் துணித்து விட்டது. அரசனும் "ஐயோ, ஐயோ" என்று அலறித் துடித்தான். அவனது அலறலைக் கேட்ட அரண்மனை வைத்தியர் ஓடோடியும் வந்து, விரலில் மருந்து வைத்துக் கட்டினர். அரசனது நோய் சிறிது குறைவுற்றது.

வெளியே சென்றிருந்த மதியூகியும், நிகழ்ந்ததைக் கேள்வியுற்று அரசனைக் காண விரைந்து வந்தான். அவனைக் கண்டதும் அரசன் நடந்தவற்றைக் கூறி

னன். மதியூகியும் சிறிதேனும் வருத்தம் காண்பிக்காது, "வேந்தே! இதுவும் ஒரு நன்மைக்கே" என வழக்கம்போல் பகர்ந்தான். இது கேட்ட அரசன், "அமைச்சரே! விரலிழந்து யான் தவிக்கையில், 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று துணிந்து கூறுகிறீர். விரலிழந்தது நன்மையோ, தீமையோ? வருங்கால மறிந்து கூறும் மதியூகியோ இவ்வாறு கூறுவது?" என்று சினந்து கூறினன். மதியூகியும் சிறிதும் மனந்தளராது, "அரசே! நமது வாழ்நாளில் நிகழும் நிகழ்ச்சிகள் யாவும் நமது நன்மைக்கே என்பது திண்ணம்" என மொழிந்தனன்.

கொற்றவனும் கடுங்கோபங் கொண்டு, "அமைச்சரே! உமது கொள்கை யதுவானல், உம்மைச் சிறையில் அடைக்க உத்திரவிடுகிறேன்" என்று கூறி, ஏவலரை அழைத்து, மந்திரியைச் சிறையிலிடுமாறு கட்டளையிட்டான். காவலாளர் மதியூகியைச் சிறைக்கு அழைத்துச் செல்லும்போது அவன் 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று கூறிக்கொண்டே சென்றனன்.

மதியூகியின்றி மன்னன் எப்பொழுதும் வெளியிற் புறப்படுவதேயில்லை. அதுவும் வேட்டைக்கு ஒருபோதும் மந்திரியில்லாமல் சென்றதில்லை. அதனால் மன்னன், மந்திரியில்லாமல் வேட்டைக்குப் போகலாமா, வேண்டாமா, என ஆலோசித்தான். மந்திரியின்மேல் அரசனுக்கிருந்த சினம் தணியவில்லையாதலால், மந்திரியின்றியே தன் வீரர்களுடன் வேட்டைக்குச் சென்றான். மன்னனது குதிரையைத் தொடர்ந்து செல்லும் வேகமுடையது மந்திரியின் குதிரை ஒன்றே. காட்டில் வேட்டையாடுங்கால், அரசன் தன் வீரர்களை விட்டுத் தனியே பிரிய நேர்ந்தது. இதற்கு முன் வேட்டையாடும் போதெல்லாம் மதியூகியும் அரசனை விட்டுப் பிரியாமல் தொடர்ந்து செல்வான். ஆனால் இப்பொழுதோ, அரசன் காட்டில் வழி தெரியாது குதிரையுடன் அலைந்து திரிந்து மிகவும் களைத்துப்போய், குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு, அம் மர நிழலில் படுத்துக் கண்ணயர்ந்தான்.

மாலையாயிற்று; சூரியனும் மலைவாயில் விழும் தறுவாயிலிருந்தான். அக் காட்டில் சில கள்வர்கள் ஒன்று சேர்ந்து வசித்து வந்தனர். அவர்கள் வருடம் ஒருமுறை, மனிதன் ஒருவனைத் தங்கள் குல தேவதையாகிய காளிக்குப் பலி கொடுப்பது வழக்கம். அன்று அவர்கள் நரபலி கொடுக்க வேண்டிய தினம். மாலை நேரம் வரை பலிக்கு மனிதன் ஒருவனும் அகப்படவில்லை. ஆதலின் அவர்கள் அக்கானகம் முழுவதும் தேடி அலைந்தனர். இறுதியாக அரசன் நித்திரை செய்த இடத்துக்கு வந்து சேர்ந்தனர். உடனே அரசனைக் கட்டிப் பிணித்து, காளி கோவில் பூசாரியிடம் கொண்டு போய் நிறுத்தினர்.

பலிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் மனிதனது தேகத்தில், எக்குறையும் இருத்தல் கூடாது. ஆதலால் பலி கொடுக்கப்படும் மனிதனைப் பூசாரி நன்கு சோதனை செய்வான். அதன் பிறகே பலி கொடுப்பது வழக்கம். வேந்தனையும் அவ்வாறே பூசாரி பரிசோதித்தான். பரிசோதிக்குங்கால், அரசனுக்கு இடக்கை சுண்டு விரல் இல்லையென அறிந்ததும் 'இவன் பலிக்கு உதவான்' என்று பூசாரி கூறி விட்டான். உடனே கள்வர்கள், அரசனை விடுவித்து, வேறு மனிதனைத் தேடச் சென்றனர். இவ்வாறு விடுதலையடைந்த அரசன், 'பாம்பின் வாயினின்றும் தப்பிய தவளை' போல் அளவிலா ஆனந்தங் கொண்டான். "ஆகா! சுண்டு விரல் வெட்டுப்படாது இருந்திருப்பின், இப்போது என்னைப் பலி கொடுத்திருப்பார்களே! ஆகையால் மதியூகி கூறியபடி, என் சுண்டு விரல் நறுக்குண்டதும் ஒரு நன்மைக்குத் தான்" என்று எண்ணித் தன் நாட்டை அடைந்தான்.

அரண்மனை சேர்ந்ததும் மகிபாலன், மதியூகியை விடுவித்து அழைத்து வரும்படி ஆணையிட்டான். சேவகரும் மந்திரியை அழைத்து வந்தனர். அரசன் மந்திரியைத் தழுவி, கானகத்தில் நடந்த வரலாற்றைக் கூறி, "மந்திரி! நான்

விரலை துணித்துக்கொண்டபோது நீர் கூறியது உண்மையாயிற்று. ஆனால் நான் உம்மைச் சிறையிலிட்டபொழுது, 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று கூறினீரே, அதனால் என்ன நன்மை ஏற்பட்டது?'' என்று வினவினான்.

அதுகேட்ட மதியூகி, ''வேந்தே! தாங்கள் என்னைச் சிறையில் அடைக்காவிட்டால் நானும் தங்களுடன் வேட்டையாடக் காட்டுக்கு வந்திருப்பேன். அங்கு மற்ற வீரர்கள் தங்களைப் பிரிந்தபோதிலும், எனது குதிரையின் வேகத்தினால் நான்மட்டும் உங்களைப் பிரியாமல் உங்களுடனேயே இருந்திருப்பேன். அப்பொழுது கள்வர்கள் என்னையும் பிடித்துக்கொண்டு போயிருப்பார்கள். சுண்டுவிரல் இல்லாததால், அங்கக் குறைவுள்ள தங்களை விடுவித்தபோதிலும், தேகத்தில் ஒரு குறைவும் இல்லாத என்னைக் காளிக்குப் பலி கொடுத்திருப்பார்கள் அல்லவா? ஆகையால் **என்னைச் சிறையில் அடைத்ததும் ஒரு நன்மைக்கே**'' என்று புகன்றான்.

அரசன் அதுகேட்டு மிகவும் சந்தோஷமடைந்து, மதியூகியின் மதிநுட்பத்தைப் புகழ்ந்து, அன்று முதல் மந்திரி சொல்லும் யோசனையின்படி தவறாது நடந்து வந்தான். அதனால் அவன் நாடும் நன்மை யடைந்தது.

'மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்'

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—ஏற்ப, கூரிய, பலி, ஆணை, பகர்.

II எதிர்ப்பதம் கூறத் தகுந்த வார்த்தைகள் மூன்று இப்பாடத்திலிருந்து பொறுக்கி அதன் எதிர்ப்பதம் என்னவென்று கூறு.

III இக்கதையில் மந்திரி நீ என்று வைத்துக்கொண்டு அரசனிடம் முன்பு அவர் உனக்குச் செய்தவற்றை ஞாபகப்படுத்துகிற மாதிரி ஒரு குறிப்பு எழுது.

இலக்கணம்

IV (1) சொற்கள் எத்தனை வகைப்படும்? உதாரணங்கள் கூறு. (2) சொற்றொடர் என்றால் என்ன?

5. ஜீவகாருண்யம்

கூன்	மங்கும்	நில்லாது	உடையவர்	பூசிப்பதாலும்
சகல	ஆதரவு	தெளித்து	முன்னிலும்	தலைகுனிந்தார்
ஒழுக	பக்தன்	ஒதுக்கிய	உடற்குறை	தெளிவித்தான்
புனித	உரியது	பல்வேறு	தாம்பாளம்	பத்திரப்படுத்தி
முடம்	நல்லாசி	மௌல்வி	அருவருத்து	ஜீவகாருண்யம்
தரித்த	துவாதச	இரட்சித்த	முயன்றனர்	அங்கக் குறைவு
வெட்கி	எம்மால்	நாமங்கள்	வாதித்தனர்	பாத்திரமானவன்
தத்தம்	தூஷிக்க	மூர்ச்சித்து	தொட்டனன்	சோதிப்பதற்காக
சிந்தை	சிற்றறிவு	உள்ளன்பு	வைஷ்ணவர்	பிச்சைக்காரர்கள்
தேசிகர்	பலவாறு	தீண்டினால்	குடியானவன்	பெரியதனக்காரர்
திருநீறு	அன்னம்	மனச்சாந்தி	வாக்கியங்கள்	உருத்திராட்சங்கள்
	மடிமீது		உற்சவம்	

இவ்வுலகிலுள்ள சகல ஜீவராசிகளிடத்தும் இரக்கச் சிந்தையுடன் நடந்து கொள்ளும் தன்மையே ஜீவகாருண்யமாம். ஏழை, எளியவர், கூன், குருடு முதலிய அங்கக் குறையுற்றவர், பலவீனமானவர் முதலிய மனித வர்க்கத்தோர்க்குத் தேவையான உதவிகள் அளிப்பதே மனிதன் முக்கிய நோக்கமாகக் கொள்ளவேண்டும். இத்துடன் ஐந்தறிவேயுள்ள பிராணிகளிடத்தும் ஆறறிவு படைத்த மனிதன் அன்பு பூண்டொழுக வேண்டும். இவ்வாறு நடத்தலே ஜீவ காருண்யம் அல்லது பிராணிகளிடத்தன்பு எனப்படும். தம்மைக்காட்டிலும் பலவீனமானவர்களிடமும், சிற்றறிவு உடையவர்களிடமும், தம்மிடம் பயங்கொண்டொழுகும் பிராணிகளிடமும் இரக்கச் சித்தம் காட்டுதலே ஆண்மையுள்ள மனிதர்க்கு அழகாம்.

சோழ வள நாட்டிலே **சத்தியபுரி** என்னும் பட்டினத்தில் பல ஜாதியாரும், பல மதத்தினரும் வர்ழ்ந்தனர். ஒவ்வொருவரும் தத்தம் மதமே மேலானதென்றும், தாம் வணங்கும் தெய்வமே கடவுள் என்றும் வாதித்தனர். அத்துடன் நில்லாது பிற மதங்களையும், அவர்களது கடவுள்களையும் தூஷிக்க ஆரம்பித்தனர். இதனால் ஒருவர்க்கொருவர் அடிக்கடி சண்டையிட்டு வந்தனர். ஒவ்வொரு மதத்தினரும் தமது தெய்வத்திற்கு வேண்டியபடி கோவில்கள் கட்டிப் பல உற்சவங்கள் விமரிசையாய் நடத்தினர். யாவரும் தமது தெய்வமே மேலானது என்று நிரூபிக்கப் பலவாறு முயன்றனர். ஆனால் அவ்வூரிலுள்ள கதியற்ற கூன், குருடு, முடமாகிய உடற்குறை யுற்றோரையும் மற்றப் பிராணிகளையும் கவனிப்பார் ஒருவருமிலர்.

ஒருநாள் அவ்வூர் மந்தை வெளியில், மிகவும் பிரகாசம் பொருந்திய ஒரு பெரிய தங்கத் தட்டுக் கிடந்தது. அவ்வூர் பெரியதனக்காரரிற் சிலர் அங்குவந்து, அதை யெடுத்து நோக்கினர். அத் தாம்பாளத்தில் பின்வருமாறு சில வாக்கியங்கள் காணப்பட்டன. 'எவனொருவன் உண்மையான தெய்வ பக்தியுள்ள

வனோ, யார் கடவுளிடம் உள்ளன்பு கொண்டவனோ அவனுக்கே இத்தட்டு உரியது. அவ்வித அன்புள்ளவர் இத்தட்டைத் தீண்டினால், இதிலுள்ள வேறு சில எழுத்துக்கள் நன்கு பிரகாசிக்கும். மற்றவர் தீண்டின் இதிலுள்ள எழுத்துக்கள் மங்கும். இதைக் காண்போர் உரியவரைத் தேடிக் கண்டுபிடித்து, அவரிடம் இதைச் சேர்ப்பாராக' என்றிருந்தது. அதைக் கண்ட அவ்வூர் தலைவர்கள் அத்தட்டை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி அதன் விஷயத்தை ஊரெங்கும் பறைமூலம் அறிவித்தனர்.

இவ்விஷயத்தைக் கேள்வியுற்ற அநேகர், அத்தட்டைப் பெற முயன்றனர். ஆனால் அவர்கள் அத்தட்டைத் தொட்டவுடன் அதிலுள்ள எழுத்துக்கள் மங்கி விட்டதால், வெட்கித் திரும்பினர். தட்டு வைக்கப்பட்டுள்ள கட்டிடத்தருகில்

பெரிய உற்சவம்போல் கூட்டம் கூடிற்று. கூன், குருடு, முடம், நொண்டியாகிய பல பிச்சைக்காரர்களும் பிச்சை வாங்க வந்து உட்கார்ந்துவிட்டனர். தட்டைப் பெற ஆசைகொண்டு வந்த எவரும் அந்த அங்கவீனரைச் சிறிதும் கவனிக்கவில்லை. சிலர் அவர்களைத் திரும்பியும் பாராது காசை யெறிந்து சென்றனர். சில நாட்களாயின; ஒருவரும் தட்டைப் பெறவில்லை. பிறகு அவ் வூரிலுள்ள பல மதத் தலைவர்களும் வர ஆரம்பித்தனர்.

அங்கமெங்கும் திருநீறு பூசி, உத்திராட்சங்கள் அணிந்த ஒரு தேசிகர், அத்தட்டைப் பெற ஆவல் கொண்டு வந்தார். அனால் அவர் தட்டைத் தொட்ட தும் அதிலுள்ள எழுத்துக்கள் மங்கின. அவரும் வெட்கித் தலைகுனிந்தார். பின்பு துவாதச நாமங்கள் தரித்த வைஷ்ணவர் ஒருவர் வந்தார். அதன் பின் பல்வேறு மதக் குருக்களும், முகம்மதிய மௌல்வியும், கிறிஸ்தவப் பாதிரியும் வந்தனர். அவர்கள் ஒருவருக்கும் அத்தட்டுக் கிட்டவில்லை. அதனால் 'இத் தெய்வீகத் தட்டு ஒருவருக்குமே கிடையாது' என யாவரும் எண்ணினர். ஆகையால் அவ்வழியே வருவார் போவாரை யெல்லாம், அத்தட்டைத் தீண்டும்படி யழைத்தனர்.

முடிவில் ஏழைக் குடியானவன் ஒருவன் வேடிக்கை பார்த்துப்போக அங்கு வந்தான். வந்தவன் பிச்சைக்காரர் கூடியிருந்த இடத்துக்குச் சென்று மூன்று நாளாய் அன்ன ஆகாரமில்லாது மூர்ச்சித்துக் கிடந்த முடவன் ஒருவனைக் கண்ணுற்றான். உடனே ஓடி அவனை வாரியெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு, அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து, அவனது மயக்கத்தைத் தெளிவித்தான். பின் அப்பட்டினத்திற்குள் சென்று, அவனுக்கு ஆகாரம் கொணர்ந்து கொடுத் தான். அவ்வாகாரத்தை உண்ட முடவனும் நன்கு தூங்க ஆரம்பித்தான்.

அப்போது அங்கிருந்த நகரத் தலைவர்கள் அக் குடியானவனை யழைத் துச் சென்று அப் புனிதத் தட்டைத் தீண்டும்படி வேண்டினர். குடியானவனும் யாதொன்றையும் அறியாதவனாய், அத் தட்டைத் தொட்டனன். தொட்டவுடன் தட்டிலுள்ள எழுத்துக்கள் முன்னிலும் பிரகாசம் பெற்று விளங்கின. உடனே, "ஏ! ஜனங்களே! உங்களைச் சோதிப்பதற்காகவே இத்தட்டு எம்மால் போடப் பட்டது. பார்ப்பவர்கண்டு புகழுவதற்காகக் கடவுளைப் பூசிப்பதாலும், தொழுவ தாலுமே எவனும் உண்மைப் பக்தியுடையவனாகான். எவன் தன்னைப்போலவே மற்றெல்லாப் பிராணிகளையும் கருதி, அவைகளிடம் கருணையுடன் நடந்துகொள் கின்றானோ அவனே எம்மிடம் உள்ளன்பு கொண்டவன். ஜீவகாருண்யம் உள்ளவனே எமது அன்புக்குப் பாத்திரமானவன், இங்கு ஒருவராலும் கவனிக்கப்படாது இறக்கும் தருவாயிலிருந்தும், பார்த்தோர் அருவருத்து ஒதுக்கிய முடவனைக் காத்து இரட்சித்த இக்குடியானவனே எமது உண்மை பக்தன். அவனுக்கே

இத்தட்டு உரியது" என்று ஓர் அசரீரி வாக்கியம் எழுந்தது. உடனே யாவரும் வெட்கித் தலைகுனிந்தனர். குடியானவனே அத்தட்டை விற்று, பலவீனமுள்ள ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு மனச்சாந்தியுடன் வீடு சேர்ந்தான். மாணவர்களே! நீங்களும் இக்குடியானவனைப் போலவே கூன், குருடு முதலியவர்களையும், ஆதரவற்றவர்களையும், சகல பிராணிகளையும் அன்புடன் நடத்தினால் கடவுளின் நல்லாசியைப் பெறலாம். வெளிவேடங்களால் யாதொரு பிரயோஜனமுமில்லை.

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—விமரிசை, தெளிவு, உரியது, வெட்கி, ஒதுக்கிய.

II "ஜீவகாருண்யமுள்ளவனே எமது அன்புக்குப் பாத்திரமானவன்" (இந்த வாக்கியம் யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் எதற்காகச் சொல்லப்பட்டது?) சந்தர்ப்பம் கூறு.

III இக்கதையின் வரலாறு இன்னும் ஓரிரு வருஷங்களுக்குப் பின் நடக்கப் போகிறதென்று ஒரு தீர்க்கதரிசி சொல்கிற மாதிரி எழுது.

IV (1) வித்தியாசங்கள் கூறு :—கன்னி, கண்ணி; கரை, கறை; மரை, மறை; பனி, பணி; தரி, தறி; மலை, மழை; தளை, தழை; (2) இந்தவிதமான இன்னும் சில வார்த்தைகளை வரிசையாய் எழுதிவை.

V பெயர்ச் சொல்லின் ஆறு வித வேறுபாடுகளுக்கும் பொருள் விளங்கும் வாக்கியங்களிலமைத்துக் காட்டு.

இலக்கணம்

VI வேற்றுமை எட்டு வகைப்படும். பெயர்ச்சொல்லை எட்டு விதமாக வேற்றுமைப்படுத்தி நம் பாஷையில் நாம் பேச, எழுத உபயோகப்படுத்தி வருகிறோம்.

முதல் வேற்றுமை எழுவாயாகும். அதாவது ஒரு பெயர்ச்சொல் அதன் இயற்கை அமைப்பு மாறுமல் வரும்.

பசு நல்ல மிருகம்.	**கந்தன்** ஓடுகிறான்.
ராமன் படிக்கிறான்.	**நாய்** குரைக்கிறது.

6. கடிதத்தின் சுற்றுப் பிரயாணம்

தபாலாபீஸ் எப்படி வேலை செய்கிறது என்பதை அறியாதவர்கள், தினசரித் தபால்கள் ஒழுங்காகவும் நேரம் தவருமலும் வீட்டு வாசலில் கொண்டு வந்து கொடுப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். நம்மைத் தேடி வருபவர்களில் தபால்காரனையே நாம் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். அவனது வருகையால் குடும்பத்தினர் யாவரும் உற்சாகமடைகிறார்கள். வெகுவாக எதிர்பார்க்கப்பட்ட பத்திரிகையோ, அல்லது வெகு காலமாக பிரிந்திருக்கும் நெருங்கிய சுற்றத்தாரிடமிருந்து கடிதமோ, வந்தால் அவர்களது முகங்களில்

சந்தோஷம் ததும்பும். நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலிருக்கும் தபால் பெட்டியில் போடப்பட்ட கடிதம் வெகுவிரைவில் நமக்குக் கிடைப்பது ஆச்சரிய மாயிருக்கிறதல்லவா? சில சமயங்களில் கடிதம் மற்றவருக்குத் தவறுதலாகக் கொடுக்கப்பட்டு விடுகிறது; அல்லது காணுமல் போய்விடுகிறது. இவ்வாறு நேரிடும்போது நாம் தபால் நிலயத் தலைவரிடம் தவறிய தபாலைப் பற்றி புகார் சொல்லுகிறோம். அவர் எப்பொழுதும் நமக்கு வேண்டிய உதவி செய்யவும், தக்க வழிகளைக் கூறவும் தயாராயிருப்பார். இவ்வாறு கடிதங்கள் மாற்றிக் கொடுக்கப் படுவதும் காணுமற் போவதும் நமது தப்பிதத்தால் ஏற்படுவதுதான். விலாசம் எழுத மறப்பதாலும் சரியான விலாசம் எழுதாததாலும் இந்தத் தவறுதல் நேரிடு கிறது.

தபால் மூலம் அனுப்பப்படும் கடிதம், புத்தகம், சிப்பம், முதலியவை களின்மேல் எழுதப்படும் விலாசமானது, சரியான இடத்தில் உள்ள சரியான நபருக்குக் கொடுபடத் தபாலாபீசுக்கு உதவி செய்வதற்காகவே எழுதப்படுகிறது. அந்தத் தபால் சரியான நபருக்குக் கொடுபடும் என்று நிச்சயிக்க வேண்டுமானுல், தபால்காரர் பிறர் உதவியில்லாமலும், பல இடங்களுக்கு அலையாமலும், தானே குறிப்பிட்ட இடத்திலுள்ள குறிப்பிட்ட நபருக்குக் கொடுக்கும்படி விலாசம் விவரமாயிருக்கவேண்டும். ஒருவரை இன்னர் என்று அறிய வேண்டுமானுல் முதலில் அவருடைய முழுப்பெயரையும் தெரிந்து கொள்ளவேண்டும். சில சமயங் களில் ஒரே பெயருள்ள பலர் ஒரு இடத்திலோ அல்லது நகரத்திலோ இருப்பது உண்டு. ஆகையால் விலாசத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலாசதாரின் பெயரை அதே பெயருள்ள வேறொருவராக, நினைக்கஇடமின்றி முழுப்பெயரும் கொடுக்கப் பட வேண்டும். ஊர்ப்பெயர், தகப்பனர் பெயர் முதலியவைகளைக் குறிக்கும் எழுத் துக்களை பெயரோடு எழுதுவதால் இத்தவறைத் தவிர்க்கலாம். அடுத்தபடியாக ஒருவர் பார்க்கும் வேலையைக்கொண்டும் சரியான நபர்தானு என்று நிச்சயிக்கலாம். உதாரணமாக ராமசாமி நாயுடு என்ற பெயருள்ள இருவர் ஒரே இடத்தில் வசிக் கிறுர்கள். அவர்களில் ஒருவர் போலீஸ்காரர்; இன்னெருவர் உபாத்தியாயர். விலாசதாரின் உத்தியோகத்தையும் விலாசத்தில் எழுதினுல், போலீஸ்காரரின் கடிதம் உபாத்தியாயருக்கும், உபாத்தியாயரின் கடிதம் போலீஸ்காரருக்கும் ஒரு போதும் மாற்றிக் கொடுக்கப் படமாட்டாது.

ஒரு கடிதம் விலாசதாருக்குக் கொடுபட வேண்டுமானுல், முதலில் அது அவர் வசிக்கும் ஊரை அடையவேண்டும். சிறிய குக்கிராமங்கள் முதல் சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய நகரங்களிலிருந்தும், பெரிதும் சிறிதுமான பல இடங்களுக்கும் அனுப்பப்படும் லக்ஷக்கணக்கான கடிதங்களை தபாலாபீசு தினசரிக் கையாளுகிறது. ஒரே பெயருள்ள பல ஊர்களும் இருக்கின்றன. குறிப்

பிட்ட ஒரு ஊருக்குத்தான் அந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்று நிச்சயிக்க, அந்த ஊர் இருக்கும் ஜில்லாவையோ அல்லது மாகாணத்தையோ அறிய வேண்டியது அவசியம். கிராமங்கள் சிறிய நகரங்கள் விஷயத்தில் இது மிகவும் முக்கியம். தபால்காரரால் தபால் பெட்டியிலிருந்து எடுக்கப்படும் எல்லாக் கடிதங்களும் ஒரு இடத்தில் குவிக்கப்படும். ஒரே தபால் பெட்டியில், காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகருக்கும், தென்னிந்தியாவிலுள்ள மதுரைக்கும், பம்பாய் மாகாணத்திலுள்ள புனா நகருக்கும், மத்திய மாகாணத்திலுள்ள இந்தூருக்கும், வங்காளத்திலுள்ள கல்கத்தாவுக்கும் ஆக பல தூரப்பிரதேசங்களுக்கும் கடிதங்களிருக்கும். இம்மாதிரி சேரும் பல்லாயிரம் கடிதங்களை ஒவ்வொரு ஜில்லாவுக்கும் அல்லது மாகாணத்துக்குமாக சிறு சிறு கட்டுகளாகப் பிரித்துக் கட்டுவது மிகுந்த கஷ்டமான வேலை. தபாலாபீசில் இந்த மாதிரிக் கடிதங்களைப் பிரிப்பதை "**பிரித்தல்**" என்றும் அந்த வேலையில் ஈடுபட்டவர்களை "**பிரிப்போர்**" அல்லது "**பிரிக்கும் குமாஸ்தாக்கள்**" என்றும் சொல்லப்படும்.

கடிதங்கள் போகவேண்டிய திசைகளையொட்டி, தபாலாபீசுகளில் அவைகள் பிரிக்கப்படும். ஒரே திசையில் செல்லவேண்டிய பல கடிதங்களும் ஒரு பையில் போடப்பட்டு, பிரயாணஞ் செய்யும் தபாலாபீசு ஆகிய ரயில் தபால் நிலையத்தில் (R. M. S.) கொடுக்கப்படும். ஓடும் ரயிலில் இவை பிரிக்கப்படும். வெளியே சிவப்பு வர்ணம் பூசப்பட்ட ஒரு தனி வண்டியை மெயில் வண்டித் தொடரில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதுதான் ஓடும் தபால் நிலையம். இங்கேதான் உங்கள் கடிதங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஊருக்குமாக தனிப்பைகளில் போடப்படுகின்றன. ரயில், வேகமாக ஓடும்பொழுது கடிதங்களின் மேலுள்ள விலாசத்தை வாசிப்பது கஷ்டம். கையெழுத்து தெளிவாகத் தெரியாது. அதிலும் இரவில் விளக்கொளியில் பிரிக்கும்போது பென்சிலாலோ, கெட்ட மையினாலோ எழுதப்பட்ட எழுத்துக்களை வாசிப்பது மிகுந்த கஷ்டமானது. தபால்களைக் கொடுக்க வேண்டிய ரயில் ஸ்டேஷன்கள் சீக்கிரம் வந்துவிடுமாகையால் அவர்கள் விலாசம் முழுவதையும் படிக்கமுடியாது. ஊர்களின் பெயர்களைமட்டும் மேலாகப் பார்த்துவிட்டு அந்தந்த ஊருக்குரிய பிரைகளில் போடுவார்கள். இந்தப் பிரைகளிலுள்ள எல்லாக் கடிதங்களும் அந்தந்த ஊருக்குரிய பைகளில் போட்டுக் கட்டப்படும். கடிதத்தின் மேல் விலாசத்தைத் தெளிவாக எழுதாவிட்டால், உங்கள் கடிதம் பிரிக்கப்படாமல் நின்று விடும். அல்லது வேறு ஊருக்குரிய பையில் சேர்ந்துவிடும். இவ்விதம் நேர்ந்தால் உங்கள் கடிதம் வாராமலே போய்விடும்; அல்லது பல தினங்கள் தாமதித்து வரும். உங்களுடைய கடிதங்களைச் சரியானபடி பிரிப்போர்கள் பிரிப்பதற்கு, கடிதத்தின் மேலுள்ள விலாசத்தைக் கூடியமட்டிலும் தெளிவாக மையினால் எழுதுவதுடன், கடிதம் சேரவேண்டிய தபால் நிலையம் இருக்கும்

ஊரின் பெயரையும், சிறிய ஊராக இருந்தால் ஜில்லா அல்லது மாகாணத்தின் பெயரையும் எழுத வேண்டும். கடிதங்கள் சரியானபடி போய்ச் சேர வீட்டு இலக்கத்தையும் தெருப் பெயரையும் விலாசத்துடன் எழுதவேண்டியது அவசியம். இவைகள் கீழ்க்கண்ட மாதிரி எழுதப்படவேண்டும் :—

திரு. இ. த. ராமசாமி நாயுடு,
போலீஸ் கான்ஸ்டபிள்,
112. பிள்ளையார் கோவில் தெரு,
திருப்பத்தூர், (இராமநாதபுரம் ஜில்லா).

மேற்கண்ட உதாரணத்தில் விலாசம் எழுதியவர் முன் யோசனையோடு ஜில்லா பெயரையும் சேர்த்து இருக்கிறார். அப்படிச் சேர்த்திராவிட்டால், இந்தக் கடிதம் வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பத்தூருக்குப் போகும் பையில் சேர்க்கப்பட்டிருக்கும். ஏனெனில் அங்கும் ஓர் திருப்பத்தூர் இருக்கிறது.

ஒரு விலாசதார் ஊரைவிட்டுப் போய்விட்டால், தபால் நிலையத்தார் அவருக்கு வரும் கடிதங்களை, அவர் புதிதாகப் போயிருக்கும் ஊருக்கு அனுப்புகிறார்கள். இது "திருப்பியனுப்புதல்" என்று சொல்லப்படும். பழைய விலாசத்தைச் சுத்தமாக அடித்துவிட்டு, புதிய விலாசம் அதற்குப்பதிலாக எழுதப்படுகிறது.

அனுப்பும் தபால்களுக்குரிய தபால் தலைகளை தவறாமல் ஒட்டவேண்டும். தபால்தலைகள் ஒட்டாத கடிதங்களுக்குரிய பணத்தை விலாசதாரிடமிருந்து வசூலிக்க வேண்டுமாதலால், கடிதம் போய்ச் சேரத் தாமதமாகும். தபால் தலைகள் ஒட்டாமல் கடிதங்கள் அனுப்புவது ஒழுங்கல்ல. ஏனெனில் அவைகளைப் பெறும் விலாசதார். இரட்டிப்புக் கட்டணம் செலுத்தவேண்டும்.

உங்களுடைய கடிதங்கள் தவறிப் போகாமலும் தாமதிக்காமலும் போய்ச் சேரவேண்டுமானால் கீழ்க்கண்ட முறைகளை அனுசரிக்கவேண்டும்.

(1) எப்பொழுதும் கடிதங்களுக்குரிய தபால் தலைகளை ஒட்டவேண்டும். கூடியமட்டிலும் தபால்தலைகள் ஒட்டாமலும், குறைவான தபால் தலைகளை ஒட்டியும் கடிதங்களை அனுப்பக்கூடாது. தபால் தலைகளை ஒட்டாமல் கடிதம் அனுப்பினால், உங்கள் சிநேகிதர்களிடமிருந்து பதிலே வராது.

(2) கடிதத்தின் மேல் விலாசத்தை பென்சிலாலோ ஒழுங்கில்லாமலோ எழுதக் கூடாது. மையினாலேயே கவனமாக, தெளிவாக, புரியும்படி எழுத வேண்டும்.

(3) விலாசத்தைக் கீழ்க்கண்டமுறைப்படி எழுத வேண்டும் :— முதலில் விலாசதாரின் பெயரும், பிறகு அவரது வேலையும், பிறகு அவர் வசிக்கும் வீட்டு இலக்கமும் தெருவும், கடைசியாக ஆனால் முக்கியமாக கொட்டை எழுத்தில் ஊரின்

பெயரையும் அவசியமானல் ஜில்லா அல்லது மாகாணத்தின் பெயரையும் எழுத வேண்டும்.

(4) தபால் நிலையமுள்ள ஊரின் பெயரை பெரிய கொட்டை எழுத்துக்களில் மற்றவைகளைவிடத் தெளிவாக எழுத வேண்டும். இதனுல் கடிதங்களைப் பிரிப்போர், வேலை எளிதாகும்.

(5) விலாசத்தின் ஒவ்வொரு வரிக்கும் இடையில் போதுமான இடம் விட்டு எழுதவேண்டும். கடிதங்களை மறு விலாசத்திற்குத் திருப்பியனுப்பும்போது இது உபயோகப்படும்.

(6) கடிதத்தைத் தபால் பெட்டிக்குள் போடுமுன், உரிய தபால் தலை ஒட்டப்பட்டிருக்கிறதா, உறை நன்ருக மூடப்பட்டிருக்கிறதா, சரியான விலாசம் எழுதப்பட்டிருக்கிறதா, என்று சரி பார்த்துக்கொள்ள வேண்டும்.

பயிற்சி

(1) கடிதங்களின் மேல் விரிவான விலாசத்தை ஏன் எழுத வேண்டும்?
(2) விலாசத்தை மையினுல் எழுதுவது ஏன் நல்லது?
(3) " பிரித்தல் ", " திருப்பியனுப்புதல் " என்ருல் என்ன?
(4) ஓடும் தபால் நிலையத்தின் வேலைகள் என்ன?
(5) கடிதத்தின்மேல் எழுத வேண்டிய விலாசத்தின் ஒழுங்குமுறையை வரிசையாய்க் கூறு.
(6) தபால்தலை ஒட்டாத கடிதங்களை அனுப்புவது ஏன் நல்லதில்லை?

7. மோஸஸ்

யூதர்	படாது	அகலவிட	கைப்பற்றி	அளவுமிக்க	மனவெழுச்சி
பூர்வ	அடாது	இரவலாக	பாதரக்ஷை	கற்பனைகள்	திக்குவாயன்
குழவி	போக்கு	வருங்கால்	பின்பற்றிய	ஆகமங்கள்	கைவிசேஷம்
துறை	ஸ்நானம்	அந்நாளில்	உன்னினள்	துரத்துண்டு	அனுப்புமாறு
கழற்றி	முன்னைய	சந்ததியார்	கட்டுப்பாடு	அதிகரித்தது	செவிலித்தாய்

ஜனத்தொகை காளையாகினன் ஒருவருக்கொருவர் படையெடுத்தான்

அரேபியா தேசத்தில் **இஸ்ரவேலர்** என்னும் ஜாதியார் இருந்தனர். **சாமுவேல்** என்ற மகான் அவர்களை நல்வழியில் நடத்திவந்தார். ஆனுல் நாளடைவில் அந்த இஸ்ரவேலர், தங்கள் 'மனம் போன போக்கெல்லாம் போக' ஆரம்பித்தனர். அவர்களுள் கட்டுப்பாடும், ஒற்றுமையும் குறைந்தன. அந்நாளில் **எகிப்து** தேசத்தை யாண்டுவந்த **பார்வோன்** என்னும் அரசன், இந்த இஸ்ரவேலரின் நாட்டின்மேல் படையெடுத்தான். அவர்களை முறியடித்து, ஆண்

மக்களேயும், பெண் மக்களேயும் சிறைப்பிடித்துச் சென்ருன். சிறைப்பட்ட இஸ்ரவேலர் யாவரும் அடிமைகளாகிப் பல கஷ்டங்களே யனுபவித்தனர். 'கஷ்டம் வருங்கால் கடவுளே நினைப்பர்' என்றபடி அவர்கள் தங்கள் விடுதலேக்காகக் கடவுளிடம் மன்ருடினுர்கள். கடவுளும் அவர்களது வேண்டுகோளுக்கு இரங்கினுர்.

எகிப்து தேசத்தில் இஸ்ரவேலரின் ஜனத்தொகை அதிகரித்தது. இதை யறிந்த பார்வோன், நாட்டிற் பிறக்கும் ஒவ்வொரு இஸ்ரவேல் ஆண் மகவையும் நீல நதியில் எரிய உத்தரவிட்டான். இவ்வுத்தரவைக் கேட்ட இஸ்ரவேலர் நடுநடுங்கினர். தங்களே மீட்க ஒரு தலேவனேஅனுப்புமாறு கடவுளே வேண்டினர்.

சில நாட்களுக்குப் பின் ஒரு இஸ்ரவேலரின் வீட்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது கோடி சூரியபிரகாசம் பொருந்திய அழகாயிருந்தது. அதன் அழகைக்கண்ட அதன் தாய், அதனேக் காப்பாற்ற உன்னினள். அக் குழவியை ஒரு சிறு கூடையிலிட்டு, அரசகுமாரி ஸ்நானம் செய்யவரும் நீல நதித்துறைக் கருகில் வைத்துவிட்டனள். அரசன் மகளும் அக் குழவியைக் கண்டு மகிழ்ந்து, அரண்மனேக் கெடுத்துச் சென்று, அதன் தாயையே அதற்குச் செவிலித்தாயாக ஏற்படுத்தினள். குழந்தைக்கு **மோஸஸ்** எனப் பெயரிடப்பட்டது. நாளடைவில் குழந்தையும் பிள்ளேயாகிக் காளேயாகினன்.

ஒரு நாள் மோஸஸ் தெருவழியாகப் போய்க்கொண்டிருந்த பொழுது ஒரு இஸ்ரவேலனும் ஒரு எகிப்தியனும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். மோஸஸ் இஸ்ரவேலனுடன் கூடி, எகிப்தியனே வெட்டிக் கொன்றுவிட்டார். மறு நாள் இரு இஸ்ரவேலர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டனர். அவர்களுக்குள் சமாதானம் செய்து வைக்க முயன்ருர் மோஸஸ். அப்போது அவர்களில் ஒருவன், "நேற்று அந்த எகிப்தியனேக் கொன்றதுபோல, எங்களேயும் கொலே செய்ய எண்ணுகிருய் போலும்" என்று கூறினுன். அது கேட்ட மோஸஸ் மனம் வருந்தி, அந்நாடு விட்டு மீதியானியர் நாடு சென்ருர். அங்கு ஒரு பெண்ணே மணம் செய்துகொண்டு, ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டார்.

இவ்வாறு ஆடு மேய்த்து வரும் நாளில் ஒரு நாள், மோஸஸ் ஒரு முட்செடி நெருப்புப் பற்றி எரிவதைக் கண்டு அவ்விடம் ஓடினுர். ஆனுல் அருகில் சென்று உற்று நோக்கியதும் அச் செடி எரியாமல் இருக்கக் கண்டு அதிசயித்தார். அப்போது, " நீ நிற்கும் இடம் மிகவும் பரிசுத்தமானது. உன் கால்களிலிருக்கும் பாதரக்ஷைகளேக் கழற்றிப் போடு. நீ எகிப்து தேசத்துக்குப் போய் இஸ்ரவேலரை விடுவி" என ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அதற்கு மோஸஸ், "நான் திக்குவாயன், என்னே இஸ்ரவேலர் எப்படி நம்புவர்?" என்று பணிவுடன் வினவினர். அசரீரியோ, " நீ இடும் கட்டளேயை நிறைவேற்றவும், ஜனங்களிடம் அதைத்

தெரிவிக்கவும் உன் சகோதரனுகிய **ஆரோனை** அழைத்துச் செல். ஜனங்கள் உன்னை நம்புவதற்கு, நீ அநேக அற்புதங்களைச் செய்யும் சக்தியடைவாய்'' என்று கூறி, மோஸஸின் கை விசேஷத்தைப் பல அற்புதங்களால் நிரூபித்தது. மோஸஸும் மனவெழுச்சி கொண்டு, கடவுளின் கட்டளையை நிறைவேற்றவும் இஸ்ரவேலரை விடுவிக்கவும் எண்ணங் கொண்டு எகிப்து நோக்கிப் புறப்பட்டார்.

இங்ஙனம் எகிப்து தேசத்தை யடைந்த மோஸஸ் இஸ்ரவேலரைக் கண்டு பேசினர். ஆரோனும் அவருக்கு உதவி புரிந்தான். முன்னைய பார்வோன் அரசனின் மகனுகிய பார்வோனிடம் சென்று, இஸ்ரவேலர் மூன்று நாள் பிரயாணம் போய்த் தங்கள் கடவுளை வழிபட அநுமதி தர வேண்டினர். அரசனும் தான் அறுநூறு ஆண்டுகளாக அடிமை கொண்ட அந்நியரை அகலவிடத் தயங்கினன். இதையுணர்ந்த மோஸஸ், அவ் வேந்தனுக்குப் பல அற்புதங்களைச் செய்து காட்டினர். இஸ்ரவேலரை விடுவிக்க அதிகப் பிரயாசை எடுத்தார். முடிவில் அவரது முயற்சி வெற்றி பெற்றது. பார்வோன் மன்னன், இஸ்ரவேலர் தங்கள் கடவுளை வணங்கச் சென்று திரும்ப உத்தரவு அளித்தனன்.

இஸ்ரவேலர் யாவரும் புறப்படும்பொழுது, அக்கம் பக்கத்தாரிடம் ஏராளமாக நகைகளை இரவலாக வாங்கி அணிந்து கொண்டு புறப்பட்டனர். இவ்வாறு புறப்பட்ட அவர்கள் **செங்கடல்** கரையை அடைந்தனர். இதைக் கேள்வியுற்ற பார்வோன் மன்னன், 'இஸ்ரவேலர் இனித் திரும்பார்' என நினைத்து, அவர்களைத் திரும்ப அழைத்து வருமாறு கட்டளை யிட்டுச் சேனைகளை அனுப்பினன். மோஸஸின் அற்புத சக்தியினல் செங்கடல் இரண்டாகப் பிரிந்து இஸ்ரவேலர் போக வழி விட்டது. ஆனல் பின் வந்த பார்வோனுடைய சேனைகள் அதில் இறங்கியதும், பிரிந்த கடல் சேர்ந்து அவர்களை அழித்து விட்டது. 'அடாது செய்வான் படாது படுவான்' என்பது உண்மையாயிற்று.

இவ்வாறு இஸ்ரவேலரை அழைத்துச் சென்ற மோஸஸ், வழியில் பல அற்புதங்களைச் செய்து, அவர்களை அரேபியா நாட்டுக்கு இட்டுச் சென்ருர். எனினும், அந்த இஸ்ரவேலர் நன்றி கெட்டவர்களா யிருந்தனர். ஆகையால் அவர்கள் நாற்பது நாட்களில் நடக்க வேண்டிய தூரத்தை, நாற்பது வருஷங்களில் பிரயாணம் செய்ய வேண்டி வந்தது. எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்ட நன்றி கெட்ட ஜனங்கள் யாவரும் இறந்தொழிந்து, அவர்களின் சந்ததியாரே அரேபியாவை அடைந்தனர். அடைந்தவர்கள் செழிப்பு நிறைந்த **கானுன்** தேசத்தைப் பகைவர்களிடமிருந்து கைப்பற்றி ஆண்டு வந்தனர்.

கிறிஸ்தவர்களின் வேதப் புத்தகங்களின் முதல் ஐந்து ஆகமங்களை எழுதினவர் மோஸஸ்தான். கடவுள் சொல்லிவர, இவர் அவைகளைத் தோள் சுருள்களில் எழுதினர். கிறிஸ்தவர்களின் **பத்துக் கற்பனைகளை** (கட்டளைகளை) இரண்டு

பெரிய கற்களில் எழுதி இஸ்ரவேல் ஜனங்களிடம் கொடுத்தார். மோஸஸ் கடவுளை நேரில் காண அளவு மிக்க அவாக் கொண்டிருந்தார். அவரது அவாவும் ஒருவாறு நிறைவேறியது. அவரது தள்ளாத வயதில் ஒரு நாள் கடவுள் அவரைத் தம் அடிகளிற் சேர்த்துக் கொண்டார். மோஸஸின் புகழ் அவரது நூல்களால் இன்றும் ஓங்கி நிற்கின்றது.

இன்று ஜெர்மனியரால் துரத்துண்டு, பாலஸ்தீனத்தில் அரேபியருடன் தங்கள் பூர்வ பூமிக்காகப் போராடி, ஆங்கிலேயரின் உதவியால் குடியேறிய **யூதர்** என்ற ஜனங்களே முன்னைய இஸ்ரவேல் ஜனங்களின் சந்ததியார்.

பயிற்சியும் கேள்வியும்

I வாக்கியங்களிலமை:—பின்பற்று, மன்றாடு, முறியடி, வேண்டுகோள், அகல விடு.

II 'அ' என்ற எழுத்தை முதலில் சேர்ப்பதால் அர்த்தம் மாறுபடும் ஐந்து வார்த்தைகளை எடுத்துக் கூறு. (உ - ம்) காரணம் × அகாரணம்.

III ர, ற என்ற எழுத்துக்கள் ஒரு வார்த்தையில் மாற்றி எழுதுவதால் உண்டாகும் அர்த்த வித்தியாசங்களை காட்டும் ஐந்து உதாரணங்கள் கூறு.

(உ - ம்) இறை, இரை.

IV (1) மோஸஸின் பின் சந்ததியார் யார்? அவர்கள் அடையும் அவதி என்ன? (2) கடவுளை வழிபடச் சென்ற இஸ்ரவேலரைத் திரும்ப அழைத்துவர, பார்வோன் அனுப்பிய சேனை என்ன வாயிற்று? (3) 'நன்றி கெட்டவர்கள் நலம் பெறார்' என்பதை ரூபி.

இலக்கணம்

V இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஆகும். இது எழுவாயுடன் சேரும்போது இரண்டாம் வேற்றுமை யுண்டாகிறது. (உ - ம்) பசு**வை** வீட்டில் வளர்க்கிறோம். ராம**னை** அழை. கந்த**னைப்** பார்.

8. தேனீ வளர்த்தல்

மலர்	மெழுகு	வாழ்நாள்	பாவத்தை	கொட்டுவது	கொழுப்பது
அரசி	போற்றி	அடைகள்	சோம்பேறி	நெடுந்தூரம்	பயன்படுவது
மிக்க	காடுகள்	பொறியில்	வருமானம்	உதவத்தக்க	சுறுசுறுப்பாய்
தேள்	கடுக்கும்	புறத்திலே	தொழிலாள	நாள்தோறும்	பூச்சியறைகள்
மூப்பு	வருவாய்	கலக்கவும்	உரியவர்கள்	வெவ்வேறாய்	கொம்புத்தேன்
காக்க	மூடுண்டு	வளர்த்தல்	உறைவிடம்	பாழாய்விடும்	பொழுதுபோக்க
			ஓயாது		

தேனீ என்ற சிறிய பிராணி மனிதருக்கு மிகவும் பயன்படுவதாகும். மலர்களிலுள்ள சுவைமிக்க சாற்றை எடுத்துச் சென்று, 'தேன்' என்ற இனிமையுள்ள பதார்த்தமாகச் செய்யும் தேனீ ஒரு சிறு பூச்சியே. இறகுகளின் துணையால் நெடுந்தூரம் பறந்து சென்று மலர்களில் மொய்க்கும் இப்பூச்சிகளின் கூட்டத்தை நாம் நாள் தோறும் காண்கிறோம்.

இவ்வாறு தான் பாடுபட்டுத் தேடிச் சேர்க்கும் தேனை, தேனீ மிகவும் கவலையோடு காப்பாற்ற முயலுகிறது. தனக்கு உணவுப் பொருளாக உதவும் பொருட்டுச் சேர்க்கும் தேனை மனிதன் கொள்ளைகொள்ள வரும்போது, அது மிக்க சினத்தோடு போராடுகிறது. புகையும் நெருப்புங்கொண்டு மனிதன் அவைகளை நெருங்குங்கால், சிறிய உயிர்களாகிய தேனீக்கள் யாது செய்யும்? தத்தம் உயிரையும் பொருளையும் இழந்து அழி

கின்றன. இதனாலேயே தேனீக்கள், காடுகளிலும், மலைகளிலும், நாடுகளிலும், மனிதர் நெருங்குவதற்கு அரிதான இடங்களிலேயே தம் கூட்டையமைத்து வாழ்கின்றன. செல்லுவதற்கரியதான அவ்விடங்களுக்கு மனிதர் சென்று தேன் கூட்டிலுள்ள ஆயிரக்கணக்கான தேனீக்களைக் கொன்று தேன் சேகரிக்கிறார்கள். மெழுகினால் அமைந்த தேன் அடைகளைக் கசக்கிப் பிழிந்து தேன் எடுக்கப்படுகிறது. இப்படி எடுக்கப்படும் தேன், அப்பூச்சிகளின் பாகங்களும், பலவித அழுக்குகளும், மெழுகும் நிரம்பி, ஈ மொய்ப்பதாயிருக்கும். மலைத்தேன், கொம்புத் தேன் என்று விற்கப்படும் தேன் இப்படி எடுக்கப்பட்டதே.

உணவுப் பொருள்களிற் சேர்க்கவும், மருந்துகளிற் கலக்கவும் உதவத் தக்க தேனை இயன்றவளவு சுத்தமாக எடுக்க முயல்வது நல்லது. பழைய வழிகளைப் பின்பற்றினால் சுத்தமான தேன் கிடைப்பது அரிதாகும். மலைக்குறவர்கள் தேன்

எடுப்பதற்கு உரியவர்கள் என்று எண்ணல் தவறாகும். தேனீக்களை நாமே கூட்டில் வளர்த்து, முறைப்படி சுத்தமான தேனை யெடுத்து நல்ல ஊதியம் பெறலாம்.

தேனீக்களில் **மலைத்தேனீ, நாட்டுத்தேனீ, சிறுதேனீ, கருந்தேனீ** என நான்கு வகைகள் உண்டு. இவற்றுள் நாட்டுத் தேனீக்களே நாம் எளிதிற் பிடித்து வளர்க்கத்தக்கவையாம். இவ்வகைத் தேனீ தனது கூட்டுக்குள் தேன் அடையும் குஞ்சறையும் வெவ்வேறாய் அமைக்கும். சாதாரணமாய் இத்தேனீக்கள் அமைக்கும் கூடு, மனிதர் நெருங்கத்தக்க உயரத்திலேயே இருக்கும். இதனால் இத்தேனீக்களை வளர்த்தலே நலம். தவிரவும் மரத்தினால் கூடுகள் அமைத்து வளர்ப்பதற்கு இவ்வகையே சிறந்தது. நாம் படும் பாட்டுக்குத் தக்க பலனும் கிடைக்கும்.



மேற்கூரையுள்ள சிறிய அறைபோல் மரத்திலே கூடு அமைத்து, அடைகளுக்காகப் பல சட்டங்கள் வைக்கவேண்டும். தேனடைகளும் பூச்சியறைகளும் தனித்தனி அமையத் தக்க இடங்கள் அக்கூட்டினுள் இருக்கவேண்டும். காட்டு மரங்களிலே கூடுகட்டி வாழும் தேனீக்களை நெருங்கிச் சிறிது புகையிட்டு, தேனீக்களின் அரசியைப் பிடித்து நாம் செய்துள்ள மரக்கூட்டுள் விட்டுக் காக்கவேண்டும். அரசியுள்ள இடத்துக்கு அதற்குக் காவலாகவுள்ள தேனீயினங்கள் யாவும் வந்து சேரும். அரசியோடு வரும் **ஆண்** ஈக்களையும், **தொழிலாள** ஈக்களையும் வலையால் எளிதிற் பிடிக்கலாம்.

ஆனால் அரசியைப் பிடித்துக் கூட்டில் அடைப்பது எளிதன்று. தேள் கொட்டுவது போல, தேனீயும் கொட்டும். அது மிகவும் கடுக்குமாயினும் எடுத்த முயற்சியை விடலாகாது. புகையிடுவதால் கடிப்பது குறைவாகலாம். அரசியோடு தேனடைகளையும் பூச்சி அறைகளையும் எடுத்து மரக்கூட்டினுள் வைத்து விட்டால், அக்கூடே தேனீக்களுக்கு உறைவிடமாய் விடும். பிறகு இக்கூட்டிலே தேன் திரட்டுவது மிக எளிதாகும். அரசியை அறிவது முதலில் எளிய செயலன்று. சிறிது பழகிய பிறகு அதன் உருவத்தாலும், அதற்கு அமைந்த காவலாலும் அறிந்து கொள்ளலாம்.



மற்றோர் எளிய வழியாலும் தேனீக்களைப் பிடித்து வரலாம். இருபுறமும் துளைத்த பனைமரத்துண்டில், வாய் இல்லாமற் பலகையால் அடைத்து, ஒரு

புறத்திலே சிறு துளைகள் விட்டு, உட்புறம் மெழுகு தடவிக் காடுகளில் வைத்தால் தேனீக்கள் தாமாகவே அதில் வந்து குடியேறும். தேனடை வைப்பதை யறிந்த பிறகு, அதை எடுத்துக்கொண்டுபோய் வைத்துக்கொள்ளலாம். சிறிய பானை களின் உட்புறம் மெழுகு தடவிவைத்துத் தேனீக்களைப் பிடிப்பதும் உண்டு. இப்படிக் கொணர்ந்த தேனீக்களின் கூட்டத்தை, நமது கூட்டிலே வைத்து, நாம் நன்கு போற்றி வளர்க்க வேண்டும்.

தேனீக்கள் ஓயாது உழைத்துத் தேன் திரட்டுவது அரசியின் நன்மைக் காகவே யென்று நாம் அறியலாம். ஒரு கூட்டுக்கு ஓர் அரசியே உண்டு. வேறு சில பெண் ஈக்கள் இருப்பினும் அவை யாவும் அறைகளில் அடைபட்டிருக்கும். எப்பொழுதேனும் அரசி வெளியேறித் திரும்பவும் வராது என்று கண்டோ மானால், உடனே வேறொரு பெண் ஈயை அரசியின் நிலையில் வைக்கவேண்டும். ஏனெனில் அரசியில்லாத கூடு பாழாய்விடும். நாள்தோறும் பல நூற்றுக்கணக் கான முட்டைகளை யிடுவதும், நன்றாய்த் தின்று கொழுப்பதுமே அரசிக்கு அமைந்த வேலையாகும். ஆண் ஈக்கள் பெருஞ் சோம்பேறிகளாகும். தொழிலாள ஈக்களே இப் பெருங் குடும்பத்துக்காக உழைக்கின்றன.

இப்படி அமைந்த தேனீ வீடுகள் மாதம் இருமுறை தேன் தரும். அரசி யின் வாழ்நாள் மூன்று வருடங்களாம். அக்காலமெல்லாம் தேன் அகப்படும். மூப்பு மிக்க அரசியைக் கொன்று, தேனீக்களே புதிய அரசியை அமைக்கும் காட்சியையும் பார்க்கலாம். இங்ஙனம் மரக்கூடுகளிலமைந்த தேன் அடைகளை யெடுத்துத் தேனெடுக்கும் பொறியில் வைத்துச் சுற்றித் தேன் எடுக்கவேண்டும். அடைகளை எடுக்குமுன் அடைகள் மூடுண்டிருப்பதைக் கவனித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.



மலர்களிலே தேன் தேடும் இப்பெரும் குடும்பம் மர நிழல்களிலேயே நன்கு வளரும். காலை வெய்யில் படும்படி கூடுகளை வைத்தால், அவை சுறுசுறுப்பாய் தேன் தேடப் புறப்படும். இவை திரட்டிய தேனை நாம் எடுக்கப் புகுங்கால் தொழிலாள ஈக்களை ஓட்டிவிடுவது நல்லது. இவ்வளவு பாடுபட்டுத் தேடிய தேனை நமக்குக் கொடுப்பதில் இவை மடியாவண்ணம் பார்த்துக் கொள்வது நமது கடமையாகும். ஒரு கூட்டிலேயே பல முறை தேன் எடுக்க எளியவழி உண் டென்றால், ஆயிரக் கணக்கிலே இச்சிறிய உயிர்களைக் கொன்று, நாம் ஏன் பாவத்தைத் தேடவேண்டும்?

தேனை மண் பாண்டங்களிலும், கண்ணாடிப் பாத்திரங்களிலும் வைப்பது நலம். ஈரம் பட்டால் தேன் புளித்து நுரை தோன்றிக் கெட்டுப்போகும்.

ஆகவே தேனை நன்றாய் மூடி வைக்க வேண்டும். தாமரைப்பூ, வேப்பம்பூ, முதலிய பூக்களின் தேன் மருந்துக்கு மிகவும் சிறந்ததாகும். எவ்வகைப் பூவிலும் தேன் தேடிவரும் இயல்புள்ளது தேனீ. தேன் கூடுகளால் வரும் வருமானம் அதிகமில்லையே என்று எண்ணக்கூடாது. ஒரு கூட்டுக்கு ஒரு வருஷத்தில் முப்பது ரூபாய்வரை கிடைக்கும். ஆரம்பத்தில் சிறிது சிரமம் ஏற்படலாமே தவிர, பின்னல் யாதொரு கஷ்டமுமின்றி வருமானம் கிடைக்கும். பத்துக்கூடு வைத்து வளர்க்கும் வேளாளன், தன் வேளாண்மைக்கு இது மிக்க உதவியாயிருக்கக் காண்பான். கிராமங்களிற் செல்வம் பெருக, **தேனீ வளர்த்தல்** ஒரு சிறந்த வழியாம் என்பதைத் திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள **மார்த்தாண்டம்** என்ற ஊரிலே செய்து காட்டுகிறார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் பொழுது போக்காகச் சில கூடுகள் ஏற்படுத்தினாலும் தக்க வருவாய் கிடைக்குமென்பது திண்ணம். தேனீ வளர்த்தல் எளிதிற் செய்யக் கூடிய சிறந்த குடிசைத் தொழிலாகும்.

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :— சேகரி, கொட்டு, கசக்கு, உறைவிடம், வருவாய்.

II வாள், வாழ்; உரை, உறை—இவ்வார்த்தைகளின் அர்த்த வேறுபாடுகளைக் கூறி இம்மாதிரி இப்பாடத்தில் வந்திருக்கும் இன்னும் மூன்று வார்த்தைகளைக் கூறு.

III (1) தேனீக்கள் எத்தனை வகைப்படும்? (2) எங்ஙனம் எந்த விதமாய்த் தேனீக்களைப் பிடித்து வளர்க்கலாம்? (3) ஒரு சமுசாரி தேனீ வளர்ப்பது அவனுக்கு உபகாரமாயிருக்கிறது என்பதற்கு உன் சொந்த வாக்கியங்களில் காரணங்கள் கூறு.

இலக்கணம்

IV (1) இரண்டாம் வேற்றுமையாக மாற்றிச் சொல்லு:—பனை, வாழை, காளை, தழை, மழை, ஓலை, தலை, வலை, (2) மூன்றாம் வேற்றுமை உருபுகள், **ஆன், ஆல், ஒடு, ஓடு, உடன்.**

(உ-ம்) தீவினை**யான்** வந்தது இத் துன்பம்.
மரத்தை வா**ளால்** வெட்டினன்.
பசு**வொடு** கன்றும் வந்தது.
உன்**னோடு** நானும் வருகிறேன்.
கந்த**னுடன்** ராமனும் வந்தான்.

9. சிறுமியர் களிப்பு

(கும்மி)

பாகமாகச் செய்த பண்டமுண்போம்—நன்ருய்ப்
பக்குவம் வந்த பழங்களுண்போம்
தாகமானுல் பல பானகமும்—தாயார்
தந்திட உண்டு மகிழ்ந்திடுவோம். 1

காலத்துக் கேற்ற உடையணிவோம்—வாசம்
கட்டிய சந்தனம் பூசிடுவோம்
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து—மலர்
கூந்தலிற் சூட்டி யழகுசெய்வோம். 2

பந்துக ளாடிப் பழகிடுவோம்—கழல்
பாங்கியர் தம்மொடும் ஆடிடுவோம்
சந்தமெழக் கும்மி பாடிடுவோம்—சுற்றிச்
சப்பாணி கொட்டிச் சிரித்திடுவோம். 3

ஓடி ஒளித்துக் களித்திடுவோம்—நாங்கள்
ஒற்றை யிரட்டையும் வைத்திடுவோம்
நாடியே வட்டுக ளாடிடுவோம்—தோழி
நாணக் கண்பொத்தி நகைத்திடுவோம். 4

உன்னியெழும் ஊஞ்சல் ஆடிடுவோம்—கேட்போர்
உள்ளம் குளிரவே பாடிடுவோம்
சின்னஞ் சிறுவீடு கட்டிடுவோம்—அதில்
சித்திர வேலைகள் செய்திடுவோம். 5

பத்துப் பசுக்களெம் வீட்டிலுண்டு—நல்ல
பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை
நித்தம் சுகமாக வாழ்ந்திடுவோம்—இந்த
நீணிலத் தெம்மையொப் பாருமுண்டோ. 6

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

10. உப்பும் சர்க்கரையும்

பிதா	சிறிதும்	கரிக்கும்	தேற்றினர்	தாராளமாய்	தொலேந்தாள்
புறம்	நடித்து	புத்திரன்	பொறுமை	மார்க்கமாய்	பரிமாறப்பட்டன
மூத்த	மயங்கி	வஞ்சகம்	அகன்றுன்	வெளிப்பட்டு	
சுகமே	விருந்து	அடக்கம்	உட்கருத்து	அவற்றையும்	

காஞ்சி நாட்டில் **நந்தகோபாலன்** என்ற ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்குப் புத்திரன் இல்லாது இருந்தபோதிலும், மூன்று பெண்கள் இருந்தனர். அப்பெண்களில் மூத்த இருவரும் கர்வங்கொண்டவர்கள்; வஞ்சகம் நிறைந்தவர்கள்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள்; வெளிப் பகட்டு நிறைந்தவர்கள். ஆனல் கடைசிப் புதல்வியான **காமாக்ஷி**யோ, அடக்கமும் பொறுமையும் வாய்ந்தவள். புத்தியும் வித்தையும் அவளிடம் நிரம்பியிருந்தன. மூத்த பெண்கள் இருவரும் தங்கள் அகம்பாவத்தினல், ஆடம்பரம் சிறிதுமற்ற காமாக்ஷியை அவமதித்து வந்தனர். ஒரு வேலேக்காரியைப் போலவே அவளே நடத்தலாயினர். அவளுடன் பேசுவதும் இல்லே. ஆனல் காமாக்ஷி இதையெல்லாம் பொருட்படுத்தாது, அவர்களுடன் தாராளமாய்ப் பழகிவந்தாள். தனது தந்தைக்குச் செய்யவேண்டிய கடமைகளேத் தவருது செய்துவந்தாள். மூத்தோர் இருவருக்கும் தந்தையிடம் உள்ளன்பு சிறிதும் கிடையாது.

ஒருநாள் நந்தகோபாலன் தனது குமாரிகள் மூவரையும் அழைத்து, "புத்திரிகளே! நீங்கள் மூவரும் என்மேல் அளவுகடந்த அன்புடன் இருக்கிறீர்கள். ஆனல் உங்கள் அன்பு எத்தன்மையது என்று தெரியவில்லே" என்று கூறினன். மூத்தவர்கள் இருவரும் தங்கள் வஞ்சகத்தை வெளியிடாமல், தந்தையைச் சந்தோஷப்படுத்த எண்ணினர். அதன்படியே மூத்தவள், "தந்தையே! நான் சர்க்கரையை விரும்புவதுபோல் தங்களே விரும்புகிறேன்" என்று கூறினள். இரண்டாம் புத்திரி, "பிதாவே! நான் கரும்பை விரும்புவது போலத் தங்களே விரும்புகிறேன்" என்ருள். இவர்களுடைய வெளிவார்த்தைகளில் மயங்கிச் சந்தோஷித்த நந்தகோபாலன், காமாக்ஷியை நோக்கினன். ஆனல் காமாக்ஷியோ, "அப்பா! நான் உப்பை விரும்புவதுபோலத் தங்களே என்றும் விரும்புவேன்" என்று பணிவுடன் கூறினள்.

காமாக்ஷி இவ்வாறு கூறியதன் உட்கருத்தை யறியாத நந்தகோபாலன் கோபங்கொண்டான். "காமாக்ஷீ! உன்னே இத்தனே காலம் அருமையாய் வளர்த்தேனே. நீ சிறிதும் நன்றியற்று, உப்பைப்போல் என்னே விரும்புகிறேன் என்று கூறினய். உப்பு எவ்வாறு கரிக்குமோ அவ்வாறே நீயும் என்னே வெறுக்கிருய் போலும்! என்னே வெறுக்கும் நீ எனது அன்புக்கு பாத்திரமானவள் அல்லள்.

உடனே என் நாட்டைவிட்டு வெளியே போய்விடு" என்று கூறி அவளைத் துரத்தி விட்டான். காமாக்ஷி தொலைந்தாள் என்று மூத்தவர் இருவரும் சந்தோஷித்தனர்.

நாட்டைவிட்டு வெளியே துரத்தப்பட்ட காமாக்ஷி, ஒரு கானக மார்க்க மாய்ச் செல்லுகையில் வழிதவறி, திகைத்து அலைந்துகொண்டிருந்தாள். அச் சமயம் அங்கு வேட்டையாட வந்த அரசகுமாரன் ஒருவன் காமாக்ஷியைக் கண்டான். கண்டதும் அவள் யாரென விசாரித்தான். காமாக்ஷியும் நடந்ததைக் கூறினாள். நடந்த விஷயம் யாவையும் கேட்ட அரசகுமாரன், அவளைத் தன் நாட்டிற்குக் கூட்டிச் சென்றான். சில நாட்கள் சென்ற பின் காமாக்ஷியைத் தானே விவாகம் செய்துகொண்டான்.

மூத்தபெண்கள் இருவரும் பகர்ந்த வஞ்சக வார்த்தைகளை மெய்யென நம்பிய நந்தகோபாலன் அவர்களை மிகவும் அன்புடன் கவனித்து வந்தான். இரு அரசகுமாரர்களுக்கு அவர்களை மணம்செய்து கொடுத்தான். பிறகு தன் நாட்டை இரண்டாய்ப் பகிர்ந்து அவர்கள் இருவருக்கும் கொடுத்தான். அவன் இவ்வாறு செய்யும்வரை மூத்தவர் இருவரும் அவன்மேல் மிகுந்த அன்புடையவர்கள் போல் நடித்துவந்தனர். ஆனால் நாடு கிடைத்ததும் அவர்கள் நந்தகோபாலனைக் கவனிக்கவேயில்லை. தங்கள் கணவர்களுடன் கூடி, தகப்பனைக் கொடுமையாய் நடத்தவும் துணிந்தனர்.

ஆதியில் அன்பு காட்டிய மூத்த பெண்கள் இருவரும் தன்னைத் துன்புறுத்து வதைக் கண்ட நந்தகோபாலன், தேச யாத்திரை போய்வருவதாகக் கூறி, அந் நாட்டைவிட்டு அகன்றான். வழியில் காமாக்ஷியின் கணவன் அரசாண்ட நகரை யடைந்தான். காமாக்ஷியின் கணவன், நந்தகோபாலனைக் கண்டதும் உபசரித்துத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். தன் கடைசி மகள் அங்கு இருப்பதை நந்தகோபாலன் அறியான். காமாக்ஷியோ தந்தை வந்ததை யறிந் தவளாய், விருந்துக்கு ஏற்பாடு செய்தனள். நந்தகோபாலன் விருந்துண்ண உட்கார்ந்ததும், முழுதும் சர்க்கரையால் செய்யப்பட்ட தித்திப்பு பண்டங்களே பரிமாறப்பட்டன. அவனும் அவைகளைச் சிறிது நேரம் ஆவலுடன் தின்றான். பிறகு அவனால் தித்திப்புப் பண்டங்களைத் தின்னமுடியவில்லை. வேறு பதார்த் தங்களை விரும்பிக் கேட்டான். அப்பொழுதும் தித்திப்புப் பண்டங்களே பரிமாறப் பட்டன. அவற்றையும் அவனால் உண்ணமுடியவில்லை.

முடிவில் அவன் மனம் வருந்தி, "ஐயோ! உப்புப் பண்டங்கள் ஒன்றும் இல்லையா?" என்று வாய்விட்டுக் கதறினான். அப்பொழுது காமாக்ஷி அங்கு வந்து, "தந்தையே! முன்பு தாங்கள் கரும்பையும் சர்க்கரையையும் தானே விரும்பி னீர்கள். உப்பை வெறுத்தீர்களே! இப்போது உப்பை ஏன் விரும்புகிறீர்கள்?" என்று கேட்டனள். இது கேட்ட நந்தகோபாலன் தன் மகளாகிய காமாக்ஷியை

அப்பொழுதே அறிந்துகொண்டான். உடனே அவன் சந்தோஷித்து, ''காமாக்ஷி! முதலில் நான் விரும்பிய தித்திப்புப் பண்டங்கள் எவ்வாறு

இப்பொழுது எனக்கு வெறுப்பாயினவோ, அவ்வாறே நான் விரும்பிய என் மூத்த பெண்கள் இருவரும் என் நாட்டைப் பிடுங்கிக் கொண்டு என்னைக் கொடுமையாய் நடத்தினர். நானும் அவர்களை வெறுத்து வந்து விட்டேன். இப்போது உப்பை எவ்வளவு ஆவலுடன் விரும்புகிறேனோ அவ்வளவு அன்புடன் உன்னையும் விரும்புகிறேன். இதையறியாது உன்னைத் துரத்தியதற்காக என்னை மன்னிப்பாயா?'' என்று கூறிக் கண்ணீர்விட்டு அழுதான்.

காமாக்ஷியும் அவள் கணவனும் நந்தகோபாலனைத் தேற்றினர். பிறகு காமாக்ஷியின் கணவனான அந்நாட்டரசன், தன் படைகளுடன் சென்று, நந்தகோபாலனது நாட்டை ஜயித்து, அவனைத் திரும்பவும் அரசனாக்கினான். மூத்த பெண்கள் இருவரும் அவர்களுடைய புருஷர்களும் நாட்டை விட்டு இருந்தவிடம் தெரியாது ஓடிவிட்டனர். காமாக்ஷியும் அவள் கணவனும் சுகமே வாழ்ந்தனர். இக்கதையினால் 'சர்க்கரையைக் காட்டிலும் உப்பே மனிதர்க்கு அவசியமானது' என்பதும், 'உள்ளன்பு உள்ளவர் வெளியே காட்டிக் கொள்ளார்' என்பதும் நன்கு விளங்கும்.

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—கரி, பகர், அகல், உட்கருத்து, தொலை.

II எதிர்ப்பதங்கள் சொல்லக்கூடிய வார்த்தைகள் ஐந்து எடுத்து எழுதி அவைகளின் எதிர்ப்பதங்களையும் எழுது.

III இக்கதையைச் சுருக்கி இருபது வரிகளில் எழுது.

IV சந்தர்ப்பம் கூறு :— (1) ''உடனே என் நாட்டை விட்டு வெளியே போய் விடு'' (2) ''ஐயோ! உப்புப் பண்டங்கள் ஒன்றுமில்லையா?'' (3) ''சர்க்கரையைக் காட்டிலும் உப்பே மனிதர்க்கு அவசியமானது''

இலக்கணம்

V நான்காம் வேற்றுமையின் **உருபு 'கு'**. எழுவாயுடன் 'கு' உருபு சேரும்போது நான்காம் வேற்றுமையாக மாறுகிறது.

கந்தன் + கு = கந்தனு**க்கு**. கந்தனுக்கு ராமன் மாமன் ஆவான்.

பசுவுக்குத் தீனி போடு. இப்படியே நான்காம் வேற்றுமைப் பொருள் படும்படி ஐந்து பெயர்ச்சொற்களை மாற்றி எழுது. இதுபோல் மற்ற வேற்றுமை உருபுகளையும் படித்துக்கொள்ளவும்.

11. கம்பரும் வம்பரும்

புவி	அவை	நூல்கள்	கலைமகள்	துயரத்தை	எழுந்தருளிய
எய்தி	செறிவு	இன்னார்	விருதுகள்	வித்துவான்	தலைசிறந்தவர்
கோரி	கருத்து	பொருத	மேன்மை	இல்லத்தில்	அரங்கேற்றல்
வெகு	படலம்	ஒழிமின்	வெளியார்	களிப்புடன்	மனத்தாங்கல்
சுவடி	புழுங்கி	ஆற்றாது	இதிகாசம்	பணிந்தான்	இராமாயணம்
நீத்து	கவிகள்	அநாதை	மண்டபம்	பிரியாவிடை	அநுமதியுங்கள்
தடை	ஒருங்கு	வம்புரை	இடுக்கண்	ஏறக்குறைய	கம்பங்கொல்லை
ஒற்றார்	பரிதாப	கவிநயம்	தாம்பூலம்	வாய்த்திலது	நற்சாட்சிப்பத்திரம்
தீண்டி	அமயம்	செய்யுள்	அமர்ந்தார்	அனுக்கிரகம்	அடைப்பைக்காரன்
சிற்றூர்	பொருள்	ஐயன்மீர்	சூழ்ச்சிகள்	பரிவாரங்கள்	

நம் தமிழ் நாட்டுக் கவிகளில் தலைசிறந்தவர் **கம்பர்**. அவரது பெயரும் புகழும் சிறப்புற்றோங்கி விளங்குகின்றது. **வால்மீகி முனிவர்** வடமொழியில் எழுதிய **இராமாயண** இதிகாசத்தைத் தமிழில் அழகும் பொருளும் அமைந்த செய்யுளாகவே பாடித் தமிழ்மொழிக்கு அழியாப் புகழ் அளித்தவர் இவரே. இவர் ஏறக்குறைய எண்ணூறு வருடங்களுக்கு முன், சோழ நாட்டிலே **திருவழுந்தூர்** என்னும் சிற்றூரிற் பிறந்தார்.

இவரது பிறப்பையும், இவருக்குக் கம்பர் என்ற பெயர் ஏற்பட்டதையும் பற்றிப் பல கதைகள் சொல்லப்படுகின்றன. திருவழுந்தூர் ஆலயத்தில் ஒரு கம்பத்தடியில் அநாதையாய்க் கண்டெடுக்கப்பட்டவராதலின், இவருக்குக் கம்பர் என்னும் பெயர் வாய்ந்தது என்று சிலர் கூறுகின்றனர். மற்றும் சிலர், 'அவர் கம்ப நாட்டரசனது புத்திரராதலால், கம்பர் என்ற பெயர் வந்தது' என்கின்றனர். வேறு சிலர், 'தமது ஆசிரியரது கட்டளைப்படி அவர் கம்பங் கொல்லையைக் காத்ததனால் அவருக்கு இப் பெயர் ஏற்பட்டது' என்று சொல்லுகின்றனர். இது

எவ்வாருயினும், இவரது பெயர் கம்பர் என்பது நிச்சயமே. வயது வந்ததும், **திருவெண்ணெய்நல்லூரி**லிருந்த பெருஞ் செல்வ வந்தரான **சடையப்ப வள்ளல**து ஆதரவு இவருக்குக் கிடைத்தது. அவரது புத்திரருடன் பள்ளிக்குச் சென்று கல்வி பயின்ருர். கம்பர் வெகு விரைவில் பல நூல்களையும் கற்றுத் தேர்ந்து, தெய்வ அனுக்கிரகமும் பெற்ருர். இளவயதிலேயே அழகிய கவிகள் பாடும் திறமையும் பெற்ருர்.

கம்பரது கல்விப் பெருமையையும், கவித் திறமையையும், சிறந்த புகழையும் கேள்வியுற்ற **குலோத்துங்க சோழன்**, இவரைத் தனது சமஸ்தான வித்துவான் ஆக்கினன். கம்பரும் சோழனது சபைக்கும், தமிழ் உலகிற்கும் ஒரு திலகமாய் விளங்கினர். ஒரு சமயம் குலோத்துங்கன், வடமொழியிலுள்ள இராமாயணக் காவியத்தைத் தமிழில் பாடல்களாகச் செய்யுமாறு இவரை வேண்டினன். இவரும் அவ்வாறே அதனை விரைவிற் செய்து முடித்தனர். சோழ மன்னனது சமஸ்தானத்திலுள்ள புலவர் பலரும், குலோத்துங்கனும் கம்பரது கவிநயத்தைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடினர்.

ஆயினும் கம்பர் வெளியாரிடம் தமது இராமாயணத்துக்கு நற்சாட்சிப் பத்திரம் பெறக் கருதினர். அந்நாளில் **சிதம்பரத்தில்** வாழ்ந்த **தில்லைமூவாயிரவர்** தமிழில் வல்லவராய் விளங்கினர். அவர்களது நற்சாட்சிப் பத்திரம் பெறுவது, ஒரு காவியத்துக்கு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. ஆதலின் கம்பரும் சிதம்பரம் சென்று, அவர்களில் முதன்மையானவர்களைக் கண்டு, தாம் கோரிவந்த காரியத்தைக் கூறினர். இவரது மேன்மையையும், புகழையும் அறியாத அவர்கள், "ஐயா! நாங்கள் மூவாயிரவரும் ஒருங்கு சேர்ந்து உமது காவியத்தைக் கேட்டால்தான் நற்சாட்சிப் பத்திரம் கொடுக்க இயலும். மூவாயிரவரும் ஒன்று கூடுவது மிகவும் கடினம். ஆதலால் உமது கவி இங்கு அரங்கேருது" என்று வம்புரை யாடினர். கம்பர் அங்கு வெகு நாட்கள் காத்திருந்தும், அவர்கள் ஒன்று சேரும் சமயம் வாய்த்திலது. அதன்மேல் கம்பர் மனம் புழுங்கி, ஆங்குக் கோவிலில் எழுந்தருளியுள்ள **கோவிந்தராஜப் பெருமாளிடம்** சென்று முறையிட்டனர்.

அன்றிரவில் பெருமாள் கம்பரது கனவிற்ருேன்றி, "அன்பனே! நாளை இந்த மூவாயிரவரில் ஒருவரது குழந்தை அரவந் தீண்டி இறக்கும். அவ்வமயம் எல்லோரும் ஒன்று கூடுவர். நீயும் அங்குச் சென்று, உனது இராமாயணத்தில் நாகபாசப் படலத்திலுள்ள பாடல்களைப் படி. அக்குழந்தை உயிர்த்தெழும்; உன் காவியமும் அரங்கேறும். உனக்கு நற்சாட்சிப் பத்திரமும் எளிதில் கிட்டும்" என்று கூறி யருளினர். மறு தினம் அவ்வாறே மூவாயிரவரில் ஒருவரது குழந்தை அரவு தீண்டி இறந்ததால், அவ்வில்லத்தில் அனைவரும் கூடினர். அச்சமயம் கம்பர் அங்குச் சென்று, தமது காவியத்தைக் கேட்குமாறு வேண்டினர்.

இது கேட்ட மூவாயிரவர் தமது அப்போதைய பரிதாப நிலைமையை யறிவித்தனர். அதற்குக் கம்பர், "ஐயன்மீர்! இக்காவியத்திலுள்ள சில பாடல்களைப் படிக்க அனுமதியுங்கள். கடவுள் செயலால் இறந்த குழந்தை உயிர் பெற்று எழும். வருத்தம் ஒழிமின்" என்று கூறினர். உடனே அவர்கள் ஆச்சரியமடைந்து, "ஐயா! தாம் கூறியபடி இக்குழந்தை உயிர்த்தெழுமாயின், நாங்கள் களிப்புடன் உமது காவியத்துக்கு நற்சாட்சிப் பத்திரம் அளிக்கத் தடையில்லை" என்றனர். கம்பரும் மன மகிழ்ந்து தமது இராமாயணச் சுவடியை அவிழ்த்து, நாகபாசப் படலத்திலுள்ள பாடல்களிற் சிலவற்றை வாசித்தார். இறந்த குழந்தையும் உடனே உயிர்த்தெழுந்தது.

இதைக்கண்ட மூவாயிரவரும் அளவற்ற மகிழ்வெய்தி, கம்பரது காவியம் முழுதும் கேட்டுப் பரவச மடைந்தனர். அவர்கள் யாவரும் கம்பரை நோக்கி "புவியரசர் போற்றும் கவியரசரே! உமது தெய்வத் தன்மை பொருந்திய கவிநயத்தை யறியாது, இவ்வளவு காலம் உம்மைக் காக்கவைத்து வம்பு செய்தோமே. எங்களை மன்னிப்பீராக" என்று கூறி வேண்டி, நற்சாட்சிப் பத்திரமும் கொடுத்தனுப்பினர். பின்னர் கம்பர் பலவிடங்களுக்கும் சென்று நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றனர். ஸ்ரீரங்கத்துக்கும் சென்று, அங்கு ஆயிரக்கால் மண்டபத்தில் கூடிய புலவர் சபையில் தமது இராமாயணத்தை அரங்கேற்றினர். அங்குக் கவிச் சக்கரவர்த்தி யென்னும் பட்டமும் பெற்றார். அதன்பின் இவர் சோழநாடு சேர்ந்து, அரசனல் நன்கு மதிக்கப்பட்டு வாழ்ந்தார்.

இவ்வாறு இருக்கும் நாளில் ஒருநாள், குலோத்துங்கனுக்கும் கம்பருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. அதனல் கம்பர் சோழநாட்டை விட்டுப் புறப்பட்டு, பல இடுக்கண்களுக் குள்ளாகி, முடிவில் சேரநாடு சேர்ந்தார். அங்கு இவர், தாம் இன்னர் எனக் கூறிக் கொள்ளாது, சேர அரசனுக்கு அடைப்பைக்காரனய் அமர்ந்தார். ஒரு சமயம் சேரன், கம்பராமாயணத்தை வாசித்துப் பொருள் கூறும்படி தனது சபையிலுள்ள வித்துவான்களுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே அவர்களும் இயன்றவாறு பொருள்கூறி வந்தனர். கம்பரது கவிநயத்தையும் பொருள் நயத்தையும் அறியாத அப்புலவர்கள் ஒருநாள் ஒரு கவிக்குச் சரியாய்ப் பொருள் கூறவில்லை. அப்போது அரசனுக்குத் தாம்பூலம் கொடுத்துக் கொண்டிருந்த கம்பர் புலவர்களை நோக்கி, 'நீங்கள் பொருள் கூறியது சரியல்ல' என்று கூறினர்.

அது கேட்ட சேரன் கம்பராகிய அடைப்பைக்காரனை நோக்கி, "எனது புலவர்கள் கூறிய பொருள் சரியல்லவென்று எக்காரணத்தாற் கூறுகின்றாய்? அங்ஙனமாயின் நீ இக்கவிக்குச் சரியான பொருள் கூறுவையோ?" என்று வினவினன். அதற்குக் கம்பர், "அரசே! நான் சிலகாலம் கம்பரிடம் அடைப்பைக்காரனய்

இருந்திருக்கின்றேன். அவர் இக்கவிக்குப் பொருள் கூற யான் கேட்டிருக்கின்றேன்'' என்று கூறி அக் கவிக்குச் சரியான பொருள் கூறினர். இவரது திறமையைக் கண்டு வியந்த சேரன் அன்று முதல் இவர் அடைப்பை தாங்குவதை நிறுத்தி, இவருக்குப் பல மரியாதைகள் செய்து தனது நண்பன் போலவே நடத்தி வந்தான்.

அடைப்பைக்காரனுக்கு வாய்த்த பெருமையையும், தமக்கு நிகழ்ந்த சிறுமையையும் கண்டு பொறாத புலவர்கள், பல சூழ்ச்சிகள் செய்து அடைப்பைக்காரனை அவமதிக்க எண்ணினர். ஆனால் கம்பரோ, கலைமகளின் அருளினால், அவர்களது சூழ்ச்சிகளை வெளிப்படுத்தி, தாம் கம்பர் என்பதையும் நிரூபித்துக் காட்டினர். உடனே சேரனும் மனம் வருந்தி ''புலவர் பெருமானே! உம்மை அடைப்பைக்காரனாய் வைத்து வேலை வாங்கிய பாவத்தை எவ்வாறு தொலைப்பேன்!'' என்று கூறி அவரைப் பணிந்தான். கம்பரும் சேரனைத் தேற்றி, ''அரசே! மனம் வருந்த வேண்டாம். உமது மனம் சாந்தமடையும்படி செய்ய ஒரு சமயம் வாய்க்கும். அப்பொழுது வேண்டியன செய்யலாம்'' என்று கூறினர்.

இதற்கிடையில் கம்பர் இல்லாததால் குலோத்துங்கன், துயில், உணவு நீத்து, வருந்துவானாயினன். இவரைத் தேடப் பல திசைகளிலும் ஒற்றர்களை அனுப்பினான். கம்பர் மறைந்து வாழ்ந்து வந்ததால், இவர் இருப்பிடம் சோழனுக்குத் தெரிந்திலது. முடிவில் கம்பர் சேரனிடம் இருப்பதையறிந்த குலோத்துங்கன், தனது மந்திரிமார் பலரையும், கம்பரை அழைத்துவருமாறு பணித்தனன். அவர்களும் சேரனது அவையடைந்து, கம்பரது பிரிவாற்றாது சோழன் படுந்துயரத்தை விரித்துரைத்தனர். 'தாயைக் காணாது தவிக்கும் சேய்' போலக் கம்பர் தவிக்கலாயினர். சோழன்பால் விரைந்து செல்ல வேண்டுமெனத் துடித்தனர். இதுகண்ட சேரனும் அவருக்குப் பிரியாவிடையளிக்கச் சம்மதித்தான்.

சேரனுடனும், சேரன் அளித்த விருதுகள், பரிசுகள் முதலியவைகளுடனும், பரிவாரங்களுடனும் கம்பர் கவியரசராய்ச் சோழநாடு சேர்ந்தார். இவர் வரவையறிந்த குலோத்துங்கனும், சகல மரியாதைகளுடனும் இவரை எதிர்கொண்டழைத்தனன். கம்பரது அடிபணிந்து தனது குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினன். அதன் பின் குலோத்துங்கனும் கம்பரும் 'பாலும் நீருமென' இணை பிரியாது நெடுங்காலம் வாழ்ந்து வந்தனர். இன்றுவரை கவிநயத்திலும், அழகிய கருத்திலும், பொருட் செறிவிலும் கம்பருக்கிணையாக எவரும் இருந்ததில்லையென்று திண்ணமாய்க் கூறலாம்.

பயிற்சியும் கேள்வியும்

I கம்பரும் வம்பரும் பேசிக்கொண்ட சம்பவங்களைச் சம்பாஷணையாக எழுது.

II இப்பாடத்திலிருந்து நீ கற்றுக்கொள்ளும் நீதிகள் ஐந்து கூறு.

12. பண்டித ஜவஹர்லால் நேரு

மணிமுடி	உள்ளன்பு	ஈடுபட்டு	பாட்டாளி	இராஜதந்திரி
இயற்கை	வெள்ளேயர்	பிரபலமான	மகா சபை	உள்ளம்
வாய்ந்த	பாரிஸ்டர்	தேசப்பணி	சீடர்	சுக வாழ்வு
வழக்கறிஞர்	கசடற	அரசியல்	உபதேசங்கள்	தியாக மணி
குமாஸ்தா	பொது அறிவு	நோய்வாய்ப்பட்டு	பாகுபாடு	திருவருள்

'இந்தியாவின் மணிமுடி' என்று சிறப்பிக்கப்பெறும் **காஷ்மீரம்** இயற்கையழகுக்கு இருப்பிடமாகும். வானளாவிய மலேச் சிகரங்களில் மேகங்கள் சூழ்ந்து விளங்கும் இயற்கைக் காட்சியையும், மலேவளங்கள் நிறைந்த எழில் மிகுந்த பல இடங்களேயும் அங்கே காணலாம். இத்தகைய அழகு வாய்ந்த காஷ்மீரத்தில், பண்டிதர் என அழைக்கப்படும் பிராமண குலத்தில், 'மனிதருள் மாணிக்கம்' எனப் பெறும் **பண்டித ஜவஹர்லால் நேரு** தோன்றினர். இவரது முன்னேர் வெகு காலத்துக்கு முன்பே காஷ்மீரத்தைவிட்டு வெளியேறி டில்லியில் குடியேறினர். பின்னர் இவரது தந்தை **மோதிலால் நேரு இலாகாபாத்தில்** குடியேறி, வழக்கறிஞர் தொழிலே நடத்திப் பேரும் புகழும் பெருஞ் செல்வமும் பெற்று விளங்கினர்.

பண்டித ஜவஹர்லால் நேரு, இலாகாபாத்தில் 1889-ம் வருடம் நவம்பர் மாதம் 15-ம் தேதியன்று, மோதிலால் நேருவுக்கும் **சுவரூபராணிக்கும்** மூத்த புதல்வராகப் பிறந்தார். இவருடைய சகோதரிகள் இருவரில் **விஜயலக்ஷ்மி பண்டிட் அம்மையார்** உலகப் புகழ் பெற்றவர். நேரு சிறு வயதிலேயே மிகுந்த கவனமும் சுறுசுறுப்பும் உள்ளவர். அக்காலத்திலேயே இவரது தந்தையாரின் குமாஸ்தாவிடம் பல விஷயங்கள் தெரிந்துகொண்டார். அவற்றில் முக்கியமானவை தேசாபிமானத்தை யூட்டும் இந்திய நாட்டுக் கதைகளே! அந்த குமாஸ்தாவிடம் இவர் மிகுந்த உள்ளன்புடன் பழகி வந்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை ஒரு வெள்ளேயரிடம் வீட்டிலேயே கற்ருர். இந்தியாவில் போதிய கல்வி கற்றபின், நேரு பதினேந்தாவது வயதில் உயர்தரக் கல்வி கற்க இங்கிலாந்து சென்ருர். அங்கு இவர் 'பாரிஸ்டர்' பரீட்சையில் தேர்ச்சி பெற்று 1912-ம் வருடத்தில் இந்தியா திரும்பினர். கல்வியைக் கசடறக் கற்ற இவர், பொது அறிவு பெறப் பல நூற்றுக்கணக்கான நூல்களேயும் பத்திரிகைகளேயும் படிப்பதுண்டு. பிற நாட்டைப் பற்றிய நூல்களேயும் படித்து, அந்நாட்டு விஷயங்களேயும், பேரறிஞரது கருத்துக்களேயும் நன்கறிந்தார். இதனலேயே இன்று சிறந்த அறிஞராக விளங்குகிருர்.

இங்கிலாந்திலிருந்து திரும்பியதும், ஜவஹர்லால் இலாகாபாத்தில் வக்கீல் தொழில் நடத்த ஆரம்பித்தார். 1916-ம் வருடத்தில் இவருக்கும் கமலா அம்மை



யாருக்கும் திருமணம் நடந்தது. இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப் பெண் குழந்தையே இப்போது புகழ்பெற்று விளங்கும் இந்திரா நேரு அம்மையார். இவரும் தமது தந்தையைப் போலவே, இங்கிலாந்து சென்று கல்வி கற்றுத் திரும்பி, மணம் செய்து கொண்டு இனிது வாழ்ந்து வருகிறார். தந்தையுடன் தேசப்பணியிலும் ஈடுபட்டு உழைக்கிறார்.

பண்டிதரின் மனம் வக்கீல் தொழிலில் ஈடுபடவில்லை. தேச முன்னேற்றத்திற்காக உழைக்கவே விரும்பினார். சில ஆண்டுகள் இலாகாபாத் நகரசபைத் தலைவராக இருந்தார். அச்சமயம் அந் நகரத்தை பல வகைகளிலும் சீர்திருத்தி, ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார். இவரது தந்தையார் பிரபலமான வக்கீல். மாதந்தோறும் பல்லாயிர ரூபாய்கள் சம்பாதித்தார். ஒரு சிற்றரசரைப் போலவே சுகவாழ்வு வாழ்ந்து வந்தார். பிறகு தேச சேவை செய்யக் காங்கிரஸிற் சேர்ந்து வக்கீல் தொழிலை விட்டார். சுகவாழ்வைத் துறந்து தேசத்திற்காகச் சிறை சென்றார். இவரது குடும்பமே தேசப் பணியை மேற்கொண்டது.

ஜவஹர்லால் நேருவும் தேசத்தொண்டு செய்ய முன் வந்தார். 1920-ம் ஆண்டில் சிறை புகுந்தார். அது முதல் இரவு பகலாக ஓய்வு ஒழிவு இல்லாது இந்திய நாட்டுக்காகவே உழைத்து வருகிறார். பல ஐரோப்பிய நாடுகளையும் சுற்றிப் பார்த்து, அவைகளின் அரசியல் முறைகளை அறிந்து வந்தார். அதனால் இவரது அரசியல் அறிவு சிறப்புற்றோங்கியது. இவர் ஏழு முறை சிறைவாசம் செய்திருக்கிறார். சிறையிலிருந்த காலத்தில் பல அரிய நூல்களை எழுதினார். இவரது சகோதரி விஜயலக்ஷ்மி பண்டிட் அம்மையாரும், இவரது

மனைவி கமலா நேரு அம்மையாரும் தேசத்தொண்டு செய்து சிறை புகுந்தனர். கமலா நேரு அம்மையார் சிறையில் நோய்வாய்பட்டு இறந்தார். ஜவஹர் தமது மனைவி இறந்த துயரால் வருந்திய போதிலும், தேசத்தொண்டை மறக்கவில்லை. இவர் மூன்று முறை காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக இருந்து சிறந்த தொண்டு செய்தார்.

நேரு மகாத்மா காந்தியவர்களின் முக்கிய சீடர். அவரது உபதேசங்களையும், எண்ணங்களையும் செய்கையில் நடத்திக் காட்டிய தீரர். தேசத் தொண்டில் முன்னணியில் நின்று பாடுபடும் வீரர். ஏற்றத் தாழ்வைக் கனவிலும் கருதாதவர். சாதி மத பேதமில்லாதவர். ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு பாராட்டாதவர். யாவருடனும் தாராளமாகப் பழகுவார்; இனிமையாகப் பேசுவார். இவர் ஏழைமக்களின் அன்பர்; பாட்டாளிமக்களின் நண்பர்; எவ்வித வேற்றுமையையும் விரும்பாதவர். சிறந்த வீரனுக்கு வேண்டிய துணிவும், இராஜ தந்திரிக்கும் வேண்டிய அரசியல் அறிவும் வாய்ந்தவர். அன்பும் அருளும் உள்ள உள்ளம் உடையவர். தேசப்பணிக்காகத் திரண்ட செல்வத்தையும் சுகவாழ்வையும் துறந்த குடும்பத்தில் தியாக மணியாய் விளங்கும் ஜவஹர்லால், நமது இந்திய யூனியனின் பிரதம மந்திரியாய் இருந்து தொண்டு செய்கிறார். 'நாட்டின் நலனுக்காகவே அவர் வாழ்கிறார்' என்று திண்ணமாய்க் கூறலாம். எல்லாம் வல்ல இறைவன் திருவருளால், இவர் நீண்டகாலம் சுகவாழ்வு வாழ்ந்து, நம் இந்திய மக்களுக்குச் சிறந்த வழி காட்டியாக விளங்குவாராக!

13. ஆறு

(கும்மி)

கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி—எங்குமநான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்.
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சிப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளிரப் பயிர் கண்டுவந்தேன்.
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன். 3

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிறப்பிவந்தேன்.
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன். 5

பஞ்சை யரைத்துநூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்.
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற்—குழாய்
நீராகவும் சென்று பாய்ந்துவந்தேன். 6

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்.
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன். 7

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்.
நில்லும் எனக்கினி நேரமில்லை— இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா! 8

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

14. அபு பகர்

ஆப்த வாயில்	தனயன்	மீட்டினர்	பொறுக்காத	ஜீவித்திருந்தார்
வாதம் வரவை	தோல்வி	மூண்டன	ஆளாக்கினர்	கண்ணியமான
வாக்கு வாசிகள்	சம்பவம்	தனவந்தர்	எதிர்கொண்டு	நேராவண்ணம்
சிலந்தி முதிர்ந்த	வென்றார்	சித்திரவதை	துன்புறுவதை	இருதிறத்தார்க்கும்

சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அரேபியாவில் அபு பகர் என்ற முகம்மதிய குரு ஒருவர் இருந்தார். அவர் மெக்கா என்னும் புண்ணிய நகரில் ஒரு கண்ணியமான குடும்பத்திற் பிறந்தவர். இளமையிலேயே அவர் கல்வியில் தேர்ச்சியடைந்தார். எப்பொழுதும் புத்தகம் படித்துக்கொண்டேயிருப்பார். வாதம் செய்வதிலும் பிரசங்கம் செய்வதிலும் அவர் நிபுணர். சிறு வயதிலேயே கவிபாடும் திறமை அவருக்கிருந்தது.

அக்காலத்தில் அரேபியா தேசத்தில் முகம்மது நபி என்னும் தீர்க்கதரிசி தோன்றி, முகம்மதிய மதத்தை அந்நாட்டு மக்களுக்கு உபதேசிக்கலானார். முகம்மது நபி, அபு பகரின் பால்ய நண்பர். முகம்மதிய மதத்தைப் பரவச் செய்து வருங்கால் முகம்மது நபி அபு பகரைச் சந்தித்தார். தம்முடைய தோழராகிய அபு பகரையும், அம் மார்க்கத்தின் உண்மையையும் நோக்கத்தையும் அறிவித்து, அதில் சேர்த்தார். அது முதல் அவர் முகம்மது நபியிடம் உள்ளன்பு கொண்டு, அவருடனே இருந்து வந்தார். அபு பகர் ஒரு பெரிய தனவந்தர். அவருக்கு மிகுதியான நிலங்களும், ஆடு மாடுகள், ஒட்டகங்கள், குதிரைகள் முதலியவைகளும், பணமும் இருந்தன. அவர் தமது செல்வத்தில் பெரும்பாகத்தை ஏழை எளியவர்களுக்கும், மத விஷயங்களுக்கும் அளித்து வந்தார்.

அந்நாளில் அரேபியா தேசத்தார் பழைய பழக்கவழக்கங்களையே அநுசரித்து வந்தனர். புதிதாய்த் தோன்றிய முகம்மதிய மதத்தைப் பலர் எதிர்க்கலாயினர். அதிற் சேர்ந்தவைகளைப் பிடித்துக்கட்டிப் பலவிதத் துன்பத்திற்கும் ஆளாக்கினர். மனிதரைச் சிறைப்பிடித்து விற்கும் அடிமை வியாபாரம் அக்காலத்தில் நடந்து வந்தது. இவ்வாறு அடிமையானவர்களுள், முகம்மதிய மதத்தைத் தழுவிய அடிமைகள் அந்நாட்டவரால் சித்திரவதை செய்யப்பட்டனர். அவர்கள் துன்புறுவதைக் காணச் சகியாத அபு பகர், அவர்களில் பலரைப் பணம் கொடுத்து மீட்டினர். பாடுபட்டுத் தேடிய பணத்தை இவ்வாறு வாரியிறைப்பதைக் கண்ட அவருடைய தந்தையார் அவரை நோக்கி, ''மகனே! அடிமைகளை விடுவிப்பதில் பணத்தை ஏன் வீணாய்ச் செலவழிக்கிறாய்?'' என வினவினார். அதற்கு அபு பகர், ''தந்தையே! மனிதர் மனிதர்க்கு அடிமைகள் அல்லர். யாவரும் கடவுளின்

அடிமைகளே. மனிதர்க்கு அடிமைகளாய் இருப்பவரைக் கடவுளின் அடிமைகளாக்கவே நான் அவர்களை விடுவிக்கின்றேன்'' எனப் பதில் உரைத்தனர்.

மெக்கா நகரிலிருந்த அரேபியர் முகம்மதியர்களுக்கு இழைத்து வந்த துன்பங்கள் பல. அவைகளைப் பொறுக்காத முகம்மது நபி அபு பகருடனும் மற்ற சிஷ்யர்களுடனும் மெடினு நகருக்குப் போகப் புறப்பட்டார். இதையறிந்த மெக்கா நகரத்தார் அவர்களைப் பிடித்துவரப் பல ஆட்களை யனுப்பினர். முகம்மது நபியும், அபு பகரும் பயந்து, வழியிலுள்ள ஒரு குகையில் ஒளிந்து கொண்டனர். அவர்கள் அவ்வாறு ஒளிந்து கொண்டதும், அக்குகை வாயிலில் சிலந்தி ஒன்று தன் வலையை அமைத்து விட்டது. ஒரு புறுவும் அங்கே தன் கூட்டைக் கட்டியது. முகம்மது நபியையும் அபு பகரையும் தேடிவந்த ஆட்கள் அக்குகையருகே வந்தனர். குகை வாயிலில் இருந்த சிலந்தி வலையையும், புறுக் கூட்டையும் கண்ட அவர்கள், அக்குகையுள் அவர்கள் இருக்கமாட்டார்கள் என்று நிச்சயித்து வேறிடம் சென்றனர். கடவுளின் அருளினுல் அவ்விருவரும் உயிர் தப்பினர்.

மறுநாள் அவ்விருவரும் அக்குகையை விட்டு வெளியேறி, யாதொரு இடையூறுமின்றி மெடினு நகர் சேர்ந்தனர். அவ்வூர் வாசிகள் அவர்களை எதிர் கொண்டழைத்து உபசரிக்கலாயினர்; அவர்களது வரவினுல் களிப்படைந்த ஜனங்கள் ஆடினர்; புகழ்பாடினர்; அவர்களது வரவைக் கொண்டாடினர். அந்நகரிலிருந்த ஒவ்வொருவரும், அவ்விருவரையும் தங்கள் வீட்டிலேயே தங்கும்படி வேண்டினர். ஆனுல் முகம்மது நபியோ, தாம் ஏறிச் சென்ற ஒட்டகம் நிற்குமிடத்தில் தான், தங்கப்போவதாகக் கூறினுர். ஒட்டகம் அபு ஆயுப் என்பவர் வீட்டு வாசலில் நின்றது; முகம்மது நபியும் அபு பகரும் அவ் வீட்டில் உறைவாராயினர். இவையாவும் கேள்வியுற்ற மெக்கா நகர அரேபியர், ஒரு பெரிய படையுடன் மெடினு வாசிகளை எதிர்க்கலாயினர். இருதிறத்தார்க்கும் பெரும்போர் நடந்தது. இப்போரில் முகம்மது நபிக்கு ஒரு துன்பமும் நேராவண்ணம் அபு பகர் காத்து வந்தார்.

அந்த யுத்தத்தில் மெக்காப் படைகள் தோல்வியுற்றன. அவைகளிற் பலர் சிறையாயினர். இவ்வாறு சிறைப்பட்டவர்களை, முகம்மது நபியிடம் கூறி, அபு பகர் விடுதலை செய்வித்தார். அன்பினுல் ஆகாத காரியமும் உண்டோ? சிறைப்பட்டவர்களைத் தண்டியாது விடுவித்ததால் அவர்களில் பெரும்பாலோர் முகம்மதிய மதத்தைத் தழுவினர். இவ்வாறே முகம்மதியர்களுக்கும் மெக்கா நகர அரேபியர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் மூண்டன. முகம்மதியருக்குச் சில சமயம் வெற்றியும் சில சமயம் தோல்வியும் மாறிமாறி ஏற்பட்டன. முடிவில் இவர்கள் மெக்கா நகரைக் கைப்பபற்றினர். மெக்கா நகர வாசிகள் பலர் கைதிகளாயினர். அவர்களுள் அபு பகரின் தந்தையும் ஒருவர். தனயன் முகம்மது நபியின் ஆப்த நண்பராயிருந்தும் தந்தை முகம்மதிய மதத்தில் சேராமல் மெக்காவிலேயே வசித்திருந்தார். அவர் முகம்மது நபியின் முன் அழைத்துச் செல்லப்பட்டார்.

முகம்மது நபி அவரைக் கண்டதும் அபு பகரை நோக்கி, "நண்பரே! உமது வயது முதிர்ந்த தந்தையை இங்கு அழைத்து வந்தது தவறு. நாமே அவரைச் சென்று கண்டிருக்க வேண்டும்" என்று கூறினார். பெரியோரிடம் முகம்மது நபி வைத்திருந்த மரியாதைக்கு இச்சம்பவமே போதிய சான்றாம். முகம்மது நபியின் வாழ்நாளிலேயே, முகம்மதிய மதம் அரேபியா முழுவதும் பரவியது. அவருக்குப் பின் அபு பகர் குருவானார். இவர் குருவாக இரண்டரை வருடம் வரை ஜீவித்திருந்தார். அக் காலத்தில் இவர் தமக்கு விரோதமாக வந்த பல குருமார்களுடன் எதிர்வாதஞ் செய்து, அவர்களை வென்றார். பனை ஓலைகளிலும், மரப் பட்டைகளிலும், தோல் துண்டுகளிலும் எழுதப்பட்டிருந்த முகம்மது நபியின் அருள் வாக்குகளையெல்லாம் சேகரித்து ஒரு புத்தகம் ஆக்கினார். இப்புத்தகமே முகம்மதியரின் வேதமாகிய '**அல் குர் ஆன்**' ஆகும்.

பகைவரிடமும் தயை காட்டும் தன்மை வாய்ந்த அபு பகர் தமது அறுபத்து மூன்றாவது ஆண்டில் சுரத்தினால் படுக்கையில் இருக்க நேர்ந்தது. தமது வாழ்நாளின் முடிவு நெருங்கியதை யறிந்த அவர் தம் குமாரனை அழைத்து, "மகனே! இங்கிருக்கும் ஒட்டகம், சாமான்கள், உடைகள் முதலிய யாவையும் நான் இறந்த பின், **உமார்** என்ற பெரியாரிடம் கொடுத்து விடு. என் உடலை யாதொரு ஆடம்பரமுமின்றி அடக்கம் செய்" என்று கூறி உயிர் நீத்தார்.

முகம்மதிய மதம் இவ்வுலகில் தற்போதிருக்கும் நிலைமைக்குக் காரணமானவர்களில், முகம்மது நபிக்கு அடுத்தபடியா யிருந்தவர் அபு பகரே. தவிரவும் இவரது அருமுயற்சியாலேயே 'அல் குர் ஆன்' என்னும் முகம்மதிய வேதம் இவ்வுலகுக்குக் கிட்டியது. கடவுளிடமும் பகைவரிடமும் ஒருங்கே அன்பு காட்டிய இவர் புகழ் என்றும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—கண்ணியமான, தோல்வி, முதிர்ந்த, சம்பவம், ஆப்த.

II அபு பகர் சரிதையை 20 வரியில் சுருக்கி எழுது.

III அபு பகரின் மகன் உன்னிடம் அவருடைய அந்திய காலத்தைப் பற்றிச் சொல்லுகிற மாதிரியாக எழுது.

15. மனுச் சோழன்

மீது	குலம்	நோற்று	அறமுறை	தம்பதிகள்	பிரதானிகள்
பேறு	வதை	விபத்து	மன்னுயிர்	சூழ்ந்துவர	புலம்பினன்
துயர்	துள்ளி	நோன்பு	தேர்க்கால்	திடுக்குற்று	குடிகொண்டு
ஓசை	நசுங்கி	பரிகாரம்	செவியுற்ற	அநியாயம்	தலைவணங்கி
சூட்டி	வகுத்த	தவிக்கும்	உதிர்த்தது	பொருத்தம்	மேற்கொண்டு
		ஆராய்ச்சிமணி		அரசிளங்குமரன்	

சோழவள நாட்டிலே **திருவாரூர்** என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு **மனுவேந்தன்** செங்கோல் செலுத்தி வந்தான். அம்மன்னன் 'தன்னுயிர்போல் மன்னுயிர்' காத்து வந்தான்; தன் நாட்டில் வாழும் குடிகட்கெல்லாம் கண்போல் விளங்கி வந்தான். நீதி நெறி சிறிதும் தவறாதவனாய், நீதிமுறை வகுத்த **மனுவைப்**போல் சிறந்து விளங்கினன். இத்தகைய அரசனுக்குப் பல வாண்டுகள் புத்திரப்பேறு இல்லாதிருந்தது. அதனால் மன்னன் மனம் வருந்தி, பற்பல தான தருமங்கள் செய்து, பல நோன்புகள் நோற்று வந்தனன். அதன் பயனாக அவனது மனைவி ஓர் ஆண்மகவை ஈந்தனள். இறைவனது திருவருளை வியந்த தம்பதிகள் அடைந்த ஆனந்தம் அளவற்றது.

இவ்வாறு தெய்வத் திருவருளால் தோன்றிய அக்குழந்தைக்கு **வீதி விடங்கன்** என நாமஞ் சூட்டி, 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக' வளர்த்து வந்தனர். தக்க பருவம் வந்ததும் அவ்வரசிளங் குமரன் நல்லாசிரியரை யடுத்துப் பல கலைகளையும் பயில்வானாயினன். அரசர்க்குரிய சகல வித்தைகளையும் கற்றுத் தேர்ந்து, 'தந்தைக்கேற்ற தனயன் இவனே' யென யாவரும் கொண்டாடும் வண்ணம் நடந்து வந்தனன். நற்குணங்கள் பல அவனிடம் குடிகொண்டிருந்தன. இவ்வாறு வாழ்ந்து வருகையில் ஒரு நாள் வீதிவிடங்கன் தந்தையின் அனுமதி பெற்று, தியாகராசப் பெருமானை வணங்கிவரச் சென்றான். அரண்மனையினின்றும் மந்திரிகள், பிரதானிகள், சேனைவீரர்கள் முதலியோர் சூழ்ந்துவரத் தேரின் மீதேறி வீதி வழியே சென்றான். அரச குமாரனைக் கண்ட நகரத்தாரும் மகிழ்வெய்தினர்.

இங்ஙனம் அரச குமாரனது தேர் சென்று கொண்டிருக்கும்போது, 'இளங்கன்று பயமறியாது' என்றபடி ஒரு பசுங்கன்று துள்ளிக் குதித்து தேர்க்காலில் அகப்பட்டு உடல் நசுங்கி உயிரிழந்தது. இது கண்ட இளவரசன் திகைப்புற்றுத் தேரைவிட்டுக் கீழே இறங்கி, கன்றை நோக்கினன். அவ்வமயம் கன்றைப் பிரிந்த தாய்ப் பசு அங்கு ஓடிவந்து, தன் கன்றின் நிலையைக் கண்டு

அலறிக் கண்ணீர் உதிர்த்தது. இக்காட்சியைக் கண்ட இளவரசன் மனம் வருந்தி, "என்னே! இன்று யான் செய்த செயல்! இறைவனைத் தரிசிக்கப் புறப்பட்ட சமயத்தில் இவ்விடையூறு நேர்ந்ததே! அநியாயமாய் ஓர் உயிரை யழித்தேனே! என் குலச் சிறப்பு ஒழிந்ததே! இனி யான் என் செய்வேன்?" என்று புலம்பினான். பின்னர் இப்பழியை ஒழிக்க வழி தேடல் வேண்டும் என்று மனந்துணிந்து, அறமுறை யறிந்த வேதியரைக் காணச் சென்றனன்.

தன் உயிரினும் சிறந்த கன்றை யிழந்த தாய்ப் பசுவோ, தன் துயர் பொறுமல் கண்ணீருடன் மனுவேந்தனது அரண்மனை வாயிலையடைந்து, அங்கிருந்த ஆராய்ச்சி மணியின் கயிற்றைத் தன் வாயினால் இழுத்து அடித்தது.



தன் ஆட்சியில் ஒருநாளும் கேட்டறியா ஆராய்ச்சி மணியோசையைச் செவியுற்ற மனுவேந்தன், ஓடோடியும் வந்து அரண்மனை வாசலையடைந்தான். அடைந்ததும் மணியடித்த மானிடர் எவரையும் காணாது, அங்கிருந்த வாயிற்காவலரை நோக்கி, "மணியை அடித்தது யார்?" என வினவினான். காவலரும் தலை வணங்கி, "அரசே! இதோ நிற்கும் இப் பசுவே மணியை அடித்தது" என்று கூறினர். அது கேட்ட வேந்தன், வாயில்லாப் பிராணியாகிய இப் பசுவிற்குத் துன்பம் விளைத்தவர் யாவரோ? இதற்கு நேரிட்ட துன்பந்தான் யாதோ?" என்று விசாரணை செய்யப் புகுந்தனன்.

அப்போது அங்கு வந்த மந்திரிகளுள் ஒருவர், வீதியில் நடந்த விபத்தைக் கூறினர். அரசனும், 'நெருப்பில் விழுந்த புழுப்போல்' துடி துடித்தனன். 'அந்தோ! எனது குலப் பெருமைக்கே தீராப் பழி நேர்ந்து விட்டதே! புத்திரனுல் ஏற்பட்ட இப்பழியை எப்படிப் போக்குவது? இப்பசுவின் துயரத்தை எப்படித் தீர்ப்பது?" என்று கூறி மனம் வருந்தினன். அதுகேட்ட மந்திரிகள், "அரசே! சென்றதை யெண்ணி மனம் வருந்துவதால் என்ன பயன்? தரும சாஸ்திரங்களிலே பசு வதை செய்ததற்கு விதித்திருக்கும் பரிகாரத்தைச் செய்வதே முறை" என்று கூறினர். அம்மொழிகளைக்கேட்ட மன்னன், "மந்திரிகளே! நீங்கள் கூறும் நியாயம் பொருத்தமற்றது. பரிகாரம் செய்வதனுல் பழி நீங்கி விடுமோ? கன்றை யிழந்து தவிக்கும் பசுவின் துயரமும் இதனுல் தீருமோ? தன்னுலும், தன் பரிவாரங்களாலும், பகைவர்களாலும், திருடர்களாலும், வன மிருகங்களாலும் தன் குடிமக்கட்கு யாதொரு வருத்தமும் நேரா வண்ணம் காக்க வேண்டுவது அரசனது கடமையல்லவோ? உயிர்க்குயிர் வாங்குதலே மனுநீதி யாகும். ஆதலின் பசுங்கன்று, எவ்வாறு இறந்ததோ, அவ்வாறு என் மகனைக் கொன்றுலே இப்பழி தீரும்" என்று கோபத்துடன் கூறினன்.

இது கேட்ட அமைச்சர் திடுக்குற்று, "அரசே! அற்பப் பிராணியாகிய இக்கன்றின் பொருட்டு அரசகுமாரனைக் கொல்லத் துணிவது முறையாகாது" என்றனர். இதைக் கேட்ட மனுவேந்தன், "மந்திரிகளே! நீங்கள் குடிகட் கொருவிதம், கொற்றவர்க்கொருவிதம் என்றும், பிராணிகட் கொருமுறை, மானிடர்க் கொருமுறை என்றும் நியாயமின்றிக் கூறத் துணிந்தீர்கள். அற்பப் பிராணியாயினும் இதுவரை எப்பசுவும் இவ்விதம் ஆராய்ச்சி மணியை அடித் துள்ளதோ? கன்றிழந்த பசு கதறுவது போலவே நானும் என் மகனை யிழந்து தவித்தலே நியாயமாம்" என்று சினந்து கூறினன்.

மன்னனது தீர்மானத்தை யறிந்த மந்திரிமார் மேற்கொண்டு யாதொன் றும் கூறத் துணிந்திலர். பிறகு அரசன் ஒரு மந்திரியை அழைத்து, "கன்று இறந்த இடத்திலேயே, என் மகனைத் தேர்க்காலில், இட்டுக் கொல்க" என்று கட்டளையிட்டு அனுப்பினுன். அவ்வமைச்சனே, அக் கொடுஞ்செயல் புரிய மனமில்லாது, தன் உடைவாளால் தன் உயிரையே மாய்த்துக்கொண்டான். இச்செய்தி கேட்ட அரசன் மிகவும் வருந்தி, தானே தன் மகனைத் தண்டிக்கத் தேரேறிப் புறப்பட்டான். 'தன் குலத்தை விளக்க வீதிவிடங்கன் ஒரு தவப் புதல்வனே யிருக்கின்றுன்'. என்பதைச் சிறிதும் கருதாது, தரும நெறிப்படி கடமையைச் செய்வதே நீதியென மனந்துணிந்து, தன் மைந்தன் மார்பின் மேல் தேர்ச்சக்கரம் செல்லுமாறு தேரைச் செலுத்தினன்.

அரசனின் இவ்வருஞ் செயலைக் கண்ணுற்ற குடிகள் கண்ணீர் விட்டனர். அக்கணமே தியாகராசப் பெருமான் திருவருளால், உயிரிழந்த கன்றும், மந்திரியும், இளவரசனும் உயிர்பெற்றெழுந்தனர். பசுங்கன்றும், "அம்மா அம்மா!" என்று கதறிக்கொண்டு தன் தாயிடம் ஓடி நின்றது. பசுவும் கன்றைத் தழுவி நின்றது. வீதிவிடங்கனும் தன் தந்தையின் பாதம் பணிந்து நின்றான். இவ்வாறு நீதி வழுவாது நெறி முறையில் நின்ற மனுவேந்தன் புகழ் இன்றும் ஓங்கி நிற்கின்றது.

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—உதிர், புகு, ஈன்ற, அறமுறை, பரிகாரம்.

II இக்கதையை எட்டு வாக்கியத்தில் எழுது. ஒவ்வொரு வாக்கியமும் ஒரு வேற்றுமையைக் கொண்டதாக இருக்கும்படி அமை.

III இக் கதைக் குகந்த பழமொழிகள் நான்கு எழுது.

இலக்கணம்

IV வள்ளி என்ற பெயர்ச் சொல்லை எழுவாயாக வைத்துக்கொண்டு எட்டு வேற்றுமையும் அதில் பிரதிபலிக்கும்படி எட்டு வாக்கியங்களிலமை.

வினைமுற்று ஒரு வினைச் சொல்லானது வாக்கியத்தில் கண்ட கர்த்தாவின் செய்கையைக் குறிக்கும். அது கர்த்தாவுக்கு இசைந்து முடிந்த செயலைக் குறிக்கும்.

கந்தன் **வந்தான்**. வந்தான் என்பதில் கர்த்தா ஓர் ஆண்பால் என்றும், ஒருமை என்றும் காட்டி, வந்த செய்கையை முடிவாகக் கூறுகிறது. ஆகையால் வந்தான் வினைமுற்று.

V இப் பாடத்திலுள்ள வினைமுற்றுக்கள் பத்து எடுத்து எழுது.

16. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே

உறி	யாது	கொத்தி	உபாயம்	கலைமான்	மனமொத்த
வலு	மெய்	அஞ்சலி	அபாயம்	வேடுவன்	விஸ்தாரமாக
திமிர்	அவதி	தடாகம்	மித்திரன்	வேற்றிடம்	தினந்தோறும்
நட்பு	நிம்மதி	கப்பரை	சஞ்சாரம்	ஆரணியம்	ஒன்றுபட்டால்
மந்த	சுகித்து	தயாநிதி	முடிந்தது	பரோபகாரி	வார்த்தையாடி
கட்டு	அருந்தி	சேமித்து	பரதேசம்	அதிர்ஷ்டம்	ஒன்றேடொன்று
			நிர்மானுஷ்யமான		

ஒரு வனத்தில் **இலகுபதனன்** என்ற காகமும், **இரணியகன்** என்ற எலியும் ஒன்றேடொன்று மிக்க நேசமாய்ச் சுகமாக நெடுநாள் வாழ்ந்துவந்தன. எலி தன் வளையிலும், காகம் அதன் அருகிலுள்ள ஒரு மரத்திலும் வசித்தன.

அவையிரண்டும் தினந்தோறும் இரை தேடப்போகும் நேரந் தவிர, மற்ற நேரங்களில் ஒன்றோடொன்று வார்த்தையாடிக் கொண்டிருக்கும். ஒரு நாள் இலகுபதனன் இரணியகனை நோக்கி, "நண்பா! இவ்வனத்தில் எனக்குத் தகுதியான இரை கிடைக்கவில்லை. ஆதலின் இவ்வனத்தை விட்டு வேறொரு வனத்துக்குப் போக எண்ணுகிறேன். நீ யாது சொல்லுகிறாய்?" என்றது. இரணியகன், "நேசனே! சுதேசம் விட்டுப் பரதேசம் போவது ஒருவருக்கும் தகுதியன்று. நல்லது, நீ எங்குச் செல்ல உத்தேசித்திருக்கிறாய்?" என வினவியது.

அதற்குக் காகம், "இரணியகா! நீ கூறுவதும் மெய்தான். ஆயினும் சுதேசத்தில் ஆகாரம் கிடையாவிடில், பரதேசம் போய்ப் பிழைக்க வேண்டியதுதானே. தைரியசாலிகளுக்கு எது பரதேசம்? அவர்கள் எங்கே சென்றாலும், அதைத் தங்கள் தேசம் போலவே எண்ணிச் சுகித்திருப்பர். **கற்பூர கௌரம்** என்கிற தடாகத்துக்குப் போக அவாக்கொண்டிருக்கின்றேன்" என்றது. அது கேட்ட எலியரசு, "சிநேகிதா! அத்தடாகம் எங்கேயிருக்கின்றது? அதைப் பற்றியும் அதன் அருகிலுள்ளவைகளைப் பற்றியும் எனக்கு விஸ்தாரமாகக் கூறுவாயாக" என்று கேட்டது. காகமும், "அப்பொய்கை **தண்டகாரணியத்தில் நருமதை** யாற்றின் அருகில் இருக்கின்றது. அதில் வசிக்கும் **மந்தரன்** என்னும் ஆமைக்கும் எனக்கும் நெடுநாளைய நட்புண்டு. அங்கு எனக்கு மீன்களையும் சுவையுள்ள பண்டங்களையும் மந்தரன் அளிப்பான். அதைக் குறித்துத்தான் நான் அங்கே போக விரும்புகின்றேன்" என்றது.

இதைக் கேட்ட இரணியகன், "நண்பா! நீ அங்கே போக, நான் மட்டும் இங்கே இருப்பானேன்? நானும் உன்னுடன் அங்கு வந்து விடுகிறேன். உனது நண்பன் எனக்கும் நண்பனே. ஆதலால் என்னையும் அவ்விடத்திற்கு அழைத்துக் கொண்டுபோ" என்றது. காகமும் அதற்கு உடன்பட, இரண்டும் புறப்பட்டுப் பேசிக்கொண்டே கற்பூரகௌரம் போய்ச்சேர்ந்தன. அவைகள் வருவதைக் கண்ட மந்தரன் என்னும் ஆமை, அவைகளை எதிர்கொண்டழைத்து, அவ்விரண்டுக்கும் விருந்தளித்தது. அப்போது இலகுபதனன் மந்தரனை நோக்கி, "நேசனே! இரணியகன் என்னும் இந்த எலியரசு எனது மனமொத்த நண்பன்; மிகுந்த பரோபகாரி; தயாநிதி. இதனுடைய நல்லொழுக்கம் யாராலும் புகழமுடியாது. இது முன்பு **சித்திரக்கிரீவன்** என்னும் புறாவரசை அதன் கூட்டத்தோடு வலையினின்றும் விடுவித்தது. அப்போது இதனுடைய நட்பின் பெருமையைக் கண்டு நானும் இதனுடன் சிநேகம் செய்தேன்" என்றது. அது கேட்ட ஆமை களிப்படைந்து, இரணியகனுக்கு அஞ்சலி செய்து, "இரணியகா! நீ மனித சஞ்சாரமற்ற இக் கானகத்துக்கு வந்த காரணம் யாது?" என வினவியது.

அதற்கு எலி பதில் சொல்லத் தொடங்கியது. "மித்திரா! சம்பகாவதி என்னும் பட்டினத்தில் சந்நியாசிகள் மடம் ஒன்று இருக்கின்றது. அங்கு சூடாகர்ணன் என்னும் ஒரு சந்நியாசி, தினந்தோறும் தான் உண்டு மிகுந்த சோற்றை ஒரு கப்பரையில் போட்டு உறியின்மேல் வைத்துவிட்டு நித்திரை செய்வான். அவன் உறங்கிய பின் நான் உறியில் எழும்பிக் குதித்து, அச்சோற்றைத் தின்று சுகமாக வாழ்ந்துவந்தேன். ஒருநாள் வீணாகர்ணன் என்னும் மற்றொரு சந்நியாசி அங்கு வந்து அவனோடு பேசிக்கொண்டிருந்தான். அப்போது என்னை பயமுறுத்த, சூடாகர்ணன் ஒரு தடியினால் தரையில் தட்டிக்கொண்டிருந்தான். இதைப் பார்த்த வீணாகர்ணன், "என் பேச்சைக் கேளாமல் நீ என்ன செய்கிறாய்?" என்று கேட்டான். சூடாகர்ணன், "நண்பா! உன்பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் இந்த எலி என் பாத்திரத்திலுள்ள அன்னத்தை ஒவ்வொருநாளும் தின்றுவிடுகிறது. அதனால் அதை ஓட்டுகின்றேன்" என்றான்.

வீணாகர்ணன் உறியைப் பார்த்து, "அற்ப பலமுள்ள இவ்வெலி எப்படி இவ்வளவு உயரம் குதிக்கிறது? இதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டும். இது மிகுதியான தானியத்தைச் சேகரித்து வைத்திருக்கும். அதனால்தான் இதற்கு இவ்வளவு பலமும் திமிரும் இருக்கிறது" என்று கூறி என் வளையைத் தோண்டி, அதில் நான் சேமித்து வைத்திருந்த தானியம் யாவையும் எடுத்துச் சென்றான். அன்று தொடங்கி நான் இளைத்துப்போனேன். அப்பால் அந்த உறியில் ஏறி குதிக்க எனக்கு வலு இல்லாது போயிற்று. அங்கே வேறு ஆகாரமும் அகப்படாமையால் மிகவும் வருந்தி, இலகுபதனனுடன் இங்கு வந்தேன். வந்த இடத்தில் என்னிடம் மெய்யன்பு காட்டிய உனது சிநேகம் எனக்குக் கிட்டியது. இதுவும் என் அதிர்ஷ்டவசமே" என்று தன் கதையை முடித்தது. அன்று முதல் ஆமையும், காகமும், எலியும் இஷ்டமான இடத்துக்குப் போய் இரை தேடிச் சௌக்கியமாய் வாழ்ந்தன.

ஒருநாள் சித்திராங்கன் என்னும் ஒரு கலைமான், ஏதோ ஒன்றைக் கண்டு பயந்து அலறிக்கொண்டு அவ்விடத்துக்கு ஓடி வந்தது. அது ஓடி வந்த சப்தத்தைக் கேட்டுப் பயந்த ஆமை, தண்ணீரில் ஒளிந்து கொண்டது. எலி தன் வளையில் நுழைந்து கொண்டது. காகம் ஓர் உயரமான மரத்தின் உச்சியிற் பறந்து போய் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தது. வெகு நேரம்வரை யாதொன்றும் காணப்படாமையால், அம் மூன்றும் மறுபடியும் அம்மரத்தடியிற் கூடிப் பேசிக் கொண்டிருந்தன. அப்போது சித்திராங்கன் அங்கு வந்து, "என்னை ஒரு வேடுவன் துரத்தி வந்தான். நான் உங்களோடு நேசமாக இருக்கலாமென்று இங்கு வந்தேன்" என்றது. அது கேட்ட மந்தரன், "அப்பனே! இது உன் வீடு; நான் உன் சேவகன். இங்கே புல்லும் நீரும் குறைவற்றுக் கிடைக்கும். இவ்

விடத்தில் நீ சுகமாய் வாழலாம்'' என்று முகமலர்ந்து பகர்ந்தது. அதன்மேல் அந்த மானும் அவைகளோடு சிநேகமாகி, புல் மேய்ந்து, நீர் அருந்தி, ஓர் ஆலமரத்து நிழலில் வந்து படுத்தது.

அப்போது ஆமை, ''நண்பா! இந்த நிர்மானுஷ்யமான ஆரணியத்தில் வேடர்கள் வருகின்றார்களா? நீ ஏன் பயந்தாய்?'' என்று வினவியது. அதற்கு மான், ''நண்பர்களே! கலிங்க தேசத்தரசன் இங்கே வரப்போகிறான் எனக் கேள்வியுற்றேன். அவன் நாளைய தினம் இந்தக் கற்பூரகௌரத்தின் கரையில் வந்து தங்கப் போகிறான் என்று வேடுவர்கள் பேசிக் கொண்டனர். ஆதலால் இங்கே இருப்பது அபாயம். உடனே நாம் வேறு எங்கேயாவது போய்விட வேண்டும்'' என்றது. ஆமையும், காகமும், எலியும் அவ்வாறே வேற்றிடம் செல்வதென நிச்சயித்தன. அதன்படியே அவை நான்கும் புறப்பட்டன. மந்த நடையுள்ள ஆமை மிகுந்த கஷ்டத்தோடு மற்றவைகளுடன் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், வழியில் அதை ஒரு வேடன் கண்டான். கண்டதும் அவன் அதைப் பிடித்து தன் வில்லிற் கட்டிக்கொண்டு வீட்டுக்குப் போக ஆரம்பித்தான்.

நண்பனது அவதியைக் கண்ணுற்ற மானும், காகமும், எலியும் வருத்தத்துடன் வேடுவனைப் பின்தொடர்ந்து போயின. எலியரசு, ''நண்பர்களே! இவ் வேடன் காட்டைக் கடக்குமுன் ஆமையை விடுவிக்க நம்மாலான முயற்சி செய்ய

வேண்டும்'' என்றது. உடனே மற்றவை யிரண்டும், ''நீயே ஓர் உபாயம் சொல்லு. நாம் அனைவரும் சேர்ந்து முயற்சிக்கலாம்'' என்றன. உடனே எலி, ''மான் குளக்கரையில் போய், இறந்ததுபோலக் கிடக்க வேண்டும். காகம் அதன் தேகத்தின்மேல் உட்கார்ந்து அதைப் பொய்யாகக் கொத்திக் கொண்டு இருக்க வேண்டும். அப்போது வேடன் எப்படியும் ஆமையைக் கீழே வைத்துவிட்டு மானண்டை போவான். இதற்குள் நான் ஆமையின் கட்டைக் கடித்து அறுத்து விடுவேன்'' என்று தந்திரம் கூறியது.

காகமும் மானும் அவ்வாறே செய்தன. குளத்தில் தண்ணீர் அருந்தி இளைப்பாறி யிருந்த வேடுவன், இறந்ததுபோற் கிடந்த மானைக் கண்டான். கண்டதும் ஆமையைக் குளக்கரையில் வைத்துவிட்டு, கத்தியை எடுத்துக் கொண்டு மானண்டை ஓடினான். அதற்குள் எலியரசு மந்தரனது கட்டுகளைத் தறித்து விட்டது. மந்தரனும் குளத்தில் பாய்ந்து தப்பிப் பிழைத்தது. வேடுவன் அருகில் நெருங்குவதையும், ஆமை தப்பிப் பிழைத்ததையும் காகம் பறந்தோடியதிலிருந்து அறிந்த மான், திடீரென்று துள்ளிக் குதித்து ஓடிப் போயிற்று. மான் தப்பியதால் ஏமாந்த வேடுவன், 'ஆமையையாயினும் கொண்டு செல்வோம்' என எண்ணி குளக்கரைக்குத் திரும்பினான். அங்கு ஆமையைக் காணாமல், 'மரத்திற்கண்ட பழத்தை நம்பிக் கைப்பழத்தை எறிந்தவன்' போல ஏமாந்து, வருத்தத்துடன் வீடு சேர்ந்தான்.

இவ்வாறு ஒன்றுபட்டு வாழ்ந்ததால் உயிர் தப்பிய அந்நான்கு பிராணிகளும் வேறொரு காட்டுக்குச் சென்று நிம்மதியாய் வாழ்ந்து வந்தன.

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—ஒன்றுபடு, மனமொத்த, நிர்மானுஷ்யமான, உறி, வலு, அவதி.

II இக் கதையைச் சுருக்கி எழுது.

III மான் செத்தமாதிரியாகப் பாவனை செய்து ஆமையைத் தப்புவிக்க மறுத்தால் மற்றவைகள் வேறு எந்தவிதமாய் ஆமையை விடுவிக்க முயலும் என்று உன்னுடைய யோசனையை உபயோகித்து எழுது.

IV சந்தர்ப்பம் கூறு :—''நீயே ஒரு உபாயம் சொல்லு.''

V இப் பாடத்தில் வரும் ஏதாவது இரண்டு பழமொழிகளை எடுத்து ஒவ்வொன்றையும் பத்து வரிக்குக் குறையாமல் விளக்கி எழுது.

இலக்கணம்

VI அவன் **ஓடி** வந்தான் நம்மை **வணங்கிய** பையன்.

ஆமையைக் **காப்பாற்றிய** சிநேகிதர். காரியத்தைச் **செய்து** போனான்.

இவைகளில் **ஓடி**, **காப்பாற்றிய**, **வணங்கிய**, **செய்து** என்ற சொற்கள் வினைச் சொற்களே. ஆனால் இவை முடிந்த செய்கைகளைக் காட்டவில்லை. ஆகவே இவைகளை முற்றுவினை என்று

சொல்லக்கூடாது. இவைகளுக்கு **எச்ச வினைகள்** அல்லது **எச்சங்கள்** என்று பெயர். இச்சொற்கள் வேறு எந்த வார்த்தைகளைக்கொண்டு முடிகின்றன என்பதைக் கவனியுங்கள்.

ஓடி என்ற எச்சம் '**வந்தான்**' என்ற **வினைமுற்றைக்** கொண்டு முடிகிறது.

செய்து என்ற எச்சம் '**போனான்**' என்ற **வினைமுற்றைக்** கொண்டு முடிகிறது.

இந்த இரண்டு எச்சங்களும் வினைச்சொற்களைக் கொண்டு முடிவதால் இவைகளுக்கு **வினையெச்சம்** என்று பெயர்.

காப்பாற்றிய என்ற எச்சம் **'சிநேகிதர்'** என்ற பெயர்ச்சொல்லோடு முடிகிறது.

வணங்கிய என்ற எச்சம் **'பையன்'** என்ற பெயர்ச்சொல்லோடு முடிகிறது.

இந்த இரண்டு எச்சங்களும் பெயர்ச் சொற்களைக் கொண்டு முடிவதால் இவைகளுக்குப் **பெயரெச்சம்** என்று பெயர்.

17. சாவித்திரி

நீர்	கவலை	மீளாது	மயக்கம்	சுயம்வரம்	கண்ணொளி
பதி	சூலம்	விடாது	கெடுத்து	அரசுரிமை	பாசக்கயிறு
கரிய	நேரில்	வரித்து	புலப்பட	அணிகலம்	பிரிகின்றதே
தூதர்	தாழ்வு	ஆடவர்	சுவர்க்கம்	குறிப்பிட்ட	விழித்தவன்
ஊண்	கிடந்த	இயமன்	கூற்றுவன்	பர்ணசாலை	மொழிந்தான்
குமாரி	தரேன்	மைந்தர்	மறுமொழி	பணிவிடை	மேற்சென்றான்
தாங்கி	மாமன்	நாயகன்	குணவான்	ஏதாயினும்	அனுஷ்டித்தார்
			தீர்க்கசுமங்கலி		

பண்டைக் காலத்தில் நம் நாட்டிற் பல பதிவிரதா சிரோமணிகள் வாழ்ந்திருந்தனர். அவர்களுள் **சீதை, சாவித்திரி, அனுசூயை, நளாயினி** முதலியோர் முக்கியமானவர்கள். சாவித்திரியின் சரித்திரம் மிகவும் சிறந்தது. சாவித்திரி **மத்திர** தேசத்து மன்னனாகிய **அசுவபதியின்** குமாரி. அந்நாளில் அரசகுமாரிகள் சுயம்வரம் நடத்தி, தமக்கு இஷ்டமான ஆடவரை மணம் புரிந்துகொள்வர். அவ்வாறே சாவித்திரியும் மணப்பருவம் அடைந்தபொழுது, தனது தந்தையின் அநுமதி பெற்று, **சத்தியவான்** என்ற குணவானை வரித்து மணம் புரிந்து கொண்டாள்.

சத்தியவான் **துயுமத்சேன** மன்னரின் குமாரன். அம்மன்னரது பகைவர், அவரது நாட்டை ஜயித்து, அவருடைய கண்களைக் கெடுத்து காட்டிற்கு ஓட்டிவிட்டனர். கண்ணிழந்த அவர் காட்டில் தவஞ் செய்து கொண்டிருந்தார். அச்சமயம் முனிவர்களைத் தரிசிக்கும்பொருட்டு அங்கு வந்த சாவித்திரி, சத்தியவானைக் கண்டு தன் முழு மனத்தோடும் அவனை வரித்தாள். முக்காலமும் அறிந்த நாரத முனிவர், "இன்னும் ஒரு வருஷமே உயிர் வாழ்ந்திருப்பான் சத்தியவான்" என்

றும், "அவனை மணம் புரிந்து கொள்ளுவதால் நன்மை விளையாது" என்றும் சாவித்திரிக்கு எடுத்துரைத்தார். அப்போதும் சாவித்திரியின், மனம் மாறவில்லை. சத்தியவானையே மணம் புரிந்து, அக்காட்டிலேயே வசித்து, கணவன், மாமன், மாமி முதலியோர்க்குப் பணிவிடை செய்து வந்தாள்.

சில மாதங்கள் சென்றதும் சாவித்திரி நாரதர் கூறியதை நினைத்துக் கவலை கொள்ள ஆரம்பித்தாள். நாட்களைக் கணக்கிட்டுக்கொண்டே வந்தாள். குறிப்பிட்ட தினத்துக்கு மூன்று நாள் முன்னிருந்தே, தன் கணவனது மரணத்தை விலக்க ஒரு விரதம் அநுஷ்டித்தாள். அம்மூன்று தினங்களிலும் இரவு பகல் ஊண் உறக்கமின்றி, கணவனையே தெய்வமாகக் கருதித் தவம் புரிந்தாள். குறித்த நாளும் வந்தது. அன்று சத்தியவான் தங்களுக்கு வேண்டிய விறகு வெட்டிவரப் புறப்பட்டான். அதையறிந்த சாவித்திரி, மாமன் மாமியார் உத்தரவு பெற்றுக் கணவனுடன் காட்டுக்குச் சென்றாள். ஒரு நாளும் காட்டுக்கு வராத சாவித்திரி, அன்று தன்னுடன் வந்ததைக் கண்டு மகிழ்ந்தனன் சத்தியவான். வழியில் காட்டின் இயற்கை வளங்களையும் வேறு பல காட்சிகளையும் காட்டிக்கொண்டே சென்றான். குறிப்பிட்ட இடம் சேர்ந்ததும் சத்தியவான் விறகு வெட்ட ஆரம்பித்தான். சாவித்திரியும் அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு விறகு வெட்டும்போது சத்தியவானுக்கு ஒருவித மயக்கம் உண்டாயிற்று. அப்படியே சாய்ந்து கீழே விழப்போனான். அவனையே கவனித்துக் கொண்டு அருகில் நின்ற சாவித்திரி, அவன் கீழே விழாத வண்ணம் தாங்கி, அவனைத் தரையில் படுக்க வைத்தாள். சத்தியவான் தன் தலையைக் கையால் பிடித்துக்கொண்டு, "ஐயோ! தலைவலி பொறுக்க முடியவில்லையே. கண் இருட்டுகிறதே! சாவித்திரி! என் ஆவி பிரிகின்றது. இனி நீ துணையில்லாதவள் ஆகிவிடுவாய். என்னை நம்பிவந்த உன்னை தனியே விட்டுச் செல்லுகின்றேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டு மயங்கிக் கிடந்தான். அச்சமயத்திலே சாவித்திரி ஓர் அபூர்வக் காட்சியைக் கண்டாள். பெரிய கரிய உருவம் ஒன்று, கையிலே சூலமும் பாசக்கயிறும் தாங்கி அவளருகில் நின்றது.

கண்டவர் அஞ்சத்தக்க அவ்வுருவத்தைக் கண்ட சாவித்திரி அதை வணங்கி, "ஐயா! நீர் யார்? இங்கு வந்த காரணம் என்ன?" என்று வினவினாள். அதற்கு அவ்வுருவத்துடன் வந்த இயமன், "அம்மா! நான் தென் திசைத் தலைவனாகிய இயமன். ஆயுட் காலம் முடிந்தவரது ஆவியைக் கொண்டு செல்வது என் வேலை. உன் நாயகனான சத்தியவானது ஆயுட்காலம் இன்றோடு முடிந்தது. ஆகையால் நான் என் கடமையை நிறைவேற்ற இங்கு வந்தேன். சாதாரணமாக நான் என் தூதர்களையே அனுப்புவது வழக்கம். உன் கணவன் மிக்க குணசாலியாகையால்

நானே நேரில் வந்தேன். உயிரோடிருப்பவர் கண்ணுக்கு நான் புலப்படமாட்டேன். நீ பதிவிரதையாகையால் உன் கண்ணுக்குத் தோன்றினேன். இனி நீ திரும்பி வீடு சேர்வாயாக'' என்றுக் கூறிச் சத்தியவான் உயிரை எடுத்துக் கொண்டு, தென் திசை நோக்கிப் புறப்பட்டான்.

அதைக் கண்ட சாவித்திரி அவனைப் பின் தொடர்ந்து சென்றாள். சிறிது தூரம் சென்றதும் இயமன் திரும்பிப் பார்த்து, தன் பின் வரும் சாவித்திரியைக் கண்டான். கண்டதும், ''பெண்ணே! நீ ஏன் என்னைத் தொடர்ந்து வருகிறாய்?

இதுவரை உயிரோடிருப்பவர் எவரும் என்னைத் தொடர்ந்து வந்ததில்லை. இனியும் நீ என் பின் வருதல் கூடாது. உன் மனைக்குத் திரும்பிச் செல்'' என்று கூறினான். அது கேட்ட சாவித்திரி, ''தரும தேவதையே! பெண் மக்கள் தமது கணவன்மார் நிழல்போல் அவர்களது வாழ்விலும் தாழ்விலும் உடன் செல்ல வேண்டுமல்லவா? என் நாயகர் இருக்குமிடம் காடாயினும் எனக்கு அதுவே சுவர்க்கம். அவர் உயிரை நீர் கொண்டுபோகும் பொழுது எனக்கு இவ்வுலகில் என்ன வேலை?'' என்று கேட்டாள். இம் மறுமொழியைக் கேட்ட இயமன் அதிசயித்து, ''பெண்கள் நாயகமே! உனது பதிபக்தியைப் பெரிதும் பாராட்டுகிறேன். உன் கணவன் உயிரைத் தவிர வேறு ஏதாயினும் ஒரு வரம் கேள் தருகிறேன்'' என்றான்.

சாவித்திரியும், "தென் திசை மன்னரே! கற்புள்ள பெண்களுக்குக் கணவனே தெய்வம். எனது நாயகன் உயிரே யான் வேண்டுவது. தாங்களோ அதைத் தரேன் என்று கூறுகிறீர்கள். ஆதலின் மாமன் மாமியார் கண்ணொளி பெற்று, முன்போல அரசுரிமை அடைய அருள்புரிய வேண்டுகிறேன்" என்றாள். இயமனும், "அங்ஙனமே ஆகுக," என்று கூறி மேற்சென்றான். ஆனால் சாவித்திரியோ, விடாது பின் தொடர்ந்து சென்றாள். அது கண்ட கூற்றுவன், "மாதே! இன்னும் ஏன் என்னைத் தொடருகின்றாய்? முன்போல் இன்னும் ஒரு வரம் கேட்டுக்கொள்; கணவன் உயிர் மீளாது" என்று இரங்கிக் கூறினான். அது கேட்ட சாவித்திரி, "தரும தேவரே! என் தந்தைக்குப் புத்திரப் பேறு இல்லை. அவருக்கு நூறு மக்கள் அருளுமாறு வேண்டுகிறேன்" என்றாள். இயமனும், "அங்ஙனமே வரம் தந்தேன்" என்று சொல்லித் திரும்பிப் பாராமலே சென்றான்.

சாவித்திரி தான் கொண்ட கருத்தை நிறைவேற்றுவதிலேயே ஊக்கம் கொண்டவளாய் மேலும் தொடர்ந்து சென்றாள். வெகுதூரம் சென்றதும் திரும்பிப் பார்த்த இயமன் அவள் இன்னும் தொடர்வதைக் கண்டான். கண்டதும், "சாவித்திரி! இன்னும் நீ பின் தொடர்கிறாயோ? உன் கற்பின் மகிமையே மகிமை. இன்னும் ஒரு வரம் பெற்றுச் செல். உன் கணவன் உயிரைக் கேட்பதில் பயனில்லை" என்று மொழிந்தான். சாவித்திரியும், "ஐயனே! எனக்கு நூறு மைந்தர் பிறக்குமாறு அருள்புரிய வேண்டுகிறேன்" என்றாள். இயமனும் சிறிதும் யோசியாது, "இவ்வரத்தையும் கொடுத்தேன்" என்று சொல்லி மேல் நடந்தான். சாவித்திரியும் பின் தொடர்ந்தாள். "ஏன் இன்னும் வருகிறாய்?" என்று கேட்டான் இயமன். சாவித்திரி, "ஐயா! எனக்கு நூறு மைந்தர் பிறப்பர் என்று வரம்கொடுத்த பின்னும் என் கணவன் உயிரைக் கொண்டு சென்றால், அவ்வரம் பலிப்பது எப்படி?" என வினவினாள். அது கேட்ட கூற்றுவன், "கற்பின் இரத்தினமே! நீ என்னை உன் சொல்லால் வென்றாய். உன் கணவன் உயிர்பெற்று எழுவான். நீ தீர்க்கசுமங்கலியாய் வாழ்வாயாக" என்று கூறி அவளை வாழ்த்திச் சென்றான்.

சாவித்திரி உடனே திரும்பி, தன் கணவன் உடல் கிடந்த இடத்தை அடைந்தாள். அடைந்ததும் சத்தியவான் தூங்கி விழித்தவன்போல் எழுந்தான். சாவித்திரியும் சத்தியவானுடன் அவளது மாமன் மாமியார் வாழ்ந்த பர்ணசாலைக்குச் சென்றாள். அவள் பெற்ற வரங்களின் மகிமையால், அவளது மாமன் மாமியார் முன்போல் தங்கள் கண்களையும் அரசச் செல்வத்தையும் பெற்று ஆனந்தமடைந்தனர். அசுவபதி அரசனுக்கு நூறு புத்திரர் பிறந்தனர். சாவித்திரியும் சத்தியவானும் இறைவன் அருளால் சகல இன்பங்களுடனும் சுகமாய் புத்திரர்

களுடன் நெடுநாள் வாழ்ந்திருந்தனர். ஆதலின் 'கற்பே மாதற்கு ஏற்ற அணிகலம்' என்பது இக் கதையால் நன்கு விளங்கும்.

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—பணிவிடை, அநுஷ்டி, மறுமொழி, சாய், பதி.

II பெண்ணின் உத்தம லக்ஷணங்களை எடுத்துச் சொல்.

III இப் பாடத்தில் பெண்களைக் குறிப்பதற்காக வந்துள்ள பலவிதப் பெயர்களை எழுது. அவைகளுக்கான காரணங்கள் கூறு.

IV இப் பாடத்தில் வரும் மூன்று பழமொழிகள் எடுத்துப் பத்து வரிக்குக் குறையாமல் விஸ்தரி.

V நீ இயமதர்ம ராஜனாகவும், அக்கதை இப்பொழுது நடப்பதாயும் சம்பாஷணையாக எழுது.

இலக்கணம்

VI. (1) பெயரெச்சம் என்றால் என்ன? வினையெச்சம் என்றால் என்ன?

(2) பெயரெச்சத்திற்கும் வினையெச்சத்திற்கும் ஐந்தைந்து உதாரணங்கள் கூறு.

18. உண்மையின் பெருமை

(கும்மி)

உண்மையே பேசுவதின் உயர்வை விளக்கியே
ஓர் கதை சொல்லுவேன் பாலர்களே!
திண்மையாய் நீங்கள் எல்லோரும் அதைக்கொண்டு
சிறந்து விளங்குவீர் சீலர்களே! 1

சோழவள நாட்டில் வேளாளர் ஜாதியில்
சுப்பிரமணியப் பிள்ளை என்றொருவர்
வாழ்வில் வறுமையில் மக்கள் ஐவரோடும்
வாழ்ந்திருந்தார் மிகத் தாழ்ந்திருந்தார். 2

ஆண்மக்கள் மூவரும் தம்மால் இயன்ற
அளவு முயன்று பணந்தேடவே
வீண்மக்க ளல்லாமல் பெண்மக்க ளிருவரும்
வீட்டில் உழைத்தனர் ஊக்கமுடன் 3

இவ்விதம் வாழ்ந்திடும் நாளில் ஓர் நாளையில்
எங்கும் நிறைந்தவ னின்செயலால்
எவ்விதமும் பாவம் செய்யாத சுந்தரம்
என்னும் முதல்மகன் வேலைசெய்த 4

ஜவுளிகள் விற்றிடும் வணிகன் அந்த ஊர்
ஜமீன் தா ராயவர் சிலரிடம்
'ஜவுளிகள் காட்டி வியாபாரம் செய்துவா
ஜாக்கிரதை' என்றனன் சுந்தரத்தை. 5

அவ்வாறே கொண்டுபோய் நூற்றைம்பது ரூபாய்
ஆகும் விலையென ஓர் புடவை
இவ்வாறே கூறி அவர் வாங்கிடச் செய்து
ஏகினனே சுந்தரம் கடைக்கு. 6

கடைக்கு வந்தபின் மூட்டையை அவிழ்த்துக்
காட்டிப் பணம் தரும் காலையிலே
நடத்தை சிறிதும் தவறாத சுந்தரம்
நடுங்கியே இது சொல்லுகிறான். 7

"ஐயோ! என்ன சொல்வேன் நூறு ரூபாய் விலை
ஆகும் புடவையை நூற்றைம்பதாய்ப்
பொய்யாய் விலை கூறி விற்று விட்டேன் அந்தப்
புண்ணிய வானிடம் போய் வருவேன்." 8

என்றதும் வியாபாரி, "என்னடா முட்டாளே!
இப்படி வந்த பெரும் பொருளை
ஒன்றும் அறியாது கொண்டு கொடுப்பேனென்
றுளறுகிறாய் அடா பைத்தியமே!" 9

இப்படியே அவன் சொல்லியும் கேளாமல்
எழுந்து சுந்தரம் ஓடினதால்
அப்படியே அந்தப் பேராசைக் காரனும்
அவனைப் பின் தொடர்ந் தோடினனே. 10

புண்ணியவான் அந்த ஜமீன் தாரைக் கண்டு
புடவை விலையில் அதிகமதைக்
கண்ணிய மாகத் திருப்பிக் கொடுத்ததைக்
கண்டவர் ஆச்சரியப் பட்டனரே. 11

"ஐயா! என் குற்றத்தை மன்னித்து நீர் இதை
அங்கீகரிப்பீர்" என் றவனே சொல்லப்
"பையா! உனக்கே நான் தந்திடுவேன் இந்தப்
பணத்தைக் கொண்டுபோ" என்றனரே. 12

"வேண்டாம்!" என்றே பையன் வெளியில் திரும்பிட
வியாபாரி அவனைக் கைப்பிடித்தே
"வேண்டாம் எனக்கினி ஓடிவிடு" என்றே
வெருட்டி விட்டானவன் சுந்தரத்தை. 13

தந்தையிடம் சென்று தான் செய்த செய்கையும்
தன் யஜமானன் செய்கையையும்
சுந்தரம் சொல்லிடக் கேட்டவர் மகிழ்ந்து
துயரமே கொள்ளா திருந்தனரே. 14

செல்வச் சீமானந்தச் சிறுவன் சுந்தரம்
செவ்விய நடத்தை கண்டுவந்து
பல்வகையால் அவன் மேன்மை யுறும்படி
பதவியைத் தந்தவர் ஆதரித்தார். 15

பிள்ளைகளே! இவன் உண்மையைப் பேசியே
பெற்ற பெருமையைக் கண்டீர்களா!
கள்ளம் இல்லாமலே உண்மைதனைப் பேசி
கனம டைகுவீர் நீங்களுமே. 16

நா. கனகராஜ ஐயர்

19. இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

ஒத்த	பக்திரச	கிரமப்படி	அந்தரங்க	கைகூடியது	வைராக்கியம்
வடிய	சிலைகள்	தர்மசாலை	நுட்பமான	அம்மையார்	வசீகரித்தனர்
அறம்	யோகம்	இல்லறம்	கோணமல்	இசையோடு	வரைவதிலும்
மைல்	நிஷ்டை	குணசீலர்	பைத்தியம்	சாஸ்திரவாதி	தோத்திரங்கள்
வாழ்வு	சிரத்தை	பொறுப்பு	அளவளாவி	உலகோர்க்கு	வித்தியாலயம்
இனிய	விவாகம்	திருப்பணி	பிரத்யக்ஷம்	கீர்த்தனைகள்	கோயில்கொண்டு
விபரீத	வேதாந்த	பிறந்தகம்	அபிநயித்து	உணர்த்தினர்	

கங்கை நதி பாய்வதால் வளம்பெற்ற **வங்காளத்தில்** **ஹூக்ளி** ஜில்லாவில் **காமர்ப்புகூர்** என்றொரு கிராமம் உண்டு. இது **கல்கத்தா** நகரத்திற்கு மேற்கே சுமார் எண்பது மைல் தூரத்தில் உள்ளது. ஏறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன் இவ்வூரில் **க்ஷுதிராம சட்டோபாத்தியாயர்** என்ற வேதியர் வாழ்ந்திருந்தார். இவர் மிகவும் ஏழையாயிருந்தபோதிலும் குணசீலராய் இருந்தார். இவருக்குச் **சந்திரமணிதேவி** என்ற பெண்மணி மனைவியாய் வாய்த்திருந்தாள். இல்லறத்தை நல்லறமாக்கிய இவர்கட்கு இரு குமாரர்களும், ஒரு குமாரியும் இருந்தனர். பின்னர் **கயா** க்ஷேத்திரத்துக்கு யாத்திரை சென்றிருந்த காலத்தில் அங்குக் கோவில்

கொண்டிருக்கும் கதாதரர் அருள்பெற்று, ஆண் மகவு ஒன்றைப் பெற்றனர். 1836ம் ஆண்டிலே பிறந்த இத்தெய்வ குழந்தைக்கு **கதாதரன்** என நாமகரணம் செய்தனர்.

கதாதரர் குழந்தைப் பருவத்திலேயே, தமது அழகாலும் விளையாட்டுக்களாலும் எவரையும் வசீகரித்தார். களிமண்ணால் தெய்வச் சிலைகள் செய்வதிலும், சித்திரம் வரைவதிலும், பக்திரசக் கீர்த்தனைகளைப் பாடுவதிலும், வல்லவராயிருந்தார். இவரது ஏழாம் வயதில் க்ஷுதிராமர் மரணமடைந்தார். அதன் பின் கதாதரர் தம் தாயின் மனம்கோணமல் நடந்து வந்தார். அவ்வூர்த் தர்மசாலையில் வந்துதங்கும் பெரியோர்களது உபதேசங்களைக் கேட்டுவந்தார். புராண இதிகாசங்களில் கேட்டறிந்த விஷயங்களை, ஆடல் பாடல்களோடு அபிநயத்துக் காட்டி, தம்மையொத்த சிறுவர்களுக்கு இன்பமூட்டி வந்தார். பள்ளிக்கூடப் படிப்பிலே இவருக்குச் சிறிதும் சிரத்தை யில்லாமையால் அதனைக் கைவிட்டார். இவரது மூத்த சகோதரர் **ராம குமாரர்** கல்கத்தாவிலே சம்ஸ்கிருத பண்டிதராய் இருந்தார். அவர், கதாதரர் பதினேழு வயது ஆகியும், கல்விப் பயிற்சியும் உலக அனுபவமும் பெறாதது கண்டு மனம் வருந்தி, இவரைத் தம்மோடு கல்கத்தாவுக்கு அழைத்துச் சென்றார். அங்குச் சென்றதும் **தக்ஷிணேசுவரம்** என்ற புண்ணியஸ்தலத்தில் இருந்த ஆலயம்ஒன்றில் பூஜை செய்யும் திருப்பணி ராமகுமாரருக்குக் கிடைத்தது.

தம் தமையனுடன் கூடவே அக்கோவிலுக்கு அடிக்கடி சென்ற கதாதரர் பக்தி பரவசராய் அந்தரங்க பூஜை செய்து வந்தார். சில நாளில் கதாதரரே அத் திருப்பணியை ஏற்றுக் கொண்டார். தேவி மந்திரம் உபதேசம் பெற்றுக் கொண்டு பூஜை செய்யத் தொடங்கிய கதாதரர், அத்தேவியை நேரில் தரிசிக்க ஆவல் கொண்டார். இவர் தம்மை மறந்து பூஜை செய்யும் சமயங்களிலே, பல அதிசயச் செயல்கள் செய்வார். இக்காலத்திலேயே இவருக்கு உலக வாழ்க்கையில் பற்றுக் குறைந்தது. உள்ளம் உருகிக் கண்ணீர் வடியத் தேவியின் தோத்திரங்களை இசையோடு பாடி ஆனந்தங்கொள்வார். இச் சமயத்திலே இவருடைய மூத்த தமையனார் இறந்தார். அப்போதும் இவர் மனம் குடும்பப் பொறுப்பில் செல்லவில்லை. தேவி பிரத்யக்ஷமாக வில்லையே என்ற கவலையே கொண்டிருந்தார். முடிவில் ஒரு நாள் தேவியை நேரில் தரிசித்தார்.

இதன்பின் இவர் தேவியைப் பூஜை செய்யும் முறைகள் மாறின. அவை பார்ப்பவர்க்குப் பைத்தியம் பிடித்தவர் செயல்களாகவே தோன்றின. இதுகண்ட கோயிற் காவலர், தாம் கண்ட விபரீதக் காட்சிகளைக் கோவில் அதிகாரியான **மதுரநாதரி**டம் அறிவித்தனர். மதுரநாதரும் தாமே நேரில் வந்து மறைந்து நின்று பார்த்தார். பல சோதனைகளும் செய்தார். இதன் பயனாக கதாதரருடைய உண்மையான பக்தியின் பெருமையை உணர்ந்துகொண்டார். கதாதரர் விருப்பம் போல் பூஜைகள் செய்யலாம் என்று உத்தரவிட்டார் அவர்.

கதாதரர் அங்கிலையில் இருப்பதை நன்கு அறியாத இவருடைய தாயும் இரண்டாம் தமையனும் இவருக்கு விவாகம் செய்துவைக்க முயன்றனர். அவ்வாறே **ஜெயராமபட்டி**யில் வாழ்ந்த **ராமசந்திர முகர்ஜியின்** குமாரி **சாரதாதேவி**யை மணம் செய்வித்தனர். மணம் நிறைவேறியதும் கதாதரர், சாரதாதேவியைப் பிறந்தகத்திலேயே விட்டு, தக்ஷிணேசுவர ஆலயத்தில் முன்போல் பூஜை செய்து வந்தார். குடும்பப் பொறுப்பை மேற் கொள்ளாமல், தம்மை மறந்து நிஷ்டையிலும் தியானத்திலும் பொழுது போக்கினார். ஆறு வருஷங்கள் தூங்காமல் தவம் புரிந்தார். அக் கடும் தவத்தின் பயனாக, பொன்னையும் மண்ணையும் ஒன்று போல் கருதும் வைராக்கியம் அடைந்தார். அறியாமையால் எவரேனும் தமக்கு இழைக்கும் தீங்கைப் பொறுக்கும் தன்மையைப் பெற்றார்.

இக்காலத்திலே **பைரவிப் பிராம்மணி** என்ற அம்மையார் தமக்குத் தக்க சீடர் ஒருவரைத் தேடிவந்து கதாதரரைக் கண்டார். கதாதரரும் தாம் அறிந்து அனுபவித்த உயர்ந்த உண்மைகளைப் பற்றிப் பெரியோர்களிடம் அளவளாவி உண்மையை அறிய விரும்பினார். அப்போது இவருக்குக் கதாதரர் என்ற பெயர் மாறி, **இராமகிருஷ்ணர்** என்ற பெயர் வாய்த்தது. பைரவிப் பிராம்மணியாரும் இராம கிருஷ்ணரது தவத்தின் மகிமையை உணர்ந்து, பல சாஸ்திர வாதிகளுக்கும் இவர் பெருமையை நன்கு விளக்கினார். தேச சஞ்சாரம் செய்து வந்த மகான்கள் பலர்,

தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வந்து இராமகிருஷ்ணரைத் தரிசித்துச் சென்றனர். இவ்வாறு சென்றவர் இவரது பெருமையை உலகம் அறியச் செய்தனர். வேதாந்த விஷயங்களைப் பற்றிய நுட்பமான சந்தேகங்களை இனிய சொற்களால் விளக்கும் சக்தி இராமகிருஷ்ணருக்கு ஏற்பட்டது.

இக்காளில் **நருமதை** நதிக்கரையில் நாற்பது வருஷம் கடுந்தவம் புரிந்து பயன்பெற்ற **தோதாபுரி** என்ற பெரியோர் தக்ஷிணேசுவரத்துக்கு வந்தார். அங்கு ஆலய வாயலிலே அமைதியாக இருந்த ராமகிருஷ்ணரைக் கண்டார். தாம் கண்டு இன்புற்ற பேரின்ப வாழ்வை அவருக்கு உபதேசிக்க விரும்பினர். கிரமப்படி இவருக்குச் சந்நியாசம் கொடுத்து, தாம் அறிந்த உண்மைப்படி பொருளை உபதேசித்து, சமாதி நெறியை விளக்கினர். இராமகிருஷ்ணருக்கு அந்நெறி வெகு எளிதில் கைகூடியது. மூன்று நாள்வரை தம்மை மறந்து சமாதியிலிருந்த அவ்ரைத் தோதாபுரி திரும்பவும் உலகத்தைப் பார்க்கச் செய்தார். இராமகிருஷ்ணருடன் ஒரு வருஷகாலம் அன்புடன் பழகியபின் தோதாபுரி விடைபெற்று அகன்றார். அதன்பின் இராமகிருஷ்ணர் எல்லா மதங்களிலும், **உள்ள கருத்து ஒன்றே, வணங்கப்படும் தெய்வம் ஒன்றே** என்ற உண்மைகளை உலகோர்க்கு உணர்த்தினர்.

இளம் பருவத்திலே இவரை மணந்த சாரதாதேவியார் தம் கணவரையடைந்து, இவருக்குப் பணிவிடைகள் செய்துகொண்டிருந்தார். பிறகு ராமகிருஷ்ணர் காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசிக்க யாத்திரை சென்றார். திரும்பிவந்து தக்ஷிணேசுவரத்தில் யோக முறைகள் பலவற்றையும் பழகினர். இக்காலத்தில் கல்கத்தாவிலிருந்து இளைஞர் பலர் இவ்வபூர்வ சாந்நியாசியைக் காண வந்தனர். அவர்களுள் இந்திய நாட்டின் புகழை உலகெங்கும் பரவச்செய்த **விவேகானந்தரும்** ஒருவர். இராமகிருஷ்ணர் இந்தச் சிஷ்யர்களுக்குப் பொது ஜன நன்மைக்கு உழைத்தலே பெருந்தர்மம் என உபதேசித்தார். இராமகிருஷ்ணரது பெயரால் பல மடங்களும், வித்தியாலயங்களும் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன.

பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :- வசீகரி, வைராக்கியம், இயல்பு, அளவளாவி.

II இராமகிருஷ்ணர் என்ற பெயருண்டாகிய பிறகு அவருடைய ஜீவியத்தைச் சுருக்கி எழுது.

III இராமகிருஷ்ணருடைய ஜீவியம் மாறுவதற்கு அனுசரணையாக இருந்த சில சம்பவங்களை எடுத்துக்கூறு.

இலக்கணம்

IV **வினையெச்சம்.** முடிவுறாத, ஒரு வினைச்சொல் ஒரு பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம். ஒரு வினைச்சொல்லைத் தழுவி முடிந்தால் அது வினையெச்சம்.

அண்ணனைக் **கண்டு** வந்தேன்.

நேற்று **வந்து** பார்த்தேன்.

இவற்றைப் போலவே இன்னும் ஐந்து வினையெச்சங்களை இப்பாடத்திலிருந்து எடுத்து எழுது.

20. இன்மொழியே இனிமை பயக்கும்

காமர் நிறமலி தாமரை மலரைத்
திரும்பத் தண்டில் தழைக்கச் செய்வையோ?
தடியா லடித்துத் தள்ளிய பிஞ்சினை
கிளையில் ஒட்டி விளைவிப் பாயோ?
மெல்லிய இழையால் புல்லிதாய்ச் செய்த
சிலந்திக் கூட்டைச் சிதைத்தா லதனை
முன்போற் செய்தல் உன்னால் எளிதோ?
கட்டழ கமைத்த பட்டுப் பூச்சியின்
ஒடித்த சிறகை ஒட்டுவிப் பாயோ?
வாடிய திராட்சைக் கனிக்கு வர்ணம்
தேடிக் கொணர்ந்து தீட்டல் எளிதோ?
கனியைக் கொடியின் நுனியில் இணைப்பையோ?
பனித்துளி யதனைப் பூமே லமைத்து
ஒளிரச் செய்தல் எளிதோ உனக்கே?
இராஜா மலராம் ரோஜா மலரின்
கொய்த இதழ்களைப் பொருந்தச் செய்தல்
உன்னால் ஆகுமோ? முன்னால் இருந்த
மணமுண் டாமோ? குணமுண் டாமோ?
அரைத்த மாவை நிறைத்தே உமியை
நென்மணி யாக்க வன்மை உண்டோ?
பருப்பை ஓட்டினுள் திரும்பப் புகுத்தவும்
கருவை முட்டையுள் மறுபடி வைக்கவும்
தேனைக் கூட்டினுள் திரும்பப் பெய்து
மெழுகால் மூடி ஒழுகா தடைக்கவும்
முடியுமோ உன்னால்? சடுதியில் மொழிவாய்!
இவற்றைப் போலவே இன்மொழி இன்றி
வாயினால் ஒருவரை வைதுபுண் படுத்தின்
நோயினும் கொடிது நோகும் மனத்தை
ஒட்ட வைத்தல் ஒல்லா ததனால்
கெட்ட மொழிகளை விட்டொழிப் பாயே.

எஸ். முத்து ஐயங்கார்.

அப்பியாசம்—2 சட்டை தைத்தல்



21. நட்பின் மேன்மை

ஈசா	பிரம்பு	அன்றே	பதருதே	ஒருக்காலும்	துஷ்டத்தனம்
பார்	பாதை	ஆருயிர்	நானிலம்	கொண்டனே	தலையிடுகிறுய்
பிரபு	தாரணி	தலைவிதி	நிபந்தனை	பாத்திரங்கள்	சௌகரியங்கள்
புனை	மேடை	செப்பிய	கொலைஞர்	சொல்லினும்	கொலையாளிகள்
பதவி	தூக்கில்	பிற்பகல்	ஒருத்தரும்	வயதுசென்ற	ஒத்துக்கொண்டு
தயவு	உன்றன்	அன்பன்	அறைகுவீர்	கொலைக்களம்	வெளிப்படையாய்

[**மதுரையில் சந்திரசேகர பாண்டியன்** ஆண்டு வந்த காலத்தில் **மதுரை நாயகம்** என்ற ஏழை வேளாளன் ஒருவன் இருந்தான். அவனுக்கு **இரத்தினம்** என்ற ஒரு குமாரன் உண்டு. பாண்டியன் சபையில் **இராஜ நாயகம்** என்ற பிரபு ஒருவர் இருந்தார். அவர் **சோழ** நாட்டைச் சேர்ந்தவர். அவருக்குக் **கிருஷ்ணன்** என்ற ஒரு குமாரன் உண்டு. இரத்தினமும் கிருஷ்ணனும் மதுரையிலிருந்த ஒரு பள்ளிக்கூடத்திற் படித்து வந்தனர். நாளடைவில் அவர்களிருவரும் நெருங்கிய நண்பராயினர்.

ஒரு சமயம் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளெல்லோரும் பந்து விளையாடினர். கிருஷ்ணன் பந்தை வேகமாய் எறிந்தான். அது, உபாத்தியாயரது மேஜை மீதிருந்த கடிகாரத்தின் மேற்பட்டு, கடிகாரம் உடைந்துவிட்டது. இதைக்கண்ட பிள்ளைகள் பயந்து தங்கள் தங்கள் இடத்தில் உட்கார்ந்தனர். உபாத்தியாயரும் உள்ளே நுழைந்தார்.]

காட்சி—1

இடம் :—*மதுரைப் பள்ளிக்கூடம்.*

காலம் :—*பிற்பகல்.*

பாத்திரங்கள் :—*ஆசிரியர், கிருஷ்ணன், இரத்தினம், மற்றப் பிள்ளைகள்.*

[பிள்ளைகள் சப்தம் செய்யாமல் உட்கார்ந்திருந்தனர் ; உபாத்தியாயர் வருகிறுர்.]

உபாத்தியாயர்:—(*மேஜை யருகிற் சென்று கடிகாரம் உடைந்திருப்பதைக் கண்டு, கோபத்துடன்*) *அடே !*

(பாட்டு)

இராகம் - மோகனம், தாளம் ஆதி

பல்லவி

யாரடா இது செய்தவன் ?—இவ் வறைக்குள்ளே
யாரடா இது செய்தவன் ? (*யாரடா*)

அநுபல்லவி

பாரடா இப்போதே பலமாகவே அடித்துப்
பள்ளிக்கூடத்தை விட்டுத் தள்ளிவிடுவேன் நானே (*யாரடா*)

சரணம்

கோருவீர் நன்மையைக் கொண்டு நீரிப்போதே
கூறுவீர் உண்மையைக் கொஞ்ச நேரத்திலே
ஆரும் இச்சங்கதி கூருவிடில் நானே
அடிப்பேன் எல்லோரையும் துடிதுடிக்கவே தானே (யாரடா)

யாரடா இதை உடைத்தவன்? உடனே உள்ளதைச் சொல்லிவிடுங்கள். நீங்கள் ஒருவரும் கூருவிட்டால், எல்லோரையும் தண்டித்து விடுவேன். அடே! ராமா! நீயா உடைத்தாய்?

ராமன் :—இல்லை ஐயா!

[உபாத்தியாயர் ஒவ்வொருவராகக் கேட்கிருர். எல்லோரும் 'இல்லை' என்கின்றனர்.]

உபாத் :—அடே! கிருஷ்ணு! நீயா உடைத்தாய்?

கிருஷ்ணன் :—(பயந்து தயங்கி) நா-ன்-ன் உடைக்க-க வில்லை.

உபாத் :—சரி! அப்படியானல் இரத்தினம் தான் உடைத்திருக்கவேண்டும். அடே இரத்தினம்! நீ என்ன சொல்லுகிருய்?

இரத் :—(தனக்குள்) ஐயோ! இதென்ன! எல்லோரும் இல்லை யென்கிருர்கள். கிருஷ்ணனும் இல்லை என்று சொல்லிவிட்டானே. இனிமேல் நானும் இல்லை என்று சொன்னுல் உண்மை எப்படியும் வெளிவந்துவிடும். பிறகு உபாத்தியாயர் கிருஷ்ணனை அதிகமாய்த் தண்டிப்பார். ஆகையால் நானே உடைத்ததாக ஒப்புக்கொண்டு என் நேசனைக் காப்பாற்றுகிறேன். ஒப்புக் கொண்டால் உபாத்தியாயர் அதிகமாகத் தண்டிக்கவும் மாட்டார்.

உபாத் :—என்னடா யோசிக்கிருய்?

இரத் :—(பணிவுடன்)

ஆனந்தக்களிப்பு

(நந்தவனத்திலோராண்டி—என்ற சந்தம்)

ஐயா! இதை நானே செய்தேன்—என்னை
ஆதரித்திடுவீரே அறியாமற் செய்தேன் (ஐயா)
செய்த தப்பிதத்தினை மறந்து—இந்தச்
சிறியேனை மன்னித்துச் சேர்ப்பீரே சிறந்து. (ஐயா)

ஐயா! இதை உடைத்தவன் நானே. நான் அறியாமற் செய்த இப் பிழையை மன்னிக்கவேண்டுகிறேன். இதற்காக என்னைப் பள்ளிகூடத்தை விட்டுத் தள்ளிவிடவேண்டாம்.

[உபாத்தியாயரை வணங்குகிருன்.]

உபாத் :—உண்மையாய் நீயா உடைத்தாய் ?

இரத் :—ஆமாம் ! ஐயா !

உபாத் :—(பிரம்பைக் கையில் எடுத்துக்கொண்டு) அப்படியானுல் உன் கையை நீட்டு.

[இரத்தினம் கையை நீட்டுகிருன். அவன் உண்மையைக் கூறியதாக எண்ணிய உபாத்தியாயர் அவனை மெதுவாக அடித்துவிட்டு,]

சரி ! போ ! இனிமேல் இம்மாதிரி துஷ்டத்தனம் செய்யாதே. நீ ஒழுங்கான பையன். ஆகையால் உன்னைப் பள்ளிக்கூடத்தை விட்டுத் தள்ளவில்லை.

[உபாத்தியாயர் போகிருர். பிள்ளைகள் இரத்தினத்தைப் புகழ்ந்தும் கிருஷ்ணனை இகழ்ந்தும் சொல்லுகிருர்கள்.]

கிருஷ் :—(கண்ணீர் விட்டுக்கொண்டே) இரத்தினம் !—ஐயோ !—என் குற்றத்தை ஒப்புக்கொண்டு, நான் பெறவேண்டிய அடிகளை நீ பெற்ருயே ! உன் கை மிகவும் வலிக்குமே ! பயத்தினுல் நான் பொய் சொல்லிவிட்டேன். நீ குற்றத்தை ஒப்புக்கொண்டு என்னைக் காப்பாற்ருவிட்டால், உபாத்தியாயர் எப்படியும் உண்மையைக் கண்டுபிடித்து, என்னைக் கடுமையாக தண்டித்திருப்பார். நீ செய்த இந்த அரிய உபகாரத்தை நான் ஒருபோதும் மறக்கவே மாட்டேன்.

(மற்றுப் பற்றெனக் கின்றிநின்றிருப்பாதமே—என்ற சந்தம்)

குற்றம் நான் செய்ய ஒப்புக்கொண்டு நீ
கொண்டனை கடுந் தண்டனை
உற்றதோர் நண்பன் உன்னைப் போலவிவ்
வுலகிலே இல்லை கண்டனே.

இரத் :— சற்றுமே எனக் கேற்காத வார்த்தை
சாற்றுவாய் என்னை ஏற்றுவாய்
பற்றுள நண்பர் யாருமே செய்வர்
பாரில் என்னையேன் போற்றுவாய் ?

நண்பா ! ஒரு சிநேகிதன் செய்யவேண்டிய கடமையையே நான் செய்தேன். வீணுக ஏன் என்னைப் புகழ்கிருய் ?

கிருஷ் :—நீ என்ன சொன்னபோதிலும் இந்த உபகாரத்தை நான் மறக்கவே மாட்டேன். வா வீட்டுக்குப் போகலாம்.

[இருவரும் போகின்றனர்.]

[இவ் விஷயம் நடந்து பதினைந்து வருடங்கள் ஆயின. இரத்தினமும் கிருஷ்ணனும் பெரியவர்களாய்விட்டனர். இரத்தினம் பாண்டியனது சேனையில் போர்வீரனுய் அமர்ந்தான்.

கிருஷ்ணனுடைய தந்தை சோழநாட்டுக்குப் போய்விட்டார். அதனால் கிருஷ்ணன் தன் தந்தையுடனேயே வசித்துவந்தான். இப்படியிருக்கும் சமயம் சோழன் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்தான். பாண்டியனும் அவனது வீரர்களும் எதிர்த்து யுத்தஞ்செய்தனர். கடைசியில் பாண்டியன் தோற்று யுத்தத்தில் மடிந்தான். அவனது சேனை வீரரிற் பலர் சிறையாயினர். சோழன்சிறைப்பட்ட வீரர்களைத் தனது தலைநகருக்குக் கொண்டுபோனான். அவர்களில் இரத்தினமும் ஒருவன்.]

காட்சி—2

இடம் :—*தஞ்சையில் அரசன் சபை.*

காலம் :—*பிற்பகல்.*

பாத்திரங்கள் :—*சோழன், மந்திரி, கிருஷ்ணன், பிரபுக்கள், சேவகர் முதலாயினோர்.*

சோழன் :—மந்திரி! நாம் அன்று சிறைப்படுத்திய பாண்டிய வீரர்களைக்கொண்டு வரச் சொல்லும்.

மந்திரி :—இதோ மகாராஜ்! (சேவகனைப் பார்த்து) அடே! சேவகா! நீ சிறைச் சாலைக்குச் சென்று, பாண்டியச் சிறையாளரைக் கொண்டுவரச்சொல்.

சேவகன் :—உத்தரவு! மகாராஜ்! [போகிறான்.]

சோழன் :—மந்திரி! அவர்களுக்கெல்லாம் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். என்ன சொல்லுகிறீர்?

மந் :—அரசே! அவர்கள் தங்கள் அரசனுக்காகச் சண்டை செய்தனர். ஆகையால் அவர்களுடைய வீரத்தையும் ராஜபக்தியையும் மெச்சி விடுதலை செய்வதே நல்லது.

சோழன் :—மந்திரி! நீர் சொல்வது சரிதான். ஆயினும் நமது படைவீரரில் அநேகரைக் கொன்ற, அந்த ஒரு வீரனை மாத்திரம் தூக்கிலிடவேண்டும்.

[வீரர்கள் பாண்டியன் சிறையாளரைக் கொண்டுவருகின்றனர்]

வீரர்களே! உங்களது வீரத்தையும் ராஜபக்தியையும் மெச்சி உங்களை விடுதலை செய்திருக்கிறோம். ஊர்போய்ச் சேருங்கள். ஆனால் (இரத்தினத்தை நோக்கி) எனது வீரரில் அநேகரைக் கொன்றதற்காக, உனக்கு மாத்திரம் தூக்குத் தண்டனை விதித்திருக்கிறோம். வருகிற ஆடிமாதம் பத்தாவது நாளில் மாலை நான்கு மணிக்கு நீ தூக்கிலிடப்படுவாய்.

இரத் :—அரசே! எனது அரசருக்காக நான் உயிரைக் கொடுக்கவும் தயார். ஆனால் தாங்கள் ஒரு வேண்டுகோளுக்குத் தயவு செய்யவேண்டும்.

சோழன் :—என்ன வேண்டுகோள்?

இரத் :—மதுரை நகரில் இருக்கும், எனது வயது சென்ற தாய் தந்தையரைப் பார்த்துவர, உத்தரவளிக்க வேண்டுகிறேன். அவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து தண்டனையை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

சோழன் :—ஒருக்காலும் முடியாது. மெதுவாகத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிருயா? உனக்குப் பதில் யாராவது பிணையாக இருந்தால் உன்னை அனுப்புவேன். குறித்த தினத்தில் நீ வராவிடில் அவனைத் தூக்கிலிடுவேன்.

இரத் :—ஐயோ; அப்படியானல் நான் என் பெற்றோரைக் காண நினைக்கவும் முடியாது. ஈசா! என்ன செய்வேன்!

[கண்ணீர் விடுகிருன்.]

கிருஷ் :—(எழுந்து) அரசே!

(**கைசே கடாரி மோரியா** என்ற இந்துஸ்தான் மெட்டு)

பல்லவி

தந்தேன் பிணையே வேந்தனே—இந்தத்
தாரணியி லெனது நண்பனுக் காகவே (தந்)

சரணம்

சொந்த நாடு சென்று தாய் தந்தையரைக் கண்டு
துரிதமுடனே இங்கு திரும்பி வருவானென்று
இந்த வேளை சொன்னேன் அந்த நாள் வரைநான்
இங்குச் சிறையிருப்பேன் என் நண்பனுக்காகத் (தந்)

என் நண்பன் இரத்தினம் சொன்னசொல் தவருன். அவனுக்குப் பதில் நான் இங்கு பிணையாக இருக்கிறேன். அவன் வரும்வரை சிறை வாசம் செய்யத் தயார். ஆகையால் தாங்கள் பயமில்லாமல் அவனை மதுரைக்கு அனுப்பலாம்.

சோழன் :—கிருஷ்ணு! நீயா இவனுக்குப் பிணை நிற்கிருய்? பெரிய பிரபுவின் குமாரனுன உனக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்? நீ ஏன் இதில் தலையிடுகிருய்?

கிருஷ் :—அரசே! இரத்தினம் எனது அருமை நேசன். அவனுடைய குணத்தை நான் நன்கறிவேன். அவனுக்கு இந்த உதவியாவது செய்யாவிட்டால், நான் இருந்தென்ன பயன்?

இரத் :—நண்பா! எனக்காக நீ ஏன் சிறை சென்று கஷ்டப்படவேண்டும்? என் தலைவிதியை நான் அனுபவித்தே தீரவேண்டும். ஆகையால் நீ உன் வழியே செல்.

சோழன் :—கிருஷ்ணு! இப்பொழுதே கூறுகிறேன். உன் உயிரை இழக்க நேரிடும். பிறகு யார் சொல்லினும் நான் கேட்கமாட்டேன். வருகிற ஆடி மாதம் பத்தாம் நாள் மாலை நான்கு மணிக்குத் தூக்கிலிடப்பட்டு இறக்க

வேண்டியவன் இரத்தனம். ஆகையால் இக் காரியத்தை நன்ருக யோசித்துச் செய், பதருதே.

கிருஷ் :—அரசே! என் நண்பனுக்காக என் உயிரையும் இழக்கச் சம்மதந்தான். எப்படியாவது அவனது வேண்டுகோளை நிறைவேற்றினுல் போதும்.

சோழன் :—சரி, உன்னிஷ்டம். குறித்த தினத்தில் சரியான நேரத்தில் அவன் வராவிட்டால் உன்னைத் தூக்கிலிடுவேன்.

கிருஷ் :—சந்தோஷம்!—இரத்தினம்! இனிமேல் மதுரை சென்று உன் தாய் தந்தையரைக் காணலாம். உடனே புறப்படு.

இரத் :—ஐயோ! இந்த நாட்டில் எனக்கு உதவி செய்ய யாரும் இல்லையென நினைத்தேன். சிறிதும் தயங்காமல் எனக்கு உதவி செய்ய முன் வந்தாயே இவ்வுதவியை நான் எப்படி மறப்பேன்.

[கிருஷ்ணனைத் தழுவிக் கண்ணீர் விடுகிறுன்.]

நண்பா வயது சென்ற எனது தாய் தந்தையரைப் பார்த்துவிட்டு, உடனே திரும்பி விடுகிறேன். பயப்படாதே.

[மறுபடியும் கிருஷ்ணனைத் தழுவுகிறுன்.]

சோழன் :—ஏ! வீரர்களே! (கிருஷ்ணனைக் காட்டி) இவனைக் கொண்டுபோய்ச் சிறையிலடைத்து வையுங்கள்.

வீரர் :—உத்தரவு மகாராஜ்!

[வீரர்கள் கிருஷ்ணனைக் கைப்பற்றுகிறுர்கள்.]

கிருஷ் :—(போகும்போதே) நண்பா! நீ சிறிதும் தயங்காதே. கடைசி நாள்வரை இருந்து, உன் பெற்ருேரைத் தேற்று. நான் வருகிறேன்.

[போகின்றனர்.]

இரத் :—ஈசா! நீயே என் நேசனைக் காக்கவேண்டும்.

[போகிறுன்.]

காட்சி—3.

இடம் :—கொலைக்களம்.

காலம் :—பிற்பகல்.

பாத்திரங்கள் :—சோழன், மந்திரி, கிருஷ்ணன், கொலைஞர், சேவகர்.

சோழன் :—கிருஷ்ணு! நான் அன்றே சொன்னேனே கேட்டனையா, பார்! இப்பொழுது குறித்த நாழிகைக்கு இன்னும் சிறிது நேரமே இருக்கிறது. இரத்தினம் வரமாட்டான். அவனுக்குப் பதில் நீ வீணே இறக்கப் போகிருய்.

கிருஷ் :—அரசே! ஏன் வீண் வார்த்தை? என் நண்பனுக்குப் பதில், இப்பொழுதே என்னைத் தூக்கிலிடலாம். அவனுக்காக என் உயிரைக் கொடுக்கவே ஆசைப்படுகிறேன். தங்களை மிகவும் வேண்டுகிறேன். உடனே என்னைத் தூக்கிலிடுங்கள்.

சோழன் :—அவசரப்படாதே. இன்னும் நேரம் இருக்கின்றது. அதுவரை பொறுப்போம்.

மந் :—மகராஜ்! இரத்தினம் அப்படி வராமல் இருக்கமாட்டான். என்ன காரணமோ தெரியவில்லை.

சோழன் :—(ஏளனமாய்) என்ன காரணம்-தப்பித்துக்கொள்ளுங் காரணந்தான்.

கிருஷ் :—அரசே! என் நண்பனைப் பற்றித் தாங்கள் கூறுவது சரியல்ல. அவனுக்குப் பதில் நான் இருக்கும்போது, அவனை இகழ்வானேன்?

சோழன் :—சரி குறித்த நேரம் வந்துவிட்டது. மந்திரி! எல்லாம் தயாராய் இருக்கிறதா?

மந் :—மகராஜ்! எல்லாம் தயாராகவே இருக்கிறது. இருந்தபோதிலும் ஒரு நாழிகை பொறுத்துப் பார்க்கலாம்.

சோழன் :—சரி! அப்படியே செய்வோம்.

கிருஷ் :—அரசே! பொறுக்கவேண்டியதே இல்லை. நிபந்தனைப்படி என்னை உடனே தூக்கிலிடுங்கள்.

சோழன் :—ஸ்! சிறிது பேசாமலிரு.

மந் :—சேவகா! பாதையில் யாராவது வருகிறார்களா என்று பார்த்து வா.

[சேவகன் போய்ப்பார்த்துத் திரும்பிவருகிறான்.]

சேவ :—மகராஜ்! ஒருத்தரும் வரல்லிங்க.

சோழன் :—சரி! காரியம் நடக்கட்டும். கிருஷ்ணன் தலைவிதி யிது.

மந் :—ஐயோ! இனி என்ன செய்வது?—கிருஷ்ணா! கடவுளை வேண்டிக்கொள்.

கிருஷ் —சந்தோஷம்!—(முழந்தாளிட்டுப் பாடுகிறான்.)

“சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலினிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.”

ஈசா! என் நண்பனுக்காக உயிரை அளிக்கச் சமயம் வாய்த்ததைப் பற்றிச் சந்தோஷம் அடைகின்றேன்.

(எழுந்து தூக்குமேடையிலேறி)

கொலைஞர்களே! உங்கள் வேலையை நடத்துங்கள்.

[கொலையாளிகளில் ஒருவன் கயிற்றைக் கிருஷ்ணன் கழுத்தி லிடுகிறான். அப்போது "நிறுத்துங்கள்" என்று சப்தம் கேட்கிறது. இரத்தினம் வேகமாக ஓடிவருகிறான்.]

இரத் :—நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!! இதோ நான் வந்துவிட்டேன்.

[பாய்ந்து மேடைமீது தாவி, கிருஷ்ணனைக் கட்டிக்கொள்ளு கிறான். இருவரும் மூர்ச்சையாகின்றனர்.]

சோழன்.:—ஆகா! இதென்ன மந்திரி! உடனே இவர்களது மூர்ச்சையைத் தெளிவியும்.

[சேவகன் தண்ணீர் தெளிக்க இருவரும் எழுந்திருக்கின்றனர்.]

இரத்:—(கிருஷ்ணனைக் கட்டிக்கொண்டு) ஓ! நண்பா! நான் சிறிது தாமதித்து வந்தால் நீ இறந்திருப்பாயே.

[கண்ணீர் விடுகிறான்.]

கிருஷ்:—தாமதித்து வந்தால்தான் என்ன நஷ்டம்?

இரத்:—நண்பா! என்ன இப்படிச் சொல்லுகிறாய்?—என்னுடைய விதியைக் கேட்டதும், என் தந்தை மூர்ச்சையாய் விழுந்தார். நேற்றுத்தான் அவருக்குத் தெளிவு ஏற்பட்டது. உடனே உத்தரவு பெற்றுக்கொண்டு ஓடோடியும் வந்தேன். நண்பா! உன்னை மறக்கமாட்டேன்—(சோழனை நோக்கி) அரசே! இதோ! தண்டனையை ஏற்கத் தயாராய் நான் வந்து விட்டேன். இனி என் நண்பனை விடுவித்து என்னைத் தூக்கிலிடுங்கள்.

கிருஷ்:—நண்பா! என்ன சொன்னாய்?—ஒருக்காலும் இல்லை. குறித்த நேரத்தில் நீ வராததால், அரசர் கட்டளைப்படி தூக்கிலிடப்பட வேண்டியவன் நானே. நீயல்ல. இது நிச்சயம்.

இரத்:—நண்பா! (பாடுகிறான்)

தப்பிதம் செய்தோரே தண்டனை யடைகுவார்
 தாரணி மீதினிலே
ஒப்பிடவே மாட்டார் உன்றன் வாய்மொழி
 ஒருவருமே அறிவாய்.

தப்பிதம் செய்தவனாகிய நானே தண்டனை யடையவேண்டும். அப்படி யிருக்க உன்னை ஒருவரும் தூக்கிலிடமாட்டார்கள்.

கிருஷ்:—அப்படியா!

அறிவேன் யாவுமே அரசரும் அறிவார்
 ஆதலால் தண்டனையை
நெறிமுறை உண்மை நியாயப்படி யடைவேன்
 நீ சென்றிடுவாயே!

இரத்:— செல்லவா இங்கே சீக்கிரம் வந்தேன் நான்
செல்லேன் உயிருடனே.

கிருஷ்:—அல்ல அல்ல என் ஆருயிர் அளிப்பேன் என்
அன்பனைக் காத்திடவே.

இரத்:—(சோழனை நோக்கி)

அரசே! தண்டனை அடைவது யாரென
அறைகுவீ ரிப்போதே
அருமை நேசன்தன் ஆருயிர் இழத்தல்
அநியாயம் அநியாயம்.

கிருஷ்:—(சோழனை நோக்கி)

குறித்த நேரம் தவறிக் கொண்டிங்கு வந்ததால்
கொள்வேன் தண்டனையான்
சிறைபுகும்போது நீர் செப்பிய வார்த்தையை
நிறைவேற்றிடு வீரே.

அரசே! குறித்த நேரத்திற்குள் வந்திருந்தால், தண்டனை அடைய வேண்டியது இரத்தினமே. ஆனால் நேரம் தவறி வந்ததால், இப்போது நியாயப்படி தண்டிக்க வேண்டியது என்னை. நான் சிறை சென்ற சமயத்தில் தாங்கள் கூறியபடி நிறைவேற்றுங்கள்.

இரத்:—அரசே! என்ன சொன்னபோதிலும் குற்றம் செய்தவர்களே தண்டனையடையவேண்டும். ஆகையால் என்னையே தூக்கிலிடவேண்டும்.

சோழன்:—(கண்ணீர் விட்டுத் தனக்குள்) ஆகா! உலகில் நண்பர்கள் இருந்தால் இவர்களைப்போல் அல்லவா இருக்கவேண்டும். இவர்களில் யாரைத் தண்டித்தாலும், என்னைப் பாவமே சூழும். ஆகையால் இவர்களை மன்னித்து, உயர்ந்த பதவியில் வைப்பதே எனது முக்கிய கடமையாகும். (வெளிப்படையாய்) நண்பர்களே! (பாடுகிறான்)

[இராகம்—சுருட்டி—தாளம்—ஆதி]

பல்லவி

நானே மன்னித்தேன் உங்களை—நானிலம் போற்ற
நானே மன்னித்தேன் உங்களை.

சரணம்

நானே உங்களைப்போல நல்ல நண்பர்கள் காணேன்
தானே உமைத் தண்டிக்கத்தக்க கன்னெஞ்ச னல்லேன்
உலகம் புகழும் உம்மை உயர்பதவியில் வைப்பேன்
பலநாளும் சிறப்புடன் பாரினிலே வாழ்வீர். (நானே)

(இருவரையும் தழுவிக்கொண்டு) உங்களைப்போல் உண்மையான நண்பர்களை நான் எங்கும் கண்டதில்லை. இன்று முதல் நீங்கள் எனக்கும் நண்பர்களே. எனது ராஜ்யத்திலே நீங்களிருவரும் உயர்பதவி ஏற்று, என்றும் பிரியாத நண்பர்களாய் வாழ்ந்துவரவேண்டும். நான் செய்த கொடுமைகளை யெல்லாம் மறந்துவிடுங்கள்.

கிருஷ் :—அரசே! தாங்களென்ன செய்தீர்கள்? சட்டப்படி விஷயம் நடந்த...... ....நண்பா! என்ன சொல்லுகிறாய்?

இரத் :—எல்லாம் இறைவன் செயல்.

சோழன் :—நான் கூறியதைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

இரத் :—தாய் தந்தையரைக் கவனித்த பின்தான் மற்றவை.

சோழன் :—சரி! அப்படியே செய்.

கிருஷ் :—இரத்தினம்! நானும் உன்னுடன் மதுரை வருகிறேன். உன் தாய் தந்தையரையும் அழைத்துக்கொண்டு இங்கு வருவோம்.

இரத் :—அப்படியே செய்வோம்.

சோழன் :—மந்திரி! இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்வாய்.

மந்திரி :—உத்தரவு.

[கொலையாளிகள் தவிர யாவரும் போகின்றனர்]

முதல் கொலையாளி :—என்னடாயிது? நம்ம போட்ட கயிறு தப்பிடுச்சே.

இரண்டாமவன் :—போடா! போடா! முன்னே மார்க்கண்டம் மேலே எமம் போட்ட கயிறே தப்பிடுச்சே—நமக்கென்னடா? இன்னக்கி நரி மொவத்துலே முளிச்சோம். அதனாலேதான் பாவஞ் செய்யாமே தப்பிச்சோம். வாடா போகலாம். எல்லாம் அவஞ் செய்றதுடா.

மு. கொ :—ஆமாங்கறேன்.

[போகிறார்கள்]

அப்பியாசம்—3. நிழல் படப்பழக்கம்



22. வாக்குண்டாம்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மே லெழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். 2

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 4

உற்றவிடத்தில் உயிர் வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 5

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுமாம் குணம். 6

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று. 7

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் தீது. 8

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 9

பண்டு முளைப்பது அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல். 10

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 11

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். 12

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 13

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். 14

அடக்கம் உடையார் அறிவிலர்என் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உருமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. 15

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. 16

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னுகும்—சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னுகும் என்னுகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால். 17

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானுழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்
விதியின் பயனே பயன். 18

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு. 19

எழுதியவா றேமென் றிருமட நெஞ்சே
கருதியவா றேமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை. 20

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். 21

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். 22

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 23

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாம் சிறப்பு. 24

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்குக் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். 25

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா(து) ஆதலால்—தம்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று. 26

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவு முயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போது அவளோடும் ஆகும் அவள்பிரிந்து
போம்போது அவளோடும் போம். 27

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். 28

23. நல்வழி

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 1

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே—இடுங்கடுக
உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு. 3

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லாற்—கண்ணிலான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு. 4

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 5

உள்ள தொழிய வொருவர்க் கொருவர் சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டும் கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு. 6

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம். 7

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்லகுடிப் பிறந்தார் நல்கூர்ந்தா ராளுலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 8

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 9

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னே வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. 10

24. விவேக சிந்தாமணி

ஆபத்துக் குதவாப் பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன் குருமொழி கேளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயன் இல்லை ஏழும் தானே. 1

குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினில் அடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சட்பூசி மிகுமணம் செய்தா லும்தான்
அக்குலம் வேற தாமோ அதனிடம் புனுகுண் டாமோ
குக்கலே குக்கல் அல்லால் குலந்தனில் பெரிய தாமோ. 2

ஆலிலை பூவும் காயும் அளிதரு பழமும் உண்டேல்
சாலவே பட்சி எல்லாம் தம்குடி என்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திருப்பார் கோடி கோடி
ஆலிலை ஆதி போனல் அங்குவந் திருப்பார் உண்டோ. 3

கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுதம் உண்ணும்
விற்பன விவேகம் உள்ள வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வார்
இப்புவி தன்னில் கிள்ளை இலவுகாத் ததனைப் போல
அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ தரிதரி தாகும் அம்மா. 4

சங்குவெண் டாம ரைக்குத் தந்தைதாய் இரவி தண்ணீர்
அங்கதைக் கொய்து விட்டால் அழுகச்செய் தந்நீர் கொல்லும்.
துங்கவன் கரையில் போட்டால் சூரியன் காய்ந்து கொல்வான்
தங்களின் நிலைமை கெட்டால் இப்படித் தயங்கு வாரே. 5

திருப்பதி மிதியாப் பாதம் சிவன் அடி வணங்காச் சென்னி
இரப்பவர் கியாக் கைகள் இனிய சொல் கேளாக் காது
புரப்பவர் தங்கள் கண்ணீர் பொழிதரச் சாகாத் தேகம்
இருப்பினும் பயன்என் காட்டில் எரிப்பினும் இல்லை தானே. 6

வாழ்வது வந்த போது மனம்தனில் மகிழ வேண்டாம்
தாழ்வது வந்த தானல் தளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்த தானல் ஒருவரால் விலக்கப் போமோ
ஏழையாய் இருந்தோர் பல்லக் கேறுதல் கண்டி லீரோ. 7

உஷா

பதிப்புரிமை:

பதிப்பாளர்
வி. சூ. சுவாமிநாதன்
மதுரை :: திருநெல்வேலி

SWADESA VASAGAM BOOK V : : PRICE 0—9—0